விலை : 20.00
பக்கங்கள் :பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆடி 16 ஞாயிற்றுக்கிழமை (31.07.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 225

## போர்க்குற்ற ஆயுதங்களை அழிக்கவே
# சாலாவ இராணுவ முகாம் குண்டுவெடிப்பு நாடகம்!
## நபரொருவர் பரபரப்புத் தகவல்

(யாழ்ப்பாணம்)

சாலாவ இராணுவ முகாம் ஆயுத கிடங்கில் ஏற்பட்ட குண்டுவெடிப்பு தற்செயலானதொன்றல்ல. அரசாங்கத்தினால் திட்டமிட்டே அந்த குண்டுவெடிப்பு நிகழ்த்தப்பட்டது. முள்ளிவாய்க்காலில் பயன்படுத்தப்பட்ட சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் அதற்கான ஆவணங்கள் உள்ளிட்ட அனைத்துமே அங்குதான் களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்தன. மேற்படி போர்க்குற்ற ஆதாரங்களை அழிப்பதற்கே இந்த குண்டு வெடிப்பு நாடகம் நடத்தப்பட்டுள்ளது என பரபரப்பு தகவலொன்றை போரினால் பாதிக்கப்பட்ட ஒருவர், நல்லிணக்க பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணியிடம் தெரிவித்துள்ளார்.

15 ஆம் பக்கம் பார்க்க....


கோப்புப் படம்

## மூன்றாம் நாளாக பாதயாத்திரை

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராகவும் ஆட்சியை மீளக் கைப்பற்றும் நோக்கிலும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின மூன்றாம் நாள் பாதயாத்திரை நேற்றுக் காலை ஆரம்பமாகியது.

மேலும் தனியாயவிலிருந்து மூன்றாம் நாளுக்கான பாதயாத்திரை ஆரம்பமாகியவேளை ஆரம்ப நிகழ்வுகளில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார். தொடர்ந்து நெலும் தனியாயவிலிருந்து ஆரம்பித்த பாத

15 ஆம் பக்கம் பார்க்க....

## குமாரபுரம் படுகொலை மீள விசாரிக்குமாறு மக்கள் கோரிக்கை

(கொழும்பு)

1996ஆம் ஆண்டு மூதூர் - குமாரபுரத்தில் 26 பேர் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பிலான வழக்கை மீண்டும் விசாரிக்கும் வகையில் சட்டமா அதிபர் ஊடாக மேன்முறையீடு செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1996ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி திருகோணமலை - குமாரபுரத்தில் 26 தமிழர்

15 ஆம் பக்கம் பார்க்க....

## பாதயாத்திரையால் பாதுகாப்பு தீவிரம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான கூட்டு எதிரணியின் பாதயாத்திரையை முன்னிட்டு கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கண்டியின் புறநகர் பகுதியான கெட்டம்பேயிலிருந்து கடந்த 28ஆம் திகதி ஆரம்பமான கூட்டு எதிரணியின் பாதயாத்திரை நாளை ஓகஸ்ட்

15 ஆம் பக்கம் பார்க்க....

## நடைபழக யாத்திரை சென்றாலும் நல்லாட்சியை கவிழ்க்க முடியாது-பழனி

(கொழும்பு)

நாட்டில் ஆட்சியினை குறுக்கு வழியில் கைப்பற்ற முன்னாள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டின் எந்த பகுதியிலிருந்து நடை பழக பாதயாத்திரை சென்றாலும் இன்னும் நான்கு வருடங்களுக்கு நல்லாட்சி அரசாங்கத்தை அசைக்க முடியாது என மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதி மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதி மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் 15 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 28 தோட்டங்களைச் சேர்ந்த 472 குடும்பங்களுக்கு கூரைத் தகடுகள் நேற்று நோர்வூட் விளையாட்டு மைதானத்தில் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தொழிலாளர்கள் ஏமாந்து வந்த காலம் போய்விட்டது. அவர்கள் விழித்துக்கொண்டனர். இனி மேலும் ஏமாற்ற வருபவர்களை அவர்கள் விரட்டி அடிப்பார்கள். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரவு. செலவு திட்ட காலத்தில் 50 ஆயிரம் வீடுகள் மலையகத்துக்கு

15 ஆம் பக்கம் பார்க்க....

## தாய்ப்பால் புரையேறியதால் 2 1/2 மாத பெண் சிசு மரணம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிப் பகுதியில் இரண்டரை மாதங்களேயான பெண் சிசுவொன்று தாய்ப்பால் புரையேறியதால் நேற்றைய தினம் பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

திருநெல்வேலி பாரதிபுரம் பகுதியினைச் சேர்ந்த சுகதாசன் கிஷானா என்ற சிசுவே உயிரிழந்துள்ளது.

நேற்று காலை 7 மணியளவில் சிசு அழுதபோது தாயார்

15 ஆம் பக்கம் பார்க்க....

## 5 வருடங்களுக்கு அரசாங்கத்தை எவராலும் அசைக்க முடியாது

### ஜனாதிபதி மைத்திரி அறிவிப்பு



(பொலநறுவை)

2017ஆம் ஆண்டு டிசம்பர் மாதமாகும் போது அரசாங்கத்தில் இருந்து விலக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்றக் குழு எடுத்திருந்த தீர்மானத்தை இரத்துச் செய்து அடுத்த 5 வருடங்களுக்கும்

15 ஆம் பக்கம் பார்க்க....

## உடல் எடையை மாத்திரமே பாதயாத்திரை குறைக்கும் -ஹிருணிகா

(கொழும்பு)

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரால் முன்னெடுக்கப்பட்டுள்ள பாதயாத்திரையால், பாதயாத்திரையில் ஈடுபட்டுள்ளவர்களின் உடல் எடையை மாத்திரமே குறைக்க முடியுமே தவிர அரசாங்கத்தை

15 ஆம் பக்கம் பார்க்க....



## கிரிக்கெட் அணிக்கு ஜனாதிபதி வாழ்த்து

(கொழும்பு)

கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இலங்கை அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கட் போட்டியில் வெற்றி பெற்றுள்ள இலங்கை கிரிக்கெட் அணிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

16 ஆம் பக்கம் பார்க்க....

### இராணுவம் அழைத்துச் சென்ற
## என் மகனை காணாது நான் பதறுகையில் ஆடு, மாடு, கோழி தருகிறோம் என்றனர்

(மன்னார்)

வீட்டில் வைத்து விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட எனது மகன் 8 வருடங்களாகிய நிலையில் இது வரை வீடு திரும்பவில்லை. அன்றைய சூழ்நிலை பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான காலமாக இருந்தது. அதனால் உண்மையை யாரிடமும் கூற முடியவில்லை. ஆனால் தற்போது எனது மகனை விசாரணைக்காக அழைத்துச் சென்றவர்கள் இராணுவம்தான் என என்னால் உறுதியாக கூறமுடியும் என தாய் ஒருவர் தனது கருத்துக்களை பதிவு செய்தார்.

இலங்கை அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்படவுள்ள நீதிப்பொறிமுறை தொடர்பான நல்லிணக்க பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான வலய செயலணி நேற்று

15 ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு குற்றச் செயல்களுக்கு இராணுவம்தான் பின்னணி!

(யாழ்ப்பாணம்)

இராணுவம் எங்களது பகுதிகளுக்கு நுழைய முன்னர் நாங்கள் நிம்மதியாகதான் நடமாடினோம். எமது பெண் பிள்ளைகள் இரவிலும் சுதந்திரமாகத்தான் நடமாடினார்கள். இப்போதுதான் வன்முறைகள், வாள்வெட்டு என குற்றங்கள் வடக்கில் அதிகரித்து காணப்படுகின்றது. இந்த குற்றச் செயல்கள் பலவற்றிக்கு இராணுவம்தான் பின்புலமாக உள்ளது.

ஆகையால் உடனடியாக இராணுவத்தை வடக்கிலிருந்து வெளியேற்ற வேண்டும் என பாதிக்கப்ப

16 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42-ம் வீதியில் 3-ம் இலக்கத்தில் இணைந்த குளியலறையுடன் கூடிய இரண்டு அறை தொடர்மாடி வீடு நாள், மாத வாடகைக்குண்டு.

077 837 8597 (5478)

## பணிநிலை வேண்டுகை

கணனி பக்க வடிமைப்பாளர் (ஆண்/பெண்)
Graphics Designer

கணனி தட்டெழுத்தாளர் (ஆண்/பெண்)
Computer Typist

உதவிக்கணக்காளர் (பெண்)
Accounts Clerk
(Quick Books Data Entry Operator)

முன்னனுபவமுள்ளவர்கள் மட்டும்
01ஆம் திகதி தொடக்கம் 03 ஆம் திகதி வரை
நேரில் வரவும்

# கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்

இல. 681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P : +94 21 222 2717/ 8
+94 21 222 2737

## கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி

ஜேர்மன், சுவிஸ், ஒஸ்ரியா ஆகிய நாடுகளுக்கான டொச் மொழி வகுப்புக்கள் ஜேர்மன் தூதரகம் கேட்கும் A1 சான்றிதழுக்கு ஏற்ற வகையில் கற்பிக்கப்படுகின்றது.
(S.கோணேஸ்வரனின் வழிகாட்டலில் கற்பிக்கப்படுகின்றது)

ஆரியகுளம் சந்தி
(புத்தர் விகாரைக்கு எதிரே 2ஆம் மாடி) யாழ்ப்பாணம்.
077 970 7322 (5459)


# #போர்க்குற்றம் #கடத்தல் #காணாமல்போனோர்

# சர்வதேச விசாரணையே வேண்டும்

## தண்டனையை உறுதி செய்ய மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் போர்க்குற்றங்கள், ஆள்கடத்தல்கள் மற்றும் காணாமல்போனோர் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையே வேண்டும் எனவும் இந்த சர்வதேச விசாரணையில் பாதிக்கப்பட்ட மக்களும் விசாரணையாளர்களாக இருக்க வேண்டும் என நல்லிணக்க பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைக் கான செயலணியிடம் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் காணாமல்போனோருக்கான நினைவுத்தூபி ஒன்றும் அமைக்கப்பட்டு, இவை மீள் நிகழக்கூடாது என்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். மேலும் காணாமல் போவதற்கு காரணமானவர்கள் சர்வதேச நீதிமன்றின் ஊடாக குற்றவியல் வழக்கு தொடரப்பட்டு நாம் அனுபவித்த துன்பங்களுக்கு நிகரான தண்டனை வழங்கப்பட வேண்டும். மற்றும் இதனை தூண்டிய மேலதிகாரிகளும் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நேற்றைய தினம் காலை ஒன்பது மணிமுதல் மாலை நான்கு மணிவரை மேற்குறித்த செயலணியின் அமர்வு நடைபெற்றது. இதன போதே யுத்தத்தினாலும், காணாமல் போதல்கள் உட்பட பல அரசியல் காரணங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

காணாமல்போனோர், கடத்தப்பட்டோர் தொடர்பில் எத்தனையோ விசாரணைகள், குழுக்கள் நியமிக்கப்பட்டும் இதுவரை அதற்கான தீர்வு ஒன்றும் கிடைக்கவில்லை. தென்னிலங்கையில் ஒரு பாலியல் வன்புணர்வு இடம்பெற்றால் ஓரிரு நாட்களில் நீதிமன்றினால் குற்றவாளிகள் இனங்காணப்பட்டு அதற்கான தண்டனையும் வழங்கப்படுகின்றது.

ஆனால் வடக்கில் பாலியல் வன்புணர்வு ஒன்று இடம்பெற்றால் பல வருடக்கணக்கில் வழக்கு இழுபட்டு செல்கின்றது. குற்றவாளிகளும் பயமின்றி வாழும் நிலைதான் இங்கு உள்ளது. பாலியல் வன்புணர்வு வழக்கின் போதே இந்தளவு பாகுபாடு என்றால், அவர்களால் நிகழ்த்தப்பட்ட குற்றத்திற்கு அவர்களையே விசாரணையாளர்களால் நியமித்தால் அதற்கான நீதி எவ்வாறு இருக்கும் என்று சொல்லி தெரியவேண்டியதில்லை.

எனவே சர்வதேச விசாரணை ஒன்றின் ஊடாகவே எமக்கான நீதியை பெற்றுக்கொள்ள முடியும். சர்வதேச விசாரணையில் குற்றம் நிகழ்த்தியவர்கள் இணைக்கப்பட்டால், பாதிக்கப்பட்டவர்களும் அதில் விசாரணையாளர்களாக இணைத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற முக்கியமான கோரிக்கையையும் அவர்கள் முன்வைத்தனர்.

மேலும் காணாமல்போன எமது பிள்ளைகளை தேடும முயற்சியில் ஈடுபட்டால் தமது வீட்டிற்கு புலனாய்வு பிரிவு தற்போதும் வருகின்றது என செயலணியிடம் சுட்டிக்காட்டிய மக்கள், இதனால் தமது உறவுகளை தேடும் முயற்சிகளை கைவிட்டு விட்டதாகவும் கூறுகின்றனர். எங்களது உறவுகளை முதலில் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இவ்வாறு எமது உறவுகள் தேடப்படும் காலத்திற்கான நஷ்டஈடும் எமக்கு வழங்கப்பட வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர். (செ-4)

## முச்சக்கரவண்டி விபத்து



(கோப்பாய்)

உரும்பிராய் பலாலி வீதியில் ஒஸ்கா ஒழுங்கைக்கு அண்மையாக இடம்பெற்ற முச்சக்கரவண்டி விபத்தில் முச்சக்கரவண்டிச் சாரதி சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளார். இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.40 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பலாலி வீதி வழியாக பயணிகளுடன் பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கரவண்டி ஒஸ்கா ஒழுங்கைக்கு அண்மையாக பலாலிவீதியில்உள்ள சிறு வளைவில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியில் நாட்டப்பட்டிருந்த வீதிச்சமிக்ஞை பலகையுடன் மோதியதில் மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் முச்சக்கரவண்டி முன்பகுதி பாரிய சேதங்களுக்குள்ளானதுடன் சாரதி சிறு காயங்களுடன் பயணிகளையும் வீதியில் இறக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

மேற்படி விபத்தில் வீதியில் நாட்டப்பட்டிருந்த அபாயகரமான வளைவை குறிக்கும் இரண்டு சமிக்ஞை பலகைகள் சேதமடைந்து முறிந்து வீழ்ந்துள்ள நிலையிலேயே முச்சக்கரவண்டி தப்பிச் சென்றுள்ளது.

முச்சக்கரவண்டியில் பயணித்த பயணிகளுக்கு தெய்வாதீனமாக காயங்கள் எதுவும் ஏற்படாத நிலையில் அவர்கள் மேற்கொண்டு பயணத்தை பஸ் வண்டியில் தொடர்ந்ததை அவதானிக்க முடிந்தது. (செ-87)




**பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவதற்கான ஒழுங்கான, தெளிவான மற்றும் திட்டம் ஒன்றை தயாரிக்குமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தார் அங்கஜன் இராமநாதன்.....**

நானும் ஒரு பட்டதாரி மாணவன் என்கின்ற ரீதியில் படித்து விட்டு வேலைக்காக காத்திருக்கின்ற வேலையில்லாப் பட்டதாரிகளின் வலிகளை நேரடியாக உணர்ந்தவன். பாதிக்கப்பட்ட கல்வியிலே பெயர் பெற்ற எமது வடமாகாண பட்டதாரிகளை அரச வேலைவாய்ப்பிற்குள் உள்வாங்குவதற்கான தெளிவான சிறந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அவர்கள் அரச சேவைக்குள் அவசரமாக உள்வாங்கப்படவேண்டும். பல கனவுகளுடன் வெளியேறிய பட்டதாரிகள் வேலை தேடி அலைகின்ற போது நிர்வாக அதிகாரிகள் முன்னிலையில் இழிவாக நடத்தப்படாத வகையில் செயலாற்றுதல் வேண்டும். இன்றைய பட்டதாரிகள்தான் அரச அதிகாரிகள், நிர்வாக அதிகாரிகளாக நாளைய சமுதாயத்திற்கு அவர்கள்தான் வழிகாட்ட வேண்டும். நாம் இழந்தவற்றை மீளக்கட்டியெழுப்புவதற்கும் இவர்களின் சேவை எமது நாட்டிற்கும் இன்றியமையாத ஒன்றாகும். வடமாகாணத்தில் இருக்கின்ற பதவி வெற்றிடங்களை இனம்கண்டு அவசரமாக இந்தப்பட்டதாரிகள் மூலம் நிரப்பப்பட நடவடிக்கைகளை மேற்கொண்டு வடமாகாண இளைஞர் யுவதிகளின் வேலையில்லா பிரச்சினைக்கு தீர்வு பெற்றுத்தருமாறு மேன்மைதங்கிய ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதுடன் ஒரு வேண்டுகோளினையும் முன்வைத்தார் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்.

**அங்கஜன் இராமநாதன்**
**பாராளுமன்ற உறுப்பினர்**
**SLFP பிரதம இணைப்பாளர், யாழ்ப்பாண மாவட்டம்.**

(5475)

## கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த மஹோற்சவம் - 2016

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம் வருடாந்த மஹோற்சவம் 23/07/2016 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

31/07/2016-ம் திகதி இன்று சப்பறத்திருவிழாவும் 01/08/2016 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு தேர்த்திருவிழாவும் 02/08/2016 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் 03.08. 2016 புதன்கிழமை திருக்கல்யாண வைபவமும் இடம் பெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

**ஆலய பரிபாலனசபை,**
**நாகதம்பிரான் ஆலயம், புளியம்பொக்கணை.**

(கி-5346)

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



**திரு.விஸ்வலிங்கம் அருளானந்தம்**
(கணித ஆசிரியர் - தொண்டர் வித்தியாலயம், கொழும்பு)

சிறந்த கணித ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் பதில் அதிபராகவும் 37 வருடங்கள் கல்விப் பணியாற்றி இன்று மணிவிழாக் காணும் திரு.வி.அருளானந்தம் அவர்கள் ஓய்வுக் காலத்தில் அவர் தம் குடும்பத்துடன் நீண்ட ஆரோக்கியம் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றோம்

சி.திரிகரன்
(அதிபர்- யா/அச்சுவேலி மத்திய கல்லூரி

(5477)

# போரில் இடம்பெற்ற சம்பவங்கள் மக்கள் மனதைவிட்டு அகலாது

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் மூன்று தசாப்தகால உள்நாட்டு யுத்தத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் மக்கள் மனதை விட்டு அகலாது எனத் தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எனினும், இது நல்லிணக்கத்துக்குத் தடையாக அமைந்து விடக்கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.**



பருத்தித்துறை ஹாட்லிக் கலலூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

யுத்தம்நடந்தது உண்மை. அது எங்கள் மனதிலிருந்து அகலாது. எனினும், அது நல்லிணக்கத்துக்கும் காயங்களை ஆற்றுவதற்கும் தடையாக அமைந்துவிடக்கூடாது.

ஆகவே, நாங்கள் உண்மையை அறிவோம். அரசு இது தொடர்பில் இரண்டு விடயங்களில் கவனம் செலுத்தி வருகின்றது.

முதலாவது, வடக்கு, கிழக்கில் காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை நாங்கள் அறிய விரும்புகின்றோம். அரசு காணாமற்போனவர்கள் குறித்த அலுவலகத்தை ஏற்படுத்துவதற்கான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. இன்னும் சில நாட்களில் அது நிறைவேற்றப்படும்.

தங்கள் உறவுகள் இன்னமும் உயிருடன் உள்ளனர் எனக் கருதிக்கொண்டிருக்கும் பலர் உள்ளனர். இது நாங்கள் அனுபவிக்க வேண்டிய கடினமான நடைமுறை. தென்னாபிரிக்காவிலிருந்து நாங்கள் இதனைக் கற்க வேண்டும்.


இரண்டாவது, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு விடயத்தில் கவனம் செலுத்தி வருகின்றோம். உண்மை, நல்லிணக்கத்துக்கு வழிவகுக்க வேண்டும்.

இலங்கை, உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவின் தனக்குரிய வடிவத்தை ஏற்படுத்த முனைந்துள்ளது,

மேலும் சில இடங்களில் சட்ட நடவடிக்கை எடுக்கலாம். சில இடங்களில் அது சாத்தியமில்லை. சிலர் இறந்துவிட்டனர்.

ஒரு கட்டத்தில் யார் யாரை தாக்குகின்றார் என்பதே தெரியாத நிலை காணப்பட்டது. அவ்வேளை வடக்கு, கிழக்கில் பல தனிப்பட்ட பகைகளும் தீர்க்கப்பட்டன என்று பிரதமர் ரணில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## பணவீக்கத்தை கட்டுப்படுத்த வட்டி வீதம் அதிகரிப்பு



பண வீக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கை மத்திய வங்கி நிதிக் கொள்கையில் இறுக்க நிலையை பின்பற்றுவதற்கு தீர்மானித்துள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்தார்.

பண வீக்கத்தில் ஒற்றை இலக்கத்தை தொடர்ந்தும் கடைப்பிடிக்கும் நோக்கில் தமது பிரதான நிதிக் கொள்கையில் இரண்டு வட்டி வீதங்களையும் அதிகரிக்க தீர்மானித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய வங்கியிலிருந்து வர்த்தக வங்கிகள் பெறும் பணத்துக்கு நூற்றுக்கு 8 சதவீதத்திலிருந்து நூற்றுக்கு 8.5 சதவீதமாகவும் வர்த்தக வங்கிகளிலிருந்து மத்திய வங்கிக்கு பெறப்படும் பணத்திற்கு நூற்றுக்கு 6.5 இலிருந்து 7 சதவீதம் வரையும் வட்டி அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த 28ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வரையில் இது நடைமுறைப்படுத்தப்படும்.

நிதிச் சபைக் கூட்டத்தில் நிதிக் கொள்கையில் செய்யப்பட்ட மாற்றங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் காலை மத்திய வங்கியில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மத்திய வங்கி இவ்வாறு 0.5 சதவீத வட்டி அதிகரிப்பு செய்தமையின் காரணமாக இந்த வருடத்தில் எதிர்பார்க்கப்பட்ட 06 சதவீத பொருளாதார அபிவிருத்தியை எட்ட முடியுமென்றும் ஆணையாளர் குமாரசுவாமி நம்பிக்கை தெரிவித்தார்.(இ-7-10)

## கோத்தபாயவை ஆட்சியில் அமர்த்தவே பாதயாத்திரை முன்னெடுக்கப்படுகிறது

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை ஆட்சிப் பீடத்தில் ஏற்றும் நோக்கில் பாதயாத்திரை முன்னெடுக்கப்படுவதாக இடதுசாரி கேந்திர நிலையத்தின் இணை அழைப்பாளர் சமீர பெரேரா தெரிவித்துள்ளார்.

மருதானையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷவை போட்டியிடச் செய்து அவரை ஜனாதிபதியாக்குவதே இந்த பாதயாத்திரையின் நோக்கமாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கில் கூட்டு எதிர்க்கட்சி செயற்படுகின்றது.

இந்த முயற்சியானது நாட்டின் ஜனநாயகத்தையும், 62 இலட்சம் மக்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தலையும் ஏற்படுத்தும் வகையில் அமைந்துவிடும்.

இந்த முயற்சியை முறியடிக்க எடுக்கக்கூடிய சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டுமென சமீர பெரேரா தெரிவித்துள்ளார். (இ-7-10)

## மகிந்த இன்றி பாதயாத்திரை நேற்றுக்காலை ஆரம்பமானது



கூட்டு எதிர்க் கட்சி ஏற்பாடு செய்துள்ள பாதயாத்திரையின் மூன்றாவது நாள் நிகழ்வு நேற்று முற்பகல் 9.50 மணிக்கு நெலும்தெனியவிலிருந்து ஆரம்பமானது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த ஆரம்ப நிகழ்வுகளில் கலந்து கொள்ளவில்லை. (இ-7-10)

## பாதயாத்திரைக்கு முன் 4 பாதயாத்திரைக்கு பின் 16

பாதயாத்திரைக்கு முன்னர் நான்கு பேர் அரசாங்கத்துடன், இணைந்து கொள்ளவிருந்த நிலையில் தற்போது அந்த எண்ணிக்கை 16ஆக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் பி.ஹரிசன் ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் இதனை தெரிவித்துள்ளார். கூட்டு எதிர்க்கட்சியினரின் பாதயாத்திரை இரண்டாவது நாளாக முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் அவர் இதனை தெரிவித்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் ஐந்து ஆண்டுகளுக்கு ஆட்சியில் இருக்கும்.

இந்த ஐந்து ஆண்டு காலப் பகுதியில் அரசாங்கத்தை அசைக்க முடியாது என அமைச்சர் பி.ஹரிசன் மேலும் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க ஆளுங்கட்சியில் உள்ள பலர் தம்முடன் இணைவதற்கு ஆர்வமாகவுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில நெலும்தெனிய பகுதியில் வைத்து ஊடகங்களுக்கு இதனை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## மக்கள் விருப்பம் ஆட்சி மாற்றமே மகிந்த கூறுகிறார்

நாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்தையே விரும்புகின்றனர். அதன் வெளிப்பாடு பாதயாத்திரை ஊடாக உலகிற்கு அம்பலப்படுத்தப்பட்டுள்ளது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாதயாத்திரையை குழப்புவதற்கு முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் கொழும்பை நோக்கிச் செல்வதை யாராலும் தடுத்துவிட முடியாது.

பொதுமக்கள் எம்முடன் உள்ளமை உலகிற்கு வெளிப்பட்டுள்ளது. ஆகவே தடைகளைக் கடப்பது கடினமான விடயமல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

எமக்கு எதிராக வாக்களித்தவர்கள் கூட இன்று பாதயாத்திரையில் கலந்து கொண்டு அரசாங்கத்திற்கு எதிராக குரல் கொடுக்கின்றனர். எனவே மாற்றம் தேவை என்பது வெளிப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (2-7-10)

## ஆளும்கட்சியிலுள்ள பலர் எம்முடன் இணைய ஆர்வம்

### உதய கம்மன்பில கூறுகிறார்

ஆளுங்கட்சியில் உள்ள பலர் தம்முடன் இணைவதற்கு ஆர்வமாகவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பாதயாத்திரையில் தம்முடன் இணைவதற்கு ஆளுங்கட்சியின் அமைச்சர் ஒருவர் தம்மிடம் கேட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கூட்டு எதிர்க்கட்சியின் பாதயாத்திரை நெலும்தெனியவில் நிறைவடைந்த சந்தர்ப்பத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

தம்முடன் இணைந்துள்ள மக்களைப் பார்த்து அரசாங்கத்திற்கு காய்ச்சல் வந்து விட்டதாகவும் தெரிவித்துள்ள அவர் தமது பாதயாத்திரை கொழும்பை வந்தடையும் போது பேலியகொட சந்தியில் கண்ணீர்ப்புகை குண்டுகளையும், மீதியுள்ள குண்டுகளையும் எடுத்துக் கொண்டு வருமாறும் தெரிவித்துள்ள கம்மன்பில, என்ன செய்தாலும் கொழும்பிற்குள் நுழைவதை அரசாங்கத்தால் தடுக்க முடியாதென்றும் சவால் விடுத்துள்ளார்.

மேலும் எமது பாதயாத்திரை ஆரம்பமாகியதும் நீதிமன்றில் இரண்டு உத்தரவுகளை பெற்றார்கள். பின்பு நீதிமன்றம் இவர்களுக்கு உத்தரவு வழங்க மறுத்துள்ளது என்று தெரிவித்துள்ள அவர், பச்சை நிற பொலிஸார் எதிர்வரும் நாட்களில் பல தடையுத்தரவுகளை பெற நீதிமன்றம் வரவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை பொலிஸ்மா அதிபரே உங்களது பச்சை நிறத் தொப்பியை அணிந்து கொண்டு நீங்கள் சிறிகொத்தாவிற்கு செல்லுமாறும் உதய கம்மன்பில பொலிஸ்மா அதிபருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7-10)

# சுழலில் மிரட்டியது இலங்கை சிங்கங்கள் அடங்கி மண்டியிட்டது அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலிய அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 106 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.


268 என்ற வெற்றியிலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 161 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுகளையும் இழந்து அதிர்ச்சி தோல்வி அடைந்தது. டெஸ்ட் தரப்படுத்தலில் முதல் இடத்தில் உள்ள அவுஸ்திரேலிய அணியை சுழல் பந்துவீச்சால் மிரட்டிய இலங்கை அணி இங்கிலாந்துடன் பெற்ற தொடர் தோல்வியை ஈடுகட்டியுள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல இன்னிங்ஸில் 117 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இந்நிலையில் அவுஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்ஸில் 203 ஓட்டங்களுக்கு சகல வக்கட்டுகளையும் இழந்தது. 86 ஓட்டங்கள் பின்னடைவில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி 353 ஓட்டங்களை பெற்றது.

இலங்கை அணி சார்பில் குசல் மெண்டிஸ் தனது முதல் டெஸ்ட் சதத்துடன் 176 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். 268 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 161 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியை தழுவி கொண்டது.

அவுஸ்திரேலிய அணி சார்பில் அணித்தலைவர் ஸ்மித் 55 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். இலங்கை அணி சார்பில் ஹேரத் 5 விக்கட்டுகளையும், சந்தகன 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர். இந்த போட்டியின் சிறப்பாட்டக்காரராக குசல் மெண்டிஸ் தெரிவு செய்யப்பட்டார். (க)




# காணாமல்போனோர் அலுவலகத்தை வடக்கிலேயே அமைக்க வேண்டும்

## கொழும்பில் அமைக்கக் கூடாது!

(யாழ்ப்பாணம்)

காணாமல்போனோர் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தால் அமைக்கப்படவுள்ள அலுவலகம் கொழும்பில் அமைய கூடாதெனவும், அந்த அலுவலகம் அதிகமாக காணாமல்போனவர்களுடைய பிரதேசமான வடக்கிலேயே அமைக்கப்படல் வேண்டும் என நல்லிணக்க பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான வலய செயல ணியிடம் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.



இலங்கை அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்படவுள்ள நீதிப் பொறிமுறை தொடர்பான நல்லிணக்க பொறிமுறைகள் பற்றி கலந்தாலோசனைக்கான வலய செயலணி நேற்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு மன்னார் பிரதேசச் செயலகத்தில் இடம் பெற்றது. நல்லிணக்க பொறிமுறைகள் பற்றி கலந்தாலோசனைக்கான வலய செயலணியின் தலைவர் அருட்தந்தை இ.செபமாலை அடிகளார் தலைமையில் ஆறு பேர் அடங்கிய குழுவினர் முன்னிலையில் இடம் பெற்றது. இதன் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பலர் கலந்து கொண்டு தமது கருத்துக்களை தெரிவிககையில், குறிப்பாக காணாமல் போன மற்றும் கடத்தப்பட்டவர்கள் தொடர்பாக பல வருடங்களாக நீதிமன்றங்களில் இடம் பெற்று வரும் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும், காணாமல் போனவர்கள் தொடர்பில் 6 மாதங்களுக்குள் உரிய தீர்வு கிடைக்கப்பெற வேண்டும்.

காணாமல்போனமற்றும்கடத்தப்பட்டவர்கள் குறித்து சர்வதேசத்தின் தலையீட்டுடன் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதோடு,இவர்கள் தொடர்பில் வெளிநாட்டு நீதிபதி குழுவினர் அழைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. மேலும் காணாமல் போனவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் அலுவலகம் கொழும்பில் அமைக்க முடியாது எனவும், வடக்கில் அதிகமாக பாதிக்கப்பட்ட மாவட்டம் ஒன்றிலே அமைக்கப்பட வேண்டும் எனகருத்துக்கள் முன் வைக்கப்பட்டது.

மேலும் காணாமல் போன உயிர்களுக்கு அரசாங்கம் இழப்பீடுகளை வழங்க முடியாது எனவும் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என தெரிவிக்கப்பட்டதோடு சொத்து இழப்புகளுக்கு மாத்திரமே இழப்பீடுகளை பெற்றுக்கொள்ள முடியும் என கருத்துக்கள் முன் வைக்கப்பட்டுள்ளது. யுத்தத்தினால் இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மீண்டும் சொந்த மண்ணில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள போதும் பலருக்கு இதுவரை எவ்வித உதவித்திட்டங்களும் வழங்கப்படவில்லை என கருத்துக்கள் முன் வைக்கப்பட்டுள்ளது.

பலருக்கு பல வீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளது. ஆனால் எங்களைப்போல் பலருக்கு ஒரு உதவித்திட்டங்கள் கூட வழங்கப்படவில்லை எனவும் குறித்த பிரச்சினைகள் குறித்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு உரிய நிவாரணம் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. (செ-4)

# பட்ரியோட்ஸ் வெற்றி

கரீபியன் லீக் கிரிக்கெட் தொடரின் நேற்று இடம்பெற்ற பட்ரியோட்ஸ் மற்றும் நைட் ரைடர்ஸ் ஆகிய அணிகளுக்கிடையிலான போட்டியில் பட்ரியோட்ஸ் அணி 34 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பட்ரியோட்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கட்டுகளை இழந்து 180 ஓட்டங்களை பெற்றது.



பட்ரியோட்ஸ் அணி சார்பாக லிவிஸ் 40 பந்துகளுக்கு 79 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். நைட் ரைடர்ஸ் அணி சார்பாக சுனில் நறைன் 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

181 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய நைட் ரைடர்ஸ் அணி 18 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 146 ஓட்ட ங்க ளை பெற்று தோல்வியடைந்தது.

நைட் ரைடர்ஸ் அணி சார்பில் முன்ரோ 46 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பட்ரியோட்ஸ் அணி சார்பில் கட்ரெல் மற்றும் சென்டொக்கி தலா 3 விக்கெட்டுகளை கைப்பற்றினர். ஆட்டநாயகனாக பட்ரியோட்ஸ் அணியின் லிவிஸ் தெரிவு செய்யப்பட்டார். (க)

# வடமராட்சி கபடி சங்கம் நடத்தும் கபடி சுற்றின் இறுதிப் போட்டி

## சென். தோமஸ் – துள்ளுமீன் பலப்பரீட்சை

வடமராட்சி கபடி சங்கம் நடத்தும் விலகல் முறையிலான கபடிப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று இரவு 8 மணிக்கு மின்னொயில் பருத்தித்துறை சென். தோமஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.





இறுதிப் போட்டியில் சென். தோமஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை கொட்டடி துள்ளுமீன் விளையாட்டு கழகம் மோதவுள்ளது.

அதற்கு முன்னர் இரவு 7 மணிக்கு நடைபெறும் 3ஆம் இடத்திற்கான போட்டியில் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நெல்லியடி என்.சி.சி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

# இன்றைய போட்டிகள்



அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு அமரர்நல்லையா சதீஸ்குமாரின் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று இரவு 7.30 மணிக்கு மின்னொளியில் நடைபெறும். போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தை எதிாத்து மல்லாகம் நியூ வோறியஸ் விளையாட்டுக் கழகமும்,

இரவு 8.15 மணிக்கு நடைபெறும் போட்டியில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும்,

இரவு 9 மணிக்கு நடைபெறும் போட்டியில கெருடாவில் விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (க)

# மரியானா தீவுத் தொகுதிகளில் நில நடுக்கம்

பசுபிக்கடலை அண்டியுள்ள மரியானா தீவுத் தொகுதிகளில் நேற்று அதிகாலை நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ரிக்டர் அளவுகோலில் 7.7 ரிக்டர் ஆக பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியில் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நில நடுக்கமானது அமெரிக்க எல்லைக்குட்பட்டதான பசுபிக் கடலின் தென்மேற்கு பகுதியான மக்கள் வசிப்பிடமில்லாத அக்ரிகஹான் தீவிலிருந்து 212 கிலோ மீற்றர் ஆழத்திலும் 19 மைல் தொலைவிலும் ஏற்பட்டுள்ளது.

எனினும் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. அத்துடன் சைப்பான் தீவு கடல் அலைகள் 2 அங்குலம் அதிகரித்து காணப்பட்டுள்ளதாகவும் மக்கள் சுனாமி குறித்து அச்சப்பட தேவையில்லை எனவும் சுனாமி எச்சரிக்கை மையத்தின் பேச்சாளர் போல்விட்மோர் தெரிவித்தார்.

குறித்த இந்நில நடுக்கம் தொடர்பான சேதார விபரங்கள் இதுவரை வெளியாகவில்லை. எனினும் இந்நில நடுக்கத்தின் அதிர்வுகள் பசுபிக்கரையை அண்டியுள்ள குவாம்நகரிலும் உணரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(இ-7-10)


## MATHS PERSONAL CLASS

தரம் 6-11 வரையான கணித (தமிழ்-ஆங்கிலமொழியினூடாக வகுப்புக்கள் மாணவர்களது வீடு வந்து கற்பிக்கப்படும்.தரம் 9,10 மற்றும் G.C.E./OLமாணவர்களுக்கு கடந்த கால மாதிரி வினாக்கள், விசேட கையேட்டினூடாக கற்பிக்கப்படும்.(யாழ்.நகர, மல்லாக எல்லைக்குட்பட்டவர்கள் தொடர்பு கொள்ளவும்).

குறைந்த புள்ளிகள் பெற்ற மாணவர்களை ஒரே தவணையில் அதிவிசேட சித்திகள் பெறுவதற்கேற்ப பயிற்றுவிக்கப்படுவர்.

(தொடர்புகளுக்கு:- 077 236 9133 (5474)

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சி நகரில் டிப்போ சந்தியிலிருந்து 1 1/2 km தூரத்தில் 4 அறைகளுடன் வீடு வாடகைக்குண்டு. (5310)

தொ.பே.இல. 077 780 6235

## வேலைவாய்ப்பு

திருநெல்வேலியில் அமைந்துள்ள **அபான்ஸ்** நிறுவனத்திற்கு 18-25 வயதிற்குட்பட்ட விற்பனை உதவியாளர்கள் தேவை. (கொக்குவில், நல்லூர், திருநெல்வேலி பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது) (5462)

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-136, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். sasasainu@gmail.com**

E.S.பேரம்பலம் நிறுவனத்தின் முழுமையான ஆதரவுடன்
யாழ். பாலர் கல்விக்கழக நிர்வாகத்திலுள்ள

## ஞானக்குழந்தை இல்ல

பாலர் பாடசாலைகளுக்கிடையிலான
**50 ஆவது ஆண்டு விளையாட்டு விழா- 2016**

*இடம்:- கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம், கொக்குவில்.*
*காலம்:- 31.07.2016 ஞாயிற்றுக்கிழமை*
*நேரம்:- காலை 9.00 மணி*

தலைவர்
''தேசோதய தீபம்''
**திரு. S.B. காசிநாதன் N.Ed, M.A, K.P**
(தலைவர், பாலர் கல்விக்கழகம், ஓய்வுநிலை ஆசிரியர்- சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம். அகில இலங்கைச் சமாதான நீதவான்)

பிரதம விருந்தினர்
**பேராசிரியர். கலாநிதி. தி.வேல்நம்பி Ph.D**
(பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்
''கல்விக் காருண்யன்''
**திரு. E.S.P. நாகரத்தினம்**
(உரிமையாளர், E.S.P. நிறுவனம்)

கௌரவ விருந்தினர்
**திரு.வே.ஞானகாந்தன் M.Ed**
(அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்)

அனைவரும் வருகைதந்து பாலர்களை ஊக்குவிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
யாழ்.பாலர் கல்விக்கழக உறுப்பினர்கள்,
ஞானக்குழந்தை இல்ல ஆசிரியர்கள், பாலர்கள். (5463)


## புல்லைக்கட்டி அலங்கார வரவேற்பு

கூட்டு எதிர்க் கட்சியின் பாதயாத்திரையில் வருகின்றவர்களை வரவேற்கும் வகையில் களனிப் பிரதேசத்தில் புல்கட்டுகள் கொண்டு வரவேற்பு அலங்காரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கு எதிரான கூட்டு எதிர்க்கட்சியின் பாதயாத்திரையில் கலந்து கொண்டுள்ளவர்களை இரண்டு கால் மாடுகள் என்பதாக அரசாங்கத்தின் ஆதரவாளர்களும், சமூக வலைத்தள செயற்பாட்டாளர்களும்கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.(இ-7-10)





## மக்கள் வங்கி

உங்களுக்கு மிக அருகில் மக்கள் வங்கி

### கொக்குவில் சேவை நிலைய கோலாகலமான திறப்பு விழா

மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளையின் நாவலர்வீதி சேவை நிலையமானது புதிய மெருகுடனும் நவீன மயப்படுத்தப்பட்ட வங்கிச் சேவைகளுடனும் வைபவ ரீதியாக 01.08.2016 கொக்குவிலில் திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை பெறுமதி வாய்ந்த எமது இனிய வாடிக்கையாளப் பெருமக்களுக்கு அறியத்தருவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

**இடம் :** மக்கள் வங்கி கொக்குவில் சேவைநிலையம்
205/4,காங்கேசன்துறை வீதி,
குளப்பிட்டிச்சந்தி, கொக்குவில்.
**காலம் :** 01.08.2016 திங்கட்கிழமை.
**நேரம் :** காலை 8.30 மணி
**பிரதம விருந்தினர் :** திருவாளர் நா.வேதநாயகன், அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்

- சகல வயதினருக்குமான சேமிப்புக் கணக்குகள்.
- கவர்ச்சிகரமான வட்டிவீதத்துடன் நிலையான வைப்புகள்.
- நடைமுறைக் கணக்கு செயற்பாடுகள்
- வெளிநாட்டு நாணயக் கணக்குகள்.
- வெஸ்ரேன் யூனியன் பணப்பரிமாற்றல் சேவை
- தங்க நகை அடகுச் சேவை.
- வெளிநாட்டு பணப்பரிமாற்றல்கள்.
- மையப்படுத்திய வங்கிச்சேவை (Online Banking)
- வீசா பற்று / கடன் அட்டைகள்.
- குறுந்தகவல் வங்கிச் சேவை (SMS Banking)
- இணைய வங்கிச்சேவை (Internet banking)
- கடன் வசதிகள்.
- மின்சார, தொலைபேசி, நீர் கட்டணங்கள் மற்றும் இது போன்ற கொடுப்பனவுகளைச் செலுத்துதல்.
- காசோலை வைப்பு.
- வைத்தியசேவைக்கான இலத்திரனியல் முன்பதிவு. (e-channeling)

உங்கள் அனைவரையும் எமது புதிய சேவைநிலையத்திற்கு வருக வருக என அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதேச முகாமையாளரும் ஊழியர்களும்
பிரதேச தலைமைக்காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

மக்கள் வங்கி

முகாமையாளரும் ஊழியர்களும்,
மக்கள் வங்கி,
யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை,
கொக்குவில் சேவைநிலையம்.


## இராசி பலன்

31.07.2016
(ஆடி 16,ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
துவாதசி காலை 6.59 மணிவரை
திருவாதிரை பின்னிரவு 4.05 மணிவரை
சுபநேரம் 9.03- 10.33 மணிவரை
இராகுகாலம் 4.33- 6.03 மணிவரை
பிரதோச விரதம்

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அனுசம் | | சூரி சுக் |
| | | | குரு புத ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்:** உடன் பிறப்புக்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், அடுத்தவர்களின் நலனில் அக்கறை காட்டும் எண்ணம் உருவாகும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**மேடம்:** உறவினர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றை செய்து முடிப்பீர்கள்,புதிய பொருட் சேர்க்கையுண்டு, கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்வீர்கள்.

**இடபம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**மிதுனம்:** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், தேக நலனில் கவனம் எடுக்க வேண்டிய நாள்.

**கும்பம்:** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான ஆதாயம் கிடைக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்:** உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மகரம்:** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், தேகநலனில் முன்னேற்றமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வெளித்தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானத்தை அதிகரிக்க புதிய வழியைக் கையாள்வீர்கள்

வளவன்

**தனுசு:** ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு , போசன நன்மையுண்டு, நண்பர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.


**விருச்சிகம்:** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**துலாம்:** உறவினர் வழியில் மன நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டுவரலாம், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**கன்னி:** காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பினால் பெருமை அடைவீர்கள், காரிய அனுகூலம் உண்டு, போசன சுகமுண்டு.

## கனேடிய வெளிவிவகார அமைச்சர் யாழ். பொதுநூலகத்திற்கு விஜயம்

### ஒரு தொகுதி நூல்களையும் கையளித்தார்





யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்த கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஸ்டீபன் டியோன் யாழ் பொது நூலகத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். அங்கு சென்று நூலகத்தை பார்வையிட்டதுடன் ஒரு தொகுதி நூல்களையும் அன்பளிப்புச் செய்திருந்தார். (படங்கள்:பொ.சோபிகா)

## பொருளாதார மத்திய நிலையம் குறித்து ஆலோசனை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது

### வடக்கு மாகாண முதலமைச்சர் சுட்டிக்காட்டு

வடக்கிற்கான பொருளாதார மத்திய நிலையம் இரு இடத்தில் அமையும் என அரசு அறிவித்துள்ள நிலையில், இது குறித்து மத்திய அரசிற்கு வடக்கு மாகாண சபை ஆலோசனையை மட்டுமே வழங்கியுள்ளது என தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்,இது குறித்து பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள் பொருளாதார வல்லுநர்களிடம் கலந்துரையாடிய பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

பொருளாதார மத்திய நிலையம் இரு இடத்தில் அமையவுள்ளதாக அரசு கூறியுள்ள நிலையில் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் ப.டெனிஸ்வரன், சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோரது கோரிக்கைக்கு இணங்க மாங்குளத்தில் அமையவிருக்கும் பொருளாதார மத்திய நிலையத்திற்கு கடல் உணவிற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் எனவும், வவுனியா மதவுவைத்த குளத்தில் அமையவுள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிவிற்பனைக்கு அதிக முக்கியத்துவம் வழங்க வேண்டும் என ஆலோசனை மட்டுமே எம்மால் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் இது வடக்கு மாகாண சபையின் இறுதி முடிவல்ல. எது எங்கு அமைய வேண் டும் என்பது குறித்து எமது பொருளாதார வல்லுநர்களுடன் கலந்துரையாடிய பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் என முதலமைச்சர் தெரிவித்தார். கைதடியில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் முதலமைச்சரினை நேற்று முன்தினம் சந்தித்த ஊடகவியலாளர்கள் மேற்குறித்த விடயம் குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கில் பொருளாதார மத்திய நிலையம் அமையவுள்ள இடம் தொடர்பான சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு. இதன் பிரகாரம் இரண்டு பொருளாதார மத்திய நிலையங்களை வடக்கு மாகாணத்தில் அமைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்து இருந்தது.

மாங்குளத்தில் கடல் உணவு சம்பந்தமான சந்தையும் வவுனியா மதவுவைத்த குளத்தில் மரக்கறி சந்தைக்கு முக்கிய த்துவம் வழங்கப்பட வேண்டும் என அமைச்சர் ஹரிசனுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியதை சுட்டிக்காட்டிய முதலமைச்சர், இது ஆலோசனை மட்டுமே. இது குறித்து எந்தவிதமான இறுதித் தீர்மானமும் இதுவரையில் எடுக்கப்படவில்லை. இது சம்பந்தமாக ஆலோசனைகள் பொருளியல் நிபுணர்களிடம் இருந்தும் மக்களிடமிருந்தும் தற்போது பெறப்படுகின்றன. எங்கு எவ்வாறான சந்தை அமைக்கப்பட வேண்டும் என்பது சம்பந்தமான தீர்மானம், ஆலோசனைகள் பெற்ற பின்னர் எம்மால் எடுக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தார். (இ-4)




## விவாதப்போட்டி இறுதிச் சுற்று

விழுமியங்களில் விவாதப்போட்டி இறுதிச்சுற்று எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுகதாமம் மண்டபம், 213.பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். கலட்டிச்சந்தி அருகில் நடைபெறவுள்ளது.

வளர்க்கப்பட வேண்டியது எது? சுதந்திரமா? சகிப் புத்தன்மையா? என்னும் தலைப்பில் நடைபெறவுள்ள இந் நிகழ்வின் நடுவர்களாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன்,யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட உதவிப் பதிவாளர் இரட்ணசிங்கம் சர்வேஸ்வரா, வாழைச்சேனைவட்டவான் கலைமகள் வித்தியாலய அதிபர் திருமதி. சுதாகரி மணிவண்ணன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (இ-254)

## பல இலட்சம் ரூபா பணத்தை இழந்த தாய் பொலிஸில் முறையிட முடியாத அவலநிலை

வெளிநாட்டிற்கு மகனை அனுப்பும் ஆசையில் முகவர்கள் மூவரிடம் பல இலட்சம் ரூபா பணத்தினைக் கொடுத்து ஏமாந்த தாய் ஒருவர் பொலிஸில் முறையிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

துன்னாலை தெற்கைச் சேர்ந்த முருகையா சந்தியா தேவி என்பவர் தன்னுடைய மகனை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்காக 2014ஆம் ஆண்டு தெமட்டகொடவைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு 20இலட்சம் ரூபாவும் அதே பகுதியைச் சேர்ந்த இன்னொருவருக்கு 9 இலட்சம் ரூபாவும் மற்றும் அளவெட்டியைச் சேர்ந்த ஒருவருக்கு 17 இலட்சம் ரூபாவினையும் கொடுத்துள்ளார்.

இவர்கள் மூவரும் ஒரே வலையமைப்பின் கீழ் செயற்படுவர்கள் எனவும் அவர்கள் ஒருமுறை அப்பெண்மணியின் மகனை நைஜீரியாவில் அநாதரவாக விட்டுச் சென்றதாகவும் பினனர் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் ஊருக்கு திரும்பியதாகவும் தெரிய வருகின்றது.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடிப்பொலிஸில் முறையிடச் சென்ற போது ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட தொகையுடைய பணம் சம்பந்தமான பிரச்சினைக்கு காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பிரிவில் முறையிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறைக்கு சென்றபோது தெமட்டகொடவில் பதிவு செய்யுமாறு கூறப்பட்டதாக தெரிவிக்கப்படுகின் றது. இதனால் அந்தத்தாய் முறைப்பாட்டினை பதிவு செய்ய முடியாமல் அவதிப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-60)

## நெல்லியடி நகரில் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட வேண்டும்

நெல்லியடி நகர்ப்பகுதியில் அண்மை நாட்களாக வீதி விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுவதனால் முக்கிய இடங்களில் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட வேண்டும் எனப் பொது மக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

நெல்லியடி நகரின் பிரதான சந்தியில் பொலிஸார் கடமையில் உள்ள போதும் சந்தைக்கு முன்பாக மூத்த விநாயகர் ஆலயப் பகுதி, மாலுசந்தி போன்றவற்றில் வீதி விபத்துக்கள் அதிகளவில் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதிவேகமாக வருவோரே வேகக்கட்டுப்பாட்டினை இழந்து விபத்துக்குள்ளாகின்றனர். இதனால் சாதாரண வேகத்தில் வருவோரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். எனவே விபத்து ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில் பொலிஸார் கடமையில் ஈடுபட வேண்டும் எனப் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)

## கஞ்சா கடத்திய இருவர் காட்டுப்பகுதியில் கைது!



பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை மூலம் வடமராட்சி கிழக்கு உடுத்துறைப்பகுதியில் எட்டு கிலோ மீற்றர் கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டதுடன் அதனை எடுத்துச் சென்ற அண்ணன் தம்பியாகிய இருவர் கைது செய்யப்பட்டதாக பருத்தித்துறை மதுவரித்திணைக்கள பொறுப்பதிகாரி சமிந்த ஸ்ரீமான் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் உடுத்துறைப் பகுதியில் உள்ள காடு ஒன்றின் வழியாக இயக்கச்சிப் பகுதிக்கு கஞ்சா கடத்தப்படுவதாக பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினருக்கு இரகசிய தகவல் ஒன்று கிடைக்கப் பெற்றது.

மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் சோதிநாதன், பிரதி ஆணையாளர் திஸநாயக்க, மதுவரித்திணைக்கள அத்தியட்சகர் மதன் மோகன் ஆகியோரின் வழி நடத்தலில் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் உடுத்துறை காட்டுப்பகுதியைச் சுற்றி வளைத்த போது காட்டுப் பகுதியூடாக துவிச்சக்கர வண்டியில் கஞ்சா பொதிகள் எடுத்து வந்த அண்ணன், தம்பி ஆகிய இருவர் கைது செய்யப்பட்டதுடன் எட்டுக் கிலோ கிராம் கஞ்சாப் பொதியும் மீட்கப்பட்டுள்ளது. (இ-60)

## விடுமுறை

ஆடி அமாவாசை தினத்தன்று (2-8-2016) நெல்லியடி வணிகர் கழகத்திற்குட்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு விடுறை அளிக்கப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-60)

## ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப்போட்டியும்

(கரணவாய்)

யாழ்.புலோலி வட மேற்கு அறிவகம் சனசமூக நிலையத்தின் 61 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜாவும் சிறப்பு விருந் தினராக வடமாகாண சபை உறுப்பினர்களான வே. சிவயோகன், ச.சுகிர்தன், க. தர்மலிங்கம் ஆகி யோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக பருத்தித்துறை பிரதேச சபை சனசமூக நிலைய அபிவி ருத்தி உத்தியோகத்தர் வெ.சுப்பிரமணியம், புலோலி வட மேற்கு கிராம அலுவலர் சி.தவமோகன், அறிவகம் சன சமூக நிலைய முன்னாள் தலைவர் அ.செல்வரத்தினம், பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நுவான் பீ. டந்த நாரயணா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-60)

## குறுந்திரைப்படம் தயாரிக்க நிதியுதவி வழங்கப்படும்

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலகம் குறுந்திரைப்படத் தயாரிப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் குறுந்திரைப்படம் ஒன்று தயாரிப்பதற்கு நிதி உதவி வழங்கவுள்ளது.

குறுந்திரைப்படம் தற்போதைய கலாசாரப் பிறழ்வுகளை மையமாகவும் அதன் தீமைகளை வெளிப்படுத்துவதாகவும் எமது பண்பாட்டுச் சிறப்புக்களை வளர்ப்பதாகவும் உள்ள கதை அம்சங்களை கொண்டதாக இருத்தல் வேண்டும்.

எனவே நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட குறுந்திரைப்படத் தயாரிப்பாளர் கள் தமது கதைக்கான எழுத்துருக்களை பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் 15.08. 2016 இற்கு முன்பாக வழங்கவும். தகுதியான கதைக்கான எழுத்துரு தெரிவு செய்யப்பட்ட பின்பு படத்தயாரிப்பாளருக்கான தெரிவும் இடம்பெற்று உதவி வழங்கப்படும் என பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ

## எழுத்தாளர்களுக்கு அழைப்பு

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர்ப் பிரதேச செயலகம் நல்லூர் பிரதேச எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் வருமானம் குறைந்த எழுத்தாளர்களின் தரமான ஆக்கங்கள்ள பதிப்புச் செய்வதற்கு நிதி உதவி செய்யவுள்ளது.

எனவே தகுதியான எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களுடன் பிரதேச கலாசார உத்தியோகத்தரை 15.08.2015 இற்கு முன்பாக பிரதேச செயலகத்தில் சந்திக்கும்படி பிரதேச செயலர் அறிவித்துள ளார். (இ




# தேசிய தமிழ்த்தின விழா கண்டியில்



இம்முறை தேசிய தமிழ்த் தின விழா கண்டியில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ளன. எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் எட்டாம் திகதி இடம்பெறவுள்ள இந் நிகழ்வுக்கு இந்தியா, மலேசியா நாடுகளிலிருந்து அரசியல் பிரமுகர்களும் பிரபல்யமான கலைஞர்களும் அறிஞர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் வி. இராதாகிருஸ்ணண் தெரிவித்தார்.

கண்டி நகரில் யட்டிநுவர வீதியில் அமைந்துள்ள சிட்டி விருந்துபசார மண்டபத்தில் தேசிய தமிழ்மொழி தின விழா தொடர்பாக கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் முக்கிய பிரமுகர்ளுடனான விசேட கலந்துரையாடல் கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் லோகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் வி. இராதாகிருஸ்ணண் இவ்வாறு இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

தேசிய ரீதியில் நடைபெறும் இந்தத் தமிழ்மொழி தின விழா முதன்முறையாக பல்வேறு சிறம்பம்சங்களுடன் கல்வி இராஜாங்க அமைச்சர் தலைமையில் இடம்பெறவுள்ளது. பாரம்பரிய கலையம்சங்களை பிரதிபலிக்கக்கூடிய வகையில் இலங்கையிலுள்ள தமிழ் . முஸ்லிம் பாடசாலை மாணவர்களின் கண்காட்சி ஊர்வலம் இடம்பெறவுள்ளது. இந்த ஊர்வலத்தில் வடக்கு, கிழக்கு மாணவர்களின் பாரம்பரியக் கலையம்சங்களைப் பிரதிபலிக்கும் விசேட கண்காட்சி ஊர்வலங்கள் இடம் பெறவுள்ளன.

புனித திரித்துவக் கல்லூரியின் கனிஷ்டப் பிரிவு மாணவர்களின் விளையாட்டு மைதானத்திலிருந்து காலை 9 மணியளவில் ஆரம்பமாகும் ஊர்வலம் டி. எஸ் சேனநாயக்க வீதி வழி வந்து யட்டிநுவர வீதி வழியாகச்சென்று மீண்டும்மைதானத்தைச் சென்றடையும்.

அதேவேளை இதனைத் தொடர்ந்து விசேட பரிசளிப்பு விழா கண்டி தர்மராஜக் கல்லூரியின் பிரதான கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக ஜனாதிபதியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டு சிறப்பிப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றோம். அத்துடன் வடக்கு மாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் உள்ளிட்ட அனைத்து முதலமைச்சர்கள், ஆளுநர்கள் அனைவருக்கும் இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக அழைப்பு விடுக்கவுள்ளோம் எனவும் அவர்மேலும்தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், தமிழ் வர்த்தக சங்கத்தின் பொருளாளர் சந்தரமூர்த்தி மற்றும் செயற்குழு உறுப்பினர் முத்தையா ஸ்ரீகாந்த் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (இ)

கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா:38<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6169 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா:23சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BSc<br>தொ.இ: G/5832 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 23<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6173 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 25சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 157cm<br>தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5838 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 23செவ் 4 இல<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி/அரச தொழில்<br>தொ.இ: B/6174 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 6 சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5842 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 38<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L சுவிஸ் PR<br>தொ.இ: B/6175 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 60<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:HNDA, M.COM/ அரசதொழில்<br>தொ.இ: G/5843 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.





நலலிணகக பொறிமுறைகள பறறிய கலநதாலோசனைககான செயலணியின வலயமடட மககள கருததறியும அமாவு நேறறு முலலைததீவு ஒடடுசுடடான பிரதேச செயலகததில இடமபெறறது. நேறறைய தினம மககள சமூகமடட பிரதிநிதிகள வருகை தநது தமது கருததுககளை பதிவு செயதனா. காணாமற போன உறவுகளை கணடுபிடிதது தருமாறும காணி சுவ்கரிபபு, முனனாள போராளிகள வாழவாதாரமினறி பாதிககபபடுகினறமை, பெண தலைமைததுவ குடுமபங்களின எதிாகால நிலை அதறகாக அரசாங்கம என்ன செயகிறது என பலவேறு வினாககளோடு மககள கருததுககளை பதிவு செயதனா.
(படங்கள்:-பனிககனகுளம செயதியாளா)

## வியாழன் மாற்றம் மஹா ஹோமசாந்தி பூசை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அருள்மிகு கந்த சாமி தேவஸ்தானத்தில் வியாழன் மாற்ற மஹா ஹோமசாந்தி பூசை எதிர்வரும் 4ஆம்திகதி வியாழக்கிழமை காலை 9மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வியாழபகவான் சிங்கராசியிலிருந்து கன்னி ராசிக்கு குருப்பெயர்ச்சி அடைவதால் வியாழ சாந்தி ஹோமம் எதிர்வரும் 4ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணி தொடக்கம் ஆலயத்தில் நடைபெறவுள்ளதாகவும் தோஷமுள்ள தோஷமற்ற அடியார்கள் இக்ஹோம சாந்தியில் பங்குபற்றி தங்கள் கிரக தோஷங்களை நிவர்த்தி செய்து கொள்ளுமாறும் இதற்குரிய கோமப் பொருட்களை ஆலயத்தில் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2-254)

## முகமாலையில் காணப்படும் வெடிபொருட்களை அகற்றி சொந்த நிலத்தில் குடியேற்றுங்கள்

### பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை

முகமாலை பகுதியில் காணப்படும் வெடிபொருட்களை அகற்றி சொந்த இடங்களில் தம்மை மீள்குடியேற்றுமாறு முகமாலைப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநாச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலர் பிரிவின் கீழுள்ள முகமாலை தெற்கு, அம்பளாவளை, இந்திராபுரம், மடத்தடி, நவனிவெளி, இத்தாவில் மேற்கின் ஒரு பகுதி உள்ளிட்ட பகுதிகளில் வெடிபொருட்கள் அகற்றும் பணிகள் முழுமை பெறாத காரணத்தால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மீள்குடியேற முடியாத நிலையில் இதனை அணடிய பகுதிகளிலும் பிறமாவட்டங்களிலும் வாழ்ந்து வருகின்றன.

தற்போது 248 குடும்பங்களைச சேர்ந்த 900 பேர் சொந்த இடங்களில் மீள்குடியேற்றுமாறு கோரி தமது பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

2000ஆம் ஆண்டு தொடக்கம், யுத்தம் காரணமாக மக்கள் குறித்த பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து சென்ற நிலையில், நீண்ட கால போர்முனையாகவும் யுத்த சூனிய பிரதேசமாகவும் காணப்பட்ட இப்பகுதியில் வெடிபொருட்கள் புதைக்கப்பட்டன.

அத்துடன் வெடிக்காத நிலையில் ஏராளமான வெடிபொருட்களுடன் ஆபத்தான பிரதேசமாகவும் குறித்த பகுதி காணப்படுவதாக மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வெடிபொருட்களை விரைவாக அகற்றி தம்மை மீள்குடியேற்றுமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-281-15)

## எமது கிளிநொச்சி மண்ணிலேயே மாவீரர் துயிலும் இல்லம் வேண்டும்

### பொறிமுறை செயலணி குழுவினரிடம் கூட்டாக மக்கள் கோரிக்கை



மாவீரர் துயிலுமில்லம் வேண்டும் என நல்லிணக்க பொறிமுறை செயலணிக்குழுவினரிடம் கூட்டாக மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற இரண்டாம் நாள் அமர்வின் போதே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவர்கள் மேலும் கோரியுள்ளதாகவது, நாம் இறந்த எமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தவும் எமது மனதில் உள்ள சோகங்களை வெளிக்காட்டவும் எமக்கு மாவீரர் துயிலும் இல்லம் வேண்டும். அதுவும் யுத்தம் வெற்றி கொள்ளப்பட்டதாக வெற்றி விழா கொண்டாடப்படுகின்ற மே மாதம் 18 ஆம் திகதி அன்று நாம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நாளாகவே பிரகடனப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

அவர்கள் தொடர்ந்து கூறுகையில், இறுதி யுத்தத்தில் நடைபெற்ற குற்றச்செயல்களை செய்தவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு மரணதண்டனைவழங்கப்படவேண்டும். இவ்விசாரணைகளை மேற்கொள்வதற்கு சர்வதேச நீதிபதிகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பான பிரதிநிதிகளும் இணைந்து நடத்தப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொணடதுடன இவ் விசாரணைகளுக்காக அமைக்கப்படுகின்ற அலுவலகங்கள எமது கிளிநொச்சி மண்ணிலேயே அமைக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர். (2-312)

## 07.2016 31 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 30 - மார்க் அந்தனியின் படைகள் ஆகுஸ்டசின் படைகளை வென்றனர். ஆனாலும் பெரும்பாலான அவனது படையினர் அவனை விட்டு விலகியதால் அவன் தற்கொலை செய்து கொண்டான்.
- 781 - பியூஜி மலையின் பதிவு செய்யப்பட்ட முதல் குமுறல் இடம்பெற்றது.
- 1492 - ஸ்பெயினில் இருந்து யூதர்கள் வெளியேற்றப்பட்டனர்.
- 1498 - தனது மூன்றாவது பயணத்தின் போது கொலம்பஸ் டிரினிடாட் தீவை அடைந்தார்.
- 1588 - ஆங்கிலேயர்களுக்கும் ஸ்பானியர்களுக்கும் இடையில் இடம்பெற்ற முதலாவது கடற்படைச் சமரில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்.
- 1655 - உருசியா லித்துவேனியாவின் தலைநகர் வில்னியூசைக் கைப்பற்றி ஆறு ஆண்டுகள் தமது ஆட்சியில் வைத்திருந்தது.
- 1658 - அவுரங்கசீப் இந்தியாவின் முகலாயப் பேரரசின் மன்னர் ஆனார்.
- 1741 - புனித ரோமப் பேரரசன் ஏழாம் சார்ல்ஸ் ஆஸ்திரியா மீது படையெடுத்தான்.
- 1805 - இந்திய விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிரித்தானியரால் தூக்கிலிடப்பட்டார்.
- 1865 - உலகின் முதலாவது குறுகிய அகல தொடருந்துப் பாதை ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாநிலத்தில் அமைக்கப்பட்டது.
- 1938 - கிரேக்கம், துருக்கி, ருமேனியா, யுகோசுலாவியா ஆகிய நாடுகளுடன் பல்கேரியா அமைதி உடன்பாட்டிற்கு வந்தது.
- 1954 - ஆர்டிடோ டெசியோ என்பவர் தலைமையிலான இத்தாலிய குழு ஒன்று கே-2 கொடுமுடியை எட்டியது.
- 1964 - சந்திரனின் முதலாவது மிகக்கிட்டவான படங்களை ரேஞ்சர் 7 விண்கலம் பூமிக்கு அனுப்பியது.
- 1971 - அப்போலோ 15 விண்வெளி வீரர்கள் லூனார் ரோவர் வண்டியை சந்திரனில் செலுத்தி சாதனை புரிந்தனர்.
- 1976 - வைக்கிங் 1 விண்கலத்தினால் செவ்வாய்க் கோளில் எடுக்கப்பட்ட புகழ்பெற்ற மனித முகம் படத்தை நாசா வெளியிட்டது.
- 1987 - ஆல்பர்ட்டா மாநிலத்தில் எட்மன்டன் நகரில் இடம்பெற்ற சூறாவளியில் சிக்கி 27 பேர் உயிரிழந்தனர்.
- 1988 - மலேசியாவில் பாலம் ஒன்று உடைந்து வீழ்ந்ததில் 32 பேர் கொல்லப்பட்டு 1,674 பேர் படுகாயமடைந்தனர்.
- 1992 - நேபாளத் தலைநகர் கத்மந்துவில் தாய்லாந்து விமானம் ஒன்று வீழ்ந்ததில் 113 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - பிடெல் காஸ்ட்ரோ தனது அதிகாரத்தை தற்காலிகமாக தனது சகோதரர் ராவுல் காஸ்ட்ரோவிடம் ஒப்படைத்தார்.
- 2006 - ஈழப்போர்: திருகோணமலையில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் 19 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.
- 2007 - வட அயர்லாந்தில் பிரித்தானிய இராணுவம் தனது மிக நீண்ட கால இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி அங்கிருந்து வெளியேறியது.

### பிறப்புகள்

- 1704 - கேப்ரியல் கிராமர், சுவிட்சர்லாந்து கணிதவியலாளர். (இ. 1752)
- 1874 - செய்குத்தம்பி பாவலர், தமிழ் எழுத்தாளர், சதாவதானி . (இ. 1950)
- 1912 - மில்ட்டன் ஃப்ரீட்மன், பொருளியல் நிபுணர். (இ. 2006)
- 1966 - ஜே. கே. ரௌலிங், ஆங்கில எழுத்தாளர்.

### இறப்புகள்

- 1805 - தீரன்சின்னமலை, குறுநில மன்னன். (பி. 1756)
- 1980 - முகமது ரபி, புகழ் பெற்ற இந்தியப் பின்னணிப் பாடகர். (பி. 1924)
- 1996 - அரங்க. சீனிவாசன், தமிழகக் கவிஞர், எழுத்தாளர் . (பி. 1920)
- 2014 - சாரல்நாடன், ஈழத்து எழுத்தாளர்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 90 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 80 | 100 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 450 | 400 | 400 | 400 |
| தக்காளி | 100 | 100 | 60 | 100 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 80 | 100 | 80 | 100 |
| கோவா | 140 | 180 | 80 | 140 | 120 | 140 |
| கரட் | 160 | 200 | 110 | 150 | 160 | 200 |
| பூசணி | 80 | 100 | 60 | 80 | 80 | 80 |
| புடோல் | 50 | 60 | 50 | 60 | 60 | 70 |
| வாழைக்காய் | 60 | 140 | 90 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 70 | 100 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 70 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 160 | 400 | 120 | 280 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 50 | 50 | 80 | 60 |
| கருணைக்கிழங்கு | 100 | 150 | — | 150 | — | 120 |
| பயற்றங்காய் | 80 | 120 | 60 | 100 | 60 | 80 |
| லீக்ஸ் | 140 | 160 | 80 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 80 | 120 | 60 | 100 | 100 | 100 |
| கறிமிளகாய் | 300 | 100 | 200 | 300 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 100 | 150 | 200 | 200 |
| போஞ்சி | 180 | 200 | 130 | 180 | 200 | 180 |
| கத்தரிதம்பள்ள | 80 | 100 | 70 | 60 | 100 | 90 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 120 | 100 | 100 | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 15-25 | 40 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 200 | — | — | — | — | 100 |
| வெங்காயப்பூ | 140 | 100 | 100 | 150 | 200 | 200 |
| முள்ளங்கி | 30 | 60 | 20 | 40 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 10 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 50 | 60 | 30 | 50 | 80 | 50 |

# ஆச்சரியமடைய வைக்கும் எதிரணியின் நிதிசேகரிப்பு

(கொழும்பு)

**கூட்டு எதிர்க்கட்சியினர் கண்டியில் இருந்து ஆரம்பித்த பாதயாத்திரைக்காக முதல் நாளில் மாத்திரம் 18.5 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சித் தரப்பு தெரிவித்துள்ளது.**

## ஒரு நாளில் 18 மில்லியன் செலவு

பாத யாத்திரைக்காக மகிந்தானந்த அளுத்கமகே, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, விமல் வீரவன்ச ஆகியோர் தமது ஆட்சிக் காலத்தில் தம்மிடம் பிரதிபலன்களை பெற்றுக்கொண்ட வர்த்தகர்கள் மற்றும் ஆதரவாளர்களிடம் நிதி சேகரித்துள்ளனர்.

எக்ஸஸ் நிறுவனத்தின் தலைவர் சுமால் பெரேரா 30 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளார்.

ஊடக நடவடிக்கைகளுக்காக பிரபல தனியார் தொலைக்காட்சி ஒன்றின் தலைவர் 40 மில்லியன் ரூபாவை அனுசரணையாக வழங்கியுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷவுடன் நடந்த விரிவான பேச்சுவார்த்தைகளின் பின்னரே குறித்த தொலைக்காட்சி நிறுவனம் இந்த நிதியை வழங்கியுள்ளது.

அதேவேளை நிதி வழங்குமாறு விடுத்த கோரிக்கையை பிரபல வைத்தியசாலை நிறுவனம் ஒன்று நிராகரித்துள்ளது. இதனை தவிர நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ 12 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளார். (இ-7-10)

## வடக்கின் நிலம் மற்றும் வீடுகள் பிரச்சினைக்கு நடுவர் குழு நியமனம்

(கொழும்பு)

வடக்கில் பாரிய பிரச்சினையாக காணப்படும் நிலம் மற்றும் வீடுகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு நடுவர் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த கால யுத்தங்களின் போது பலவந்தமாகவோ அல்லது வேறு முறையிலோ பொது மக்களது நிலங்கள் மற்றும் வீடுகள் கையகப்படுத்தப்பட்டிருக்குமாயின்,

அதனை உரியவர்களிடம் கையளிப்பதற்கான சட்டங்கள் தற்போது உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

### சாரதி அனுமதிப்பத்திரத்திற்காக

## ஆள்மாறாட்டம் செய்தவர் கைது

திருகோணமலையில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான பரீட்சையில் ஆள் மாறாட்டம் செய்த நபரை இரண்டு இலட்சம் ரூபாய் சரீர பிணையில் செல்ல, திருகோணமலை நீதிமன்ற நீதவான் எல்.எச்.விஸ்வானந்த பெர்னாண்டோ நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

வெருகல், மாவடிச்சேனை பகுதியைச்சேர்ந்த 20 வயதுடைய ஒருவரே பிணையில் விடுவிக்கப்பட்டார்.

குறித்த சந்தேகநபர் கடந்த வியாழக்கிழமை நண்பர் ஒருவருக்கு சாரதி அடையாள அட்டை பெறுவதற்கான பரீட்சையின் போது, நண்பரின் அடையாள அட்டையினை கொண்டு சென்று பரீட்சை எழுதிய போதே மோட்டார் போக்குவரத்து திணைக்கள பரீட்சை மேற்பார்வையாளர்களினால் கண்டு பிடிக்கப்பட்டு, சந்தேகநபரை திருகோணமலை பொலிஸ் நிலையத்தல் ஒப்படைக்கப்பட்டதாக திருகோணமலை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபரை பொலிஸார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திருகோணமலை நீதி மன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டதோடு அடுத்த வழக்குத் தவணை ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி நீதிமன்றுக்கு சமுகமளிக்குமாறு உத்தரவிட்டார்.(இ-7-10)

## வாரம் ஒரு தகவல்

### இலக்கிய மேதையின் வாழ்வில்

எமிலிஸோலா சிறந்த பிரெஞ்சு எழுத்தாளர். எளிய குடும் பத்தில் பிறந்து ஏழ்மையில் வருந்தியவர். இவருக்குத் தம் குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பு தம் எழுத்தைக் கொண்டே நடத்த வேண்டியிருந்தது. ஆகவே நாள் முழுதும் தளராது எழுதிக் கொண்டிருந்தார். இவரது படைப்புக்களில் நீதியும் நாட்டின் சிறப்பும் ஒளி வீசிக் கொண்டிருக்கும்.

ஒரு நாள் இவரது குடும்பச் செலவுக்குப் பணம் இல்லாதிருந் தது. இவரது மனைவி இவரைப் புத்தகக் கம்பனியாரிடமிருந்து கொஞ்சம் பணம் வாங்கி வர வலியுறுத்திக் கொண்டிருந்தார்.

தாம் பிரசுரம் செய்யக் கொடுத்த புத்தகத்துக்குப் புத்தகக் கம்பனியார் பணம் தருவாரோ என்ற ஐயம் இவருக்கு. எனி னும் மனைவியின் வற்புறுத்தலைப் பொறுக்க இயலாத இவர், அக் கம்பனியை நோக்கி நடக்கலானார்.

அப்போது நல்ல மழையும் காற்றும். பீத்தல் குடையொன்றைப் பிடித்துக் கொண்டு இயற்கையுடன் போராடியவாறு ஸோலா, புத்தகக் கம்பனியைச் சென்றடைந்தார். அங்கு தமது புத்தகங்கள் பரபரப்புடன் விற்றுக் கொண்டிருப்பதை ஸோலா கண்டார். ஆனால் இவர் அங்கே வந்து நின்று கொண்டிருப்பதை யாருமே கவனிக்கவில்லை. தமது கம்பனிக்கு ஸோலா வந்திருப்பதை நீண்ட நேரத்துக்குப்பிறகு கண்டார் முதலாளி. அவரை இனிய முகத்தோடு வரவேற்றுக் கொண்டார்.

ஸோலா தயங்கியபடியே கம்பனி முதலாளியிடம் ஐயா, கொஞ்சம் பணம் உங்களால் தர முடியுமா? என்று கேட்டார்.

முதலாளி பற்களெல்லாம் தெரியச் சிரிக்கலானார். அவர் தமது மனைவியை அழைத்து ஸோலா வந்திருக்கிறார். அவ ருக்குக் கொஞ்சம் பணம் வேண்டுமாம் என்று தெரிவித்தார்.

இம் மொழிகளைக் கேட்ட ஸோலாவின் முகத்தில் ஏமாற் றம் பரவியது. பணம் கிடைக்காதோ என்ற ஐயம் அவருக்கு.



இந்நேரம் முதலாளி ஒரு கவரை எடுத்து ஸோலா, இதை உங்களுக்கு அனுப்பவே இருந்தேன்.நீங்களே வந்து விட்டீர்கள்; கொண்டு செல்லுங்கள் என்று சொல்லி அதைக் கொடுத்தார்.

என்னமோ ஏதோ என்ற வியப்புடன் ஸோலா அக்கவரை வாங்கிப் பிரித்துப் பார்த்தார்.அதனுள் 18 ஆயிரம் பிராங்க் பணத் திற்குரிய செக் ஒன்றிருந்தது. இன்பக்கடலில் திளைத்தார் ஸோலா.

செக்கை மாற்றிப் பணம் வருவது வரை குடும்பம் பட் டினியால் வாடிவிடுமே என்ற நினைவு ஸோலாவிடம் எழுந் தது. செக்கை வாங்கிய முதலாளிக்கு அவர் நன்றி கூறிவிட்டு, ஏதேனும் சில்லரைப்பணம் இருந்தால் கொஞ்சம் கொடுங்கள் எனக் கேட்கலானார். தமது கையில் இருந்த பணத்தையெல் லாம் சேர்த்துக் கொடுத்தார் முதலாளி. ஸோலா முகத்தில் மலர்ந்த மலர்ச்சியை என்னவென்று கூறுவது? காகிதத்தில் இருந்த பணத்தைவிடக் கையில் ரொக்கமாக இருந்ததே அவருக்கு அப்போது மதிப்புடையதாய் இருந்தது. அதைக் கொண்டு அன்றைய செலவை நடத்திவிடலா மல்லவா!

**கவிஞர் தே.ப.பெருமாள்**

## இப்படியொரு இராட்சத திமிங்கலமா? ஆச்சரியத்தில் உறைந்த மீனவர்

அவுஸ்திரேலியாவில் நினைத்துக் கூட பார்க்க முடியாத அளவுக்கு இராட்சத திமிங்கலம் ஒன்று கடலில் மிதந்து வந்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் பெர்த் நகரில் உள்ள கடலில் mr Watkins(36) என்ற மீனவர் மீன் பிடித்துக்கொண்டிருந்தார்.

அப்போது, இவரது படகுக்கு அருகில் ஏதோ ஒன்று மிதந்து வந்துள்ளது, அதனைப்பார்த்த இவர் அது படகு அல்லது வெப்பக் காற்று பலூனாக இருக்கும் என்று நினைத்துள்ளார்.

ஆனால் மெது மெதுவாக அருகில் நெருங்கி வர, அதனைப் பார்த்த இவருக்கு ஆச்சரியம் ஏற்பட்டுள்ளது, ஏனெனில் அது இராட்சத திமிங்கலம். பார்ப்பதற்கு இளஞ் சிவப்பு நிறத்தில் இருந்த அந்த திமிங்கலத்தின் வயிற்றில் அதிக காற்று நிரப்பப்பட்டுள்ளதால், அதன் உருவம் அளவில் அதிகரித்துள்ளது . (இ-7-10)

## கல்வி அமைச்சின் 22 சாரதிகள் பணிநீக்கம்

(கொழும்பு)

கல்வி அமைச்சில் சாரதிகளாக பணிபுரிந்த 22 சாரதிகளின் பதவிகள் பறிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சாரதிகள் 22 பேரும் கல்வி அமைச்சின் வாகனங்களை இரவு வேளைகளில் டெக்ஸிகளாக பயன்படுத்தியதால் கல்வி அமைச்சினால் இவர்களை பதவிநீக்கம் செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் பாதுகாப்பு படையினர் இல்லாமல் தனது சாரதியுடன் மிரிஹானையில் இருந்து தனது வீட்டை நோக்கி சென்றுகொண்டிருந்த வேளையில் அமைச்சரின் வாகனத்தை முந்திக் கொண்டு சென்ற வாகனம் ஒன்று அமைச்சரின் வாகனத்தை இடைமறித்து நின்றுள்ளது.

பின்னர் அதிலிருந்து இறங்கிய சாரதி அமைச்சரின் சாரதியை தகாத வார்த்தையில் திட்டியுள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தில் வாகனத்தின் கண்ணாடியை கீழிறக்கி யார் இவர் என அவதானித்த அமைச்சர் தனது கல்வி அமைச்சின் வாகனத்தை செலுத்துபவர் என்று தெரிந்து கொண்டதுடன், குறித்த நபர் தொடர்பிலும், அவர் செலுத்தி வந்த வாகனம் தொடர்பிலும் தலங்கம பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து தலங்கம பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளுக்கு அமைய கல்வி அமைச்சுக்கு சொந்தமான வாகனங்கள் 22 இரவு நேரங்களில் டெக்ஸிகளாகப் பயன்படுத்துவது தொடர்பில் அறிய வந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவை தொடர்பில் ஆராய்ந்த கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் குறித்த 22 சாரதிகளையும் பணிநீக்கம் செய்யுமாறு உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# பாதயாத்திரையில் பங்கேற்றவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை



## சு.க. செயலாளர் துமிந்த எச்சரிக்கை

(கொழும்பு)

**மகிந்த அணியின் அரச எதிர்ப்பு பாதயாத்திரையில் பங்குபற்றிய சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்க எச்சரித்துள்ளார்.**

நீர்கொழும்பு பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டபின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பதவி ஆசைக்காகவே பாதயாத்திரை முன்னெடுக்கப்படுகின்றது. இந்த பேரணிக்கு சுதந்திரக் கட்சியின் அனுமதி வழங்கப்படவில்லை.

எனவே கட்சியின் உத்தரவையும் மீறி பங்கேற்ற உறுப்பினர்களுக்கு எதிராக கட்சியின் மத்திய செயற்குழு கடுமையான நடவடிக்கை எடுக்கும் எனவும் அதற்குரிய நாள் நெருங்கி விட்டதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் உத்தரவையும் மீறி அரச எதிர்ப்பு பேரணியில் களமிறங்கிய உறுப்பினர்களுக்கு எதிராக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆராய்வதற்கு சுதந்திரக்கட்சியின் மத்தியகுழு கூட்டம் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடவுள்ளதாகவும் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# துறைமுகம், விமானநிலையத்தை சீனாவிற்கு அரசு விற்கவில்லை

## அமைச்சர் மலிக் தகவல்

நாம் அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தள விமானநிலையம் என்பவற்றை சீனாவுக்கு விற்றுவிட்டோம் என வெளிவரும் செய்திகளில் உண்மையில்லை என்று அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்தார்.

அத்துடன் இவற்றை விற்கும் செயலில் தாம் ஈடுபடவில்லை என்றும் தேசிய வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.

எனவே நாம் இவற்றை சீனாவுக்கு விற்றுவிட்டோம் என வெளிவரும் செய்திகளில் உண்மையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் சீனாவுடன் இணைந்தே அம்பாந்தோட்டை அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் இலங்கையில் கைத்தொழில் வலயம் ஒன்றை உருவாக்க சீனா 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தை கேட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளதுடன், குறித்த திட்டத்தின் வேலைகள் ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மத்தள விமான நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம் ஆகிய இடங்களுக்கு ஆய்வு சுற்றுலா சென்றபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவுடன் சீனா உயர்ஸ்தானிகர், அமைச்சர் சரத் அமுனுகம உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# எலிக்காய்ச்சலால் 2500 பேர் பாதிப்பு

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 2500 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த தொற்றினால் இதுவரையில் 20 பேர் வரை உயிரிழந்துள்ளதாக தொற்றுநோய் ஆராய்ச்சிப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பபா பலிஹவடன தெரிவித்தார்.

எலிக்காய்ச்சல் காரணமாக நுரையீரல் மற்றும் சிறுநீரகங்களுக்கு பாதிப்பு ஏற்படலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சேற்று நிலங்கள் மற்றும் நீர் நிலைகளில் தொழில் புரிவோருக்கு எலிக்காய்ச்சல் பரவக்கூடிய சாத்தியம் அதிகமாக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# தமிழ் சினிமா வரலாறு

## தேர்தலில் சிவாஜி தோல்வி 221

தேர்தல் தோல்விக்குப் பிறகு ரசிகர் மன்றத்துப் பிள்ளைகள் மட்டும் தான் என்னுடன் இருந்தார்கள். அரசியலைச் சேர்ந்தவர்கள் வேறு யாருமே கிடையாது.

அரசியலில் பல நேரங்களில் எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்திருக்கிறேன். அரசியலுக்குள்ளே அரசியல் பண்ணுவது எனக்கு ஒத்துவரவில்லை. அவ்வளவு தான் நான் சொல்ல முடியும். நான் தெரிந்தோ தெரியாமலோ ஒரு மாபெரும் தவறு செய்தேன் என்றால் அது அரசியலில் புகுந்ததும் அதைக் கையில் எடுத்துக்கொண்டு சுயமாக ஒரு கட்சி ஆரம்பித்ததும் தான்.

காமராஜர் பிறந்த விருதுநகர் மண் அவரைத் தோற்கடித்தது. நான் வளர்ந்த தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவையாறு மண் என்னைத் தோற்கடித்தது.

### கலைஞர்களுக்கு வேண்டுகோள்

என் அரசியல் அனுபவத்தின் அடிப்படையில் நான் கற்றுக்கொண்ட நல்ல பாடங்களை என் கலையுலக நண்பர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.


கலைஞர்களே! நீங்கள் அரசியலில் அனுதாபியாக இருங்கள். ஆனால் அதனுள் நுழையாதீர்கள். அரசியல்வாதியின் நண்பனாய் இருங்கள். ஆனால் நீங்கள் அரசியல்வாதியாகி விடாதீர்கள். அதில் சென்று உறுப்பினராகி அந்த வலையில் மாட்டிக்கொள்ளாதீர்கள். உங்கள் நண்பர் ஒரு அரசியல்வாதியா? அவருக்கு உதவி செய்யுங்கள். கட்சியின் கொள்கைகளை ஆதரியுங்கள். பரவாயில்லை நீங்களே கட்சிக்காரனாக ஆகிவிடாதீர்கள். நீங்கள் பாடகனாகவே நீங்கள் ஆகிடவேண்டாம்.

### கெட்டபின்பு ஞானி

ஆண்டவனுடைய எண்ணமோ, மக்களுடைய எண்ணமோ தெரியவில்லை நான் எவ்வளவோ முயற்சிகள் எல்லாம் செய்து பார்த்தேன். இருந்தும் நம்மை தூக்கித் தள்ளிவிட்டார்கள். நீ நடிகன் நடிகனாகவே வாழ்க்கையை ஆரம்பித்தாய். நடிகனாகவே இருக்கப் போகிறாய். நடிகனாகவே சாகப்போகிறாய். ஆகையால் மற்ற வேலைகள் எல்லாம் உனக்கு வேண்டாம். நீ எப்போதும் கலையுலகின் நிரந்தரமான நடிகன்! என்று மக்கள் நினைத்திருக்கலாம்.

அதனால்தான் அரசியலில் இருந்து முற்றிலும் விலகி நடிகனாக மட்டும் இருக்கிறேன். அரசியலில் என்னவென்றும் மக்களிடத்தில் நாம் அரசியல்வாதியாக எவ்வாறு இருந்தோம் என்றும் நடிகனாக எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் அனுபவத்தில் தெரிந்து கொண்டவன் நான். கெட்ட பின்பு ஞானி! இவையெல்லாம் தெரிந்துகொள்ள 60 வருடங்கள் ஆகிவிட்டன. அரசியலில் நான் தோற்றதாக நினைக்கவில்லை. ஆனால் ஏமாற்றப்பட்டேன்.

இவ்வாறு சிவாஜி குறிப்பிட்டுள்ளார்.



எம்.ஜி. ஆரும் சிவாஜிகணேசனும் இரு துருவங்களைப் போன்றவர்கள் என்று அவர்களுடைய ரசிகர்கள் எண்ணினார்கள். ஆனால் இருவரும் வெவ்வேறு நிகழ்ச்சிகளில் பேசியிருக்கிறார்கள்.

சிவாஜிகணேசன் வாழ்க்கை வரலாறு எனது சுயசரிதை என்ற பெயரில் புத்தகமாக வெளிவந் துள்ளது.

சென்னை தொலைக்காட்சியில் பல ஆண்டுகள் தயாரிப்பாளராகப் பணிபுரிந்து பின்னர் உலகக் குழந்தைகள் நல நிறுவனத்தில் (யூனிசெப்) தகவல் தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற டாக்டர் டி. எஸ். நாராயணசாமி சிவாஜியுடன் பல ஆண்டுகள் பழகி சிவாஜியிடம் கேள்விகள் கேட்டு இதற்கு பதில்களைப் பெற்று இந்நூலை உருவாக்கியுள்ளார். கேள்வி -பதில் ரூபத்தில் இந்த நூல் அமைந்துள்ளது.

சிவாஜியின் மகன்களான ராம்குமார்,பிரபு சிவாஜியின் தம்பி மகன் கிரிசண்முகம் ஆகியோரைக் கொண்ட சிவாஜி பிரபு சாரிட்டிஸ் டிரஸ்ட் இந்த நூலை வெளியிட்டுள்ளது. இதன் மூலம் கிடைக்கும் வருமானம் கல்விப்பணிக்கு செலவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (தொடரும்...)

## பாதயாத்திரையில் கலந்துகொண்ட மகிந்த திடீரென அ'புர கூட்டத்தில்



கூட்டு எதிர்க்கட்சியின் நடை பவனியில் கலந்துகொண்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் நண்பகல் அநுராதபுர, கலென்பிந்துனுவெவ கூட்டத்திலும் கலந்துகொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் பாதயாத்திரைகள் உதுவன் கந்தை பிரதேசத்தில் ஆரம்பமாகும் போது மகிந்த ராஜபக்ஷ அந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டுள்ளார். பின்னர், பாதயாத்திரையின் இடையில் திடீரென அவர் தலைமறைவாகியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7-10)

# கிழக்கில் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்ட 4000 மில்.ரூபா திட்டம் மீளப்பெறப்படும்

### அமைச்சர் அமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மீன்பிடி மற்றும் நீரியல்வளங்கள் அமைச்சினால் முன்னெடுக்க திட்டமிடப்பட்ட 4000 மில்லியன் ரூபா பெறுமதியான கருத்திட்டம் மீளப் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர "த ஐலண்ட்" பத்திரிகைக்கு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப்பிரதேசத்தில் தேசிய நீரியல்வள பண்ணை ஒன்றை அமைக்க தமது அமைச்சு திட்டமிட்டிருந்தது.

இதன் மூலம் சுமார் 10 ஆயிரம் வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த சுமார் 1200 ஏக்கர் காணி பயன்படுத்தப்படும்.

கிழக்கு மாகாணத்தின் சில அரசியல் தலைமைகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் ஒரு சில வலுவற்ற காரணங்களைக் கூறி தொடர்ச்சியாக இத் திட்டத்தை எதிர்த்து வருகின்றனர்.

இந்த பிரதேசத்திலுள்ள இத்தகைய எதிரணியினரின் தவறான புரளிகள் காரணமாக பொதுமக்களும் இதனை எதிர்க்கின்றனர்.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு இக் கருத்திட்டம் தேவையற்றதாக மாறியுள்ள நிலையில் அதனை வடமாகாணத்தில் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன்மூலம் மட்டக்களப்பு மக்களின் வருமானம் ஈட்டும் சந்தர்ப்பங்களும் இல்லாமல் போகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# ரோஹித பயன்படுத்திய கார் மீண்டும் களத்தில்





(கொழும்பு)

பிலியந்தல மக்குலுதுவ ரதன மாவத்தையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த வருடம் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட Nissan GTR 3800ரக கார் கடந்த மகிந்த ஆட்சியில் இராணுவத்தினருக்கு வாகனங்களை வழங்கிய நபர் ஒருவர் இறக்குமதி செய்து மறைத்து வைத்திருந்த கார் என முதல் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்த கார் பதிவு செய்யப்படவில்லை என்பதுடன் போலி இலக்கத் தகட்டை பயன்படுத்தி கார் ஓட்டப் பந்தயங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அடிக்கடி காரின் வர்ணத்தை மாற்றி வந்துள்ளதாகவும் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

கார் மறைத்து வைக்கப்பட்டிருந்த வீட்டின் உரிமையாளரே கார் பற்றிய தகவலை பொலிஸாருக்கு தெரியப்படுத்தியிருந்ததாக அப்போது பொலிஸ் ஊடகப் பேச்சாளராக இருந்த அஜித் ரோஹண தெரிவித்திருந்தார்.

எனினும் இதற்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள் குறித்து எந்த தகவல்களும் வெளியாகவில்லை.

இந்த நிலையில், நாமல் ராஜபக்ஷ அண்மையில் கைது செய்யப்படுவதற்கு முன்னர் வெளியிட்டிருந்த கருத்துக்களை அடுத்து பந்தயக் கார் பற்றிய செய்தி மீண்டும் களத்திற்கு வந்துள்ளது.

எமக்கு எதிராக பல்வேறு குழுக்கள் பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தன. எமது பந்தயக் கார்கள் பற்றி பேசினர். எமது குதிரைகள் பற்றி பேசினர். எனது ஹோட்டல் குறித்து கதைத்தனர். வெளிநாட்டில் இருக்கும் பணத்தை பற்றி பேசினர். இவை அனைத்தும் உண்மையென ஒப்புவிக்க முடியாமல் போயுள்ளது. தற்போது பொய் வழக்கொன்றில் என்னை சிக்க வைத்து சிறையில் அடைக்க முயற்சித்து வருகின்றனர் என நாமல் ராஜபக்ஷ கூறியிருந்தார்.

பிலியந்தலையில் கார் கைப்பற்றப்பட்ட சந்தர்ப்பத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இளைய புதல்வர் ரோஹித ராஜபக்ஷ அந்த காரை கார் ஓட்டப் பந்தயத்தில் பயன்படுத்தியதை உறுதிப்படுத்தும் புகைப்படங்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## பிரபல பாடகிக்கு அழைப்பு

(கொழும்பு)

பிரபல பாடகி சமிதா எரந்ததி முதுன் கொட்டுவவை விசாரணைக்கு வருமாறு குற்றப் புலனாய்வு பிரிவினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கொலை செய்ய முயன்றவருக்கு உதவியதாக குற்றஞ்சாட்டி அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## பாதயாத்திரையால் அசம்பாவிதம் நிகழ்ந்தால் உடன் அறிவியுங்கள்

### நீதிபதி உத்தரவு

(கொழும்பு)


கூட்டு எதிர்க் கட்சியினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பாதயாத்திரையால் அசம்பாவிதங்கள் இடம்பெற்றால் அது தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிவித்து தேவையான பாதுகாப்பு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு கொழும்பு மேலதிக நீதவான் நீதிபதி ஷானிமா விஜேபண்டார பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கூட்டு எதிர்க் கட்சியின் பாதயாத்திரை கிரிபத்கொட முதல் கொழும்பு வரையான பிரதேசத்துக்குள் நுழைவதை தடுக்குமாறு உத்தரவு வேண்டி பேலியகொட பொலிஸாரினால் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்வைத்த வேண்டுகோளை பரிசீலனை செய்த பின்னர், நீதிபதி இவ்வாறு உத்தரவிட்டார்.

இந்த வேண்டுகோள் நேற்று முன்தினம் நீதிமன்றத்திடம் பொலிஸாரினால் முன்வைக்கப்பட்டிருந்தது.

கூட்டு எதிர்க் கட்சியின் பாதயாத்திரையில் இதுவரை மக்கள் நடவடிக்கைகளுக்கு எந்தவித இடையூறும் ஏற்படவில்லையெனவும், சட்ட மீறல்கள் மற்றும் அசம்பாவிதங்கள் என்பன நடைபெறவில்லையெனவும் நீதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7-10)

## 21.06.2016 அன்று இறைபதம் அடைந்த அமரர் திருமதி இராஜநாயகி திருச்செந்திநாதன் (நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம், தெல்லிப்பழை) அவர்களின் நினைவுக் குறிப்பு....



1986ஆம் ஆண்டுக்கு முன்னரான காலத்திலிருந்துதான் நான் எழுத தொடங்க வேண்டி இருக்கின்றது.அந்த நேரத்தில் வேலையில்லா பட்டதாரி கதாநாயகன்போல் நான் இருந்தேன். எனக்கு சொந்தமாக சைக்கிள் ஒன்றே இருந்தது.அதனை தந்தை திருகோணமலையிலிருந்து கொண்டு வந்தார். சைக்கிள் எனக்கு மட்டுமல்ல அண்ணருக்கும் உரிமையாய் இருந்தது.

காலையில் எனது நாளாந்த கடமையில் அண்ணரை சைக்கிளில் வேலைக்கு (உடுவில் A.G.A Office) ஏற்றி இறக்குவது எனது வேலையாய் இருந்தது. காரணம் அவரை இறக்கிய பிறகு எனது அலுவலுக்கு சைக்கிள் தேவையாய் இருந்தது. அப்போதுதான் அந்தப்பெண்ணை முதன்முதலில் பார்த்தேன். அண்ணன் மேசையில் இருக்கும்போது இருவரும் கதைத்துக்கொண்டிருப்பதை நான் அங்கு செல்லும் வேளையில் பார்த்திருக்கிறேன்.

அவரது தோற்றப்பொலிவு நடை,உடை எல்லாம் எங்கள் குடும்ப அங்கத்தவர்களுடன் ஒத்துப்போகக்கூடியதாய் இருந்தது. இருவருடைய உறவும் மிகவும் பலமுடையதாகக்காணப்பட்டது அந்த இணைப்பு எமது வீட்டுக்கு அவரை முதல் மருமகளாக அழைத்துக் கொண்டு வந்து விட்டது.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயதிருமணமண்டபத்தில் கல்யாணம் அமர்க்களமாக நடைபெற்றது. அப்போது நாங்கள் அவரை அண்ணி என அழைக்கத் தொடங்கினோம்.உறவுகள் எவ்வளவு முக்கியமானது. எல்லா உறவுகளுக்கும் பல கதைகள் உள்ளன.அம்மா ,அப்பா ஸ்தானங்களிலிருந்து நாங்கள்அதற்குரிய குணவியல்புகளை எதிர்பார்க்கின்றோம்.அண்ணியிடமிருந்து பல குணவியல்புகள், சந்தோசங்கள் எல்லாம் எமது குடும்பத்திற்கு நிறையவே கிடைத்தன.

எங்களது கூட்டுக் குடும்பத்தில் பலரோடும் அவர் பொறுமையாக செயற்பட்டார். குடும்பத்தின் முதற் பேர்த்தி கார்த்திகா பிறந்து வீடு வந்தபோது முதலில் தூக்கி கொஞ்சி அரவணைத்து அண்ணிதான். 1995ஆம் ஆண்டு எனது திருமணத்தின் போது தாய்,தந்தை ஸ்தானத்தில் இருந்து எனக்கு தெத்தம்பண்ணி என்னை வாழ்த்தியவர்கள் அண்ணியும் அண்ணனும் தான்.

1995ஆம் ஆண்டிற்கு பின்னர் ஏற்பட்ட இடப் பெயர்வில் அண்ணன் குடும்பம் வன்னிக்கு போன பின்னர் எங்களுடனான அவர்களது குடும்பத்தொடர்பு சற்று விரிசல் கண்டது.இடையிடையே குறுஞ்செய்திகளாக யாராவது மூலமாகவோ கிடைக்கப்பெறும் தகவல் மூலம் நான் அவர்களது குடும்பநிலையை அறிந்து கொண்டேன்.

அண்ணியின்வேலைவன்னியிலிருந்து தெல்லிப்பழைக்கு இடம்மாறியது.நான் ஓய்வு நாட்களில் அவரின் வேலைத்தளத்திற்கு சென்று கதைத்து விட்டு வருவேன். எல்லாமே அமைதியாக நடந்து கொண்டிருந்தது.

20.07.2016 காலை 7.30 மணியளவில் மருதனார்மட சந்தையின் உட்பக்கத்தில் " சிவா அண்ணை என்ன இங்க நிக்கிறியள் மரக்கறி எல்லாம் வாங்கிறியள் என்னவும் விசேசமா?" என நண்பர் கேட்டார். சொன்னேன் நடந்த கதையை சொன்னேன். அதற்கு அவர் " அட உங்கட அண்ணியே எனக்கு தெரியாமல் போச்சு ஏதேனும் தேவை எண்டு போனா சிரிச்சுக்கொண்டு உடன உதவி செய்வா என்ன பேர் சொன்ன னீங்கள் " என்றார்.

அதற்கு நான் ''ராஜநாயகி'' என்றேன்.

சி.கதிர்காமநாதன் (சிவா)

# பயனாளிகளுக்கான மணல் பெறும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டன

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் அறிவிப்பு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மணல் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்குரிய மணல் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற விவசாயக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டவிரோத மணல் அகழ்வில் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதுடன் வீதிகளும் மிக மோசமாக பாதிக்கப்படுகின்றன.

இந்நிலையில் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதாவது சட்டவிரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றமை தொடர்பாக எமக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பாக உடனடியாக அவர்களை கைது செய்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் சட்டவிரோதமான மணல் அகழ்வுகளில் ஈடுபட்டுவரும் நபர்கள் மற்றும் வாகனங்கள் பற்றிய விபரங்கள் யாவும் திரட்டப்பட்டு அவற்றுக்கான நட



வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த மாவட்டத்தில் இருந்து மணல் வெளியிடங்களுக்கு கொண்டு செல்வதற்கான எதுவித அனுமதிகளும் வழங்கப்படவில்லை. தற்போது மாவட்டத்தில் மணல் பெற்றுக்கொள்ளக் கூடிய இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய கண்டாவளைப் பிரதேசத்தில் மூங்கிலாறு, வண்ணாத்தியாறு, கல்லாறு, புளியம்பொக்கணை, முரசுமோட்டை, தட்டுவன்கொட்டி, நெத்தலியாறு பகுதியில் தருமபுரம், கல்மடு ஆகிய 8 இடங்களும் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் வன்னேரிக்குளம், அக்கராயன்குளம், கண்ணகைபுரம் ஆகிய இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றைவிட கோரமோட்டை, பழைய ஐயன்குளம் ஆகிய இடங்களும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை மணலுக்கு நிரந்தரமான விலை தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதாவது உழவு இயந்திரம் ஒரு லோட் 2 ஆயிரத்து 500 ரூபா தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் கல்வி அபிவிருத்தி நிதியத்திற்கு 500 ரூபா வழங்கப்பட வேண்டும். உள் நகரில் உள்ள மக்கள் தமக்கு தேவையான மணலைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையிலான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




# 10 இலட்சம் ரூபா பெறுமதியான 26 முதிரைமரக் குற்றிகள் மீட்பு



(பளை)

பளை இத்தாவில் பகுதியில் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய 26 முதிரை மரக்குற்றிகளை பளை பொலிஸார் அதிரடியாக கைப்பற்றியுள்ளனர். இந்நிலையில் முதிரைக்குற்றிகளை ஏற்றி வந்த சாரதி தப்பியோடியுள்ளதாக பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆனந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

இத்தாவில் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியளவில் பாரவூர்தி வாகனம் ஒன்றில் சந்தேகத்துக்கிடமான முறையில் மரங்கள் கொண்டு செல்வதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் உடனடியாக பளை பொலிஸ் நிலைய பொலிஸார் 5 பேர் அடங்கிய விசேட குழுவினர் அவ்விடத்துக்கு சென்று குறித்த வாகனத்தை நிறுத்தி சோதனை மேற்கொள்ள முற்பட்ட வேளை, பொலிஸாரை கண்டவுடன் சாரதி தப்பி ஓடியுள்ளார்.

குறித்த வாகனத்தில் முதிரை மரக்குற்றிகள் மரத்தூளினால் மறைக்கப்பட்டு கொண்டு செல்வதனை அவதானித்த பொலிஸார் அவற்றை கைப்பற்றியுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கைப்பற்றப்பட்ட முதிரைக் குற்றிகள் நாளை திங்கட்கிழமை நீதிமன்றில் பாரப்படுத்தப்படவுள்ளன. (செ-2-9)

# பெறுமதியான மரங்கள் தறிக்கப்பட்டு வெளிமாவட்டங்களுக்கு கடத்தப்படுகின்றன

(மல்லாவி)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பகுதியில் இடம்பெற்று வரும் சட்டவிரோத காடழிப்புக்களை தடுப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக காணப்படும் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் அண்மைய நாட்களாக சட்டவிரோதமான முறையில் காடழிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு பெறுமதி வாய்ந்த பாலை, முதிரை, யாவறனை தேக்கு ஆகிய மரங்கள் எதுவித அனுமதிப் பத்திரங்களுமின்றி வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

குறிப்பாக மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள சிறாட்டிகுளம், மூப்பன்குளம், பறங்கியாறு, எருவில் ஆகிய பகுதிகளில் உள்ள காடுகளில் பாலை, முதிரை போன்ற மரங்கள் பகல் வேளைகளில் வெட்டப்பட்டு கனரக வாகனங்களில் சிறாட்டிகுளம் நட்டாங்கண்டல் வீதியூடாக பாண்டியன்குளம்- மாங்குளம் வரையும் பல அரச திணைக்களங்களை கடந்து வெளியிடங்களுக்கு சட்டவிரோதமான முறையில் கொண்டு செல்லப்படுவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு கொண்டு செல்லப்படுவதனால் கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்னர் புனரமைக்கப்பட்ட சிறாட்டிகுளம் வீதி, பாண்டியன்குளம் வீதி, நட்டாங்கண்டல் வீதி என்பன மக்கள்போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றன.

சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்டு மாந்தை கிழக்கு கரும்புள்ளியான் பகுதியில் கடத்தப்படுவதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த 30 இற்கும் அதிகமான முதிரை மரக்குற்றிகள் அண்மையில் மீட்கப்பட்டன. இதேபோன்று சிறாட்டிகுளம் பகுதியிலும் ஒரு தொகை மரங்கள் மீட்கப்பட்டன.

இங்குள்ள மக்கள் தங்களுடைய வீட்டுத்திட்டங்களுக்கு தேவையான மரங்களை தமது பகுதிகளில் இருந்து பெற்றுக்கொள்ள முடியாமல் தென் பகுதியில் இருந்து கொண்டு வரப்படும் மரங்களையே அதிக விலைக்கு கொள்வனவு செய்ய வேண்டிய நிலையில் இவ்வாறு இப்பகுதிகளில் இருந்து பெறுமதிவாய்ந்த மரங்கள் கொண்டு செல்லப்படுகின்றன. இதனைத் தடுப்பதற்கு ஏற்ற வழிவகைகளை உரிய அதிகாரிகள் ஏற்படுத்த வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

# இளைஞனுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(மல்லாவி)

கிளிநொச்சி பகுதியில் பதினைந்து வயதுச்சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கி கர்ப்பமடைய வைத்த சந்தேகத்தில், கைது செய்யப்பட்ட இளைஞனை எதிர்வரும் 3 ஆம் திகதி புதன்கிழமை வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்திக்கு அண்மித்த பகுதியில் உள்ள தனியார் ஒருவருக்கு சொந்தமான விடுதி ஒன்றில் தங்கியிருந்த இளைஞர் ஒருவர் பதினைந்து வயதுச்சிறுமி ஒருவரை பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கி கர்ப்பமடைய வைத்த சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் கடந்த மே மாதம் 15 ஆம் திகதி இளைஞர் ஒருவரை கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் பிரஸ்தாப இளைஞரை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த இளைஞர் தொடர்ச்சியாக கடந்த 27 ஆம் திகதி வரை விளக்கமறியில் வைக்கப்பட்ட நிலையில் குறித்த இளைஞர் கடந்த 27 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து எதிர்வரும் 3 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (2-15)

# கன்டர் வாகனம் மோதி குடும்பஸ்தர் படுகாயம்



(பனிக்கன்குளம்)

வீதியோரமாக துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த நபர் ஒருவரை பின்னால் வந்த கன்டர் வாகனம் மோதித்தள்ளியதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த குடும்பஸ்தர் படுகாயமடைந்தார்.

இவ் விபத்து நேற்றுக் காலை 7.30 மணியளவில் ஏ-9 வீதியின் பனிக்கன்குளம் பிரதேசத்தின் 230 ஆவது மைல்கல் பகுதியில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் விபத்தில் பனிக்கன்குளம் பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான செல்லையா இராசரத்தினம் (வயது - 47) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவ் விபத்து தொடர்பாக தெரிய வருவதாவது,

மேற்படி வீதியில் துவிச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த குடும்பஸ்தரை பின்னால் வந்த கன்டர் ரக வாகனம் மோதித்தள்ளியதிலேயே இவ் விபத்து நேர்ந்துள்ளது.

இது தொடர்பில் மாங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

தினமும் சாரதிகளின் கவனக்குறைவால் விபத்துக்கள் இடம்பெற்று உயிரிழப்புக்களும் உடைமை சேதங்களும் இடம்பெறுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (2-281)

# நாகதம்பிரான் ஆலய தேர்த்திருவிழா நாளை

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதன்படி இன்று ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழாவும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெற்று 3 ஆம் திகதி புதன்கிழமை திருக்கல்யாணம் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2-277)



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இந்து சமய அறநெறி கல்வி அபிவிருத்தி திட்டத்தின் தேசிய நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. இதன்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் குறித்த திணைக்களத்தின் ஏற்பாட்டில் அறநெறிகல்வியை முன்னெடுத்து வரும் ஆசிரியர்களுக்கான ஒருநாள் செயலமர்வு இடம்பெற்றது. கிளிநொச்சியில் அமைந்துள்ள தனியார் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன், கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டுள்ளனர். அறநெறி கல்விச்செயற்பாடுகள் தொடர்பிலும், கல்வி முறை மாற்றம் தொடர்பிலும் ஆசிரியர்களுக்கு இதன்போது விளக்கம் அளிக்கப்பட்டது. (படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

மக்கள் பாதைமாறிச் செல்வார்களானால் அவர்களுக்கு கைதியுடைகளே தரப்படும்.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மைத்திரிக்கு மாக்ஸ் கொடுத்த மகிந்தவின் பாதயாத்திரை

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் பொது எதிரணியினர் நடத்துகின்ற பாதயாத்திரை வலுவிழந்து போவதைக் காண முடிகின்றது.

பாதயாத்திரை வெற்றிதராது என்பது ஏலவே தெரிந்ததாயினும் பாதயாத்திரை நடக்கும்போது அதனை ஆளும்தரப்பு குழப்ப முயற்சிக்கும் எனவும் இதன்போது நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ள; பாதயாத்திரையில் வந்த ஒரு சிலர் கொல்லப்பட; அதனைப் பயன்படுத்தி ஒரு கலவரத்தை ஏற்படுத்தி விடலாம் என்பது பாதயாத்திரையின் நோக்கமாக இருந்தது.

எனினும் பாதயாத்திரையில் எந்தக் குழப்பமும் இடம்பெறாமல் தாராளமாக நடத்துங்கள். அது உங்களின் ஜனநாயக உரிமை என்பது போல அரசு பேசாமல் விட்டுவிட, பாதயாத்திரை நாளுக்கு நாள் ஆட்களை இழந்து வருகிறது.

இது ஒருபுறம் இருக்க, ஆட்சியை நல்ல முறையில் நடத்தியிருந்தால் கால்தேய நடக்க வேண்டியதில்லையே என்று பாதயாத்திரை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருத்துரைக்க, அது நாடு முழுமையிலும் நியாயமான கருத்தாகி பாதயாத்திரைக்குப் பாதகத்தை கொடுத்துள்ளது.

பொதுவில் பிழையானதை திரும்பத்திரும்ப எத்தனைதடவைகள் செய்தாலும் அது பிழைதான் என்பதை பலரும் ஏற்க மறுக்கின்றனர்.

இதனால்தான் பிழைகள் தொடருகின்றன. இந்த நிலைமையை முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயற்பாட்டிலும் காண முடிகின்றது. நல்லாட்சியை கவிழ்க்கிறேன் பார் என்று ஒவ்வொரு தடவையும் ஏதோ ஒன்றை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பு செய்து வருகிறது.

எனினும் அதனால் அவர்களைத் தவிர்ந்த ஏனையவர்களுக்கு அந்தச் செயற்பாடு சாதகமாகி விடுகிறது.

இப்போது பொது எதிரணியால் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் முன்னெடுக்கப்படும் பாதயாத்திரையானது நல்லாட்சிக்கு எதிரானது என்ற கோணத்தில் மக்கள் பார்க்கவில்லை.

மாறாக இப்படியொரு பாதயாத்திரையை மைத்திரிபால சிறிசேன தரப்புச் செய்ய, ஆட்சி பீடத்தில் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தால் நிலைமை எப்படியிருந்திருக்கும் என்ற ஒப்பீட்டுக் கோணத்திலேயே பாதயாத்திரை பார்க்கப்படுகிறது.

இச் சந்தர்ப்பத்தில் மேற்குறித்த ஒப்பீடுகை தொடர்பில் மிக மோசமான கருத்துக்களை மக்கள் தங்களுக்குள் கூடி பகிர்ந்துகொள்கின்றனர்.

இவ்விடத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதயாத்திரை குறித்து மிகவும் அமைதியாக இருக்கிறார். இது நல்லாட்சிக்கு அழகென்று நாட்டுமக்களும், வெளிநாட்டு நோக்கர்களும் கருதிக்கொள்கின்றனர்.

இதன் காரணமாக நல்லாட்சிக்கு எதிராக மகிந்த ராஜபக்ஷ தரப்பு முன்னெடுத்த பாதயாத்திரையானது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மாக்ஸை அள்ளி வழங்கியுள்ளதுடன் அவரின் புகழையும் கௌரவத்தையும் மேலும் உயர்வுபடுத்தியுள்ளது எனலாம்.

என்ன செய்வது? கெடுவான் கேடு நினைப்பான்; கேடுசெய்வான் என்பதுதான் உண்மையென்றாயிற்று.

# சிங்கள மயமாக்கல் தொடர்கிறது

## நல்லிணக்க செயலணியிடம் மக்கள் சுட்டிக்காட்டு

நல்லிணக்க காலம் என கூறிக்கொண்டு சிங்கள, பௌத்த மயமாக்கல்களை தான் புதிய அரசாங்கமும் செய்கின்றது. இதனை உடனடியாக நிறுத்த வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் நல்லிணக்க பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணியிடம் தெரிவித்துள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நேற்றைய தினம் காலை ஒன்பது மணி முதல் மாலை நான்கு மணி வரை மேற்குறித்த செயலணியின் அமர்வு நடைபெற்றது.

இதன் போதே யுத்தத்தினாலும், காணாமல் போதல்கள் உட்பட பல விடயங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விட்டது எனவும், இனிமேல் யுத்தத்திற்கு இடமில்லை எனவும், நாட்டில் உள்ள சகல மக்களும் ஒற்றுமையாக, நிம்மதியாக வாழ்கின்றனர் என கூறிவரும் தற்போதைய அரசாங்கம், தம்மை நல்லிணக்க, நல்லாட்சி அரசு எனவும் அடையாளப்படுத்தி வருகின்றது.

இந்த நிலையில் இவர்கள் தம்மை இவ்வாறெல்லாம் அடையாளப்படுத்தினாலும் கடந்தகால அரசாங்கங்கள் மேற்கொண்ட தமிழர்களுக்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசும் சத்த மின்றி எமது பிரதேசங்களில் மேற்கொண்டு வருகின்றது.

என்னதான் இவர்கள் நல்லிணக்கம் பேசினாலும் தமது குறிக்கோள்களை மறைமுகமாக நிறைவேற்றிகொண்டு தான் உள்ளனர்.

தமிழர்களே மட்டும் வாழும இடங்களில் திடீர் திடீரென புத்தர் சிலைகள் தோன்றுகின்றன, சிங்கள குடியேற்றங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன, சிங்கள கலாசாரங்கள் திணிக்கப்படுகின்றன.

இவை எல்லாமே கடந்த கால அரசுகள் எம்மீது மேற்கொண்ட அழிப்பு நடவடிக்கைகள்தான். இவை தற்போதும் தொடர்ந்து கொண்டு தான் உள்ளன.

நல்லாட்சி என கூறும் அரசிற்கும், முன்னைய ஆட்சியாளர்களுக்கும் இடையில் பெரியளவில் எந்த வேறுபாடும் இருப்பதாக எமக்கு தெரியவில்லை. ஒரே யொரு வேறுபாடு இருக்கலாம். அதாவது, அவர்கள் இவற்றை எல்லாம் வெளிப்படையாக செய்தார்கள், இவர்கள் எல்லாவற்றையும் மறைமுகமாக செய்கின்றனர்.

இவை ஆபத்தானவை. நாங்கள் நம்பிக்கொண்டு இருக்கும் நிலையில் நம்பிக்கை துரோகம் செய்கின்றனர்.

நாங்கள் இன்றும் வாடகை வீடுகளிலும், முகாம்களிலும் தங்கியிருக்க எமது காணிகளில் தங்கியுள்ள இராணுவம் தோட்டம் செய்து வருமானத்தை ஈட்டி செழிப்புடன் வாழ்ந்து வருகின்றது. இதுவா? இவர்களது நல்லாட்சி? நாங்கள் எமது நிலங்களுக்கு திரும்புவோம் என எதிர்பார்ததிருந்தோம். அது நடககவில்லை.

எமது இழப்புக்களுக்கு நீதியை பெற்றுத்தருவார்கள் என எதிர்பார்த்தோம். அதுவும் நடக்கவில்லை. ஆனால் மாறாக இவை எல்லாம் அதிகரித்த வண்ணமே உள்ளன. எம்மால் இனியும் இவர்களது நடிப்புக்களை நம்ப முடியாது. எமக்கு உண்மைகள் உரிய பொறிமுறைகள் ஊடாக கண்டறியப்பட்டு. இவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என தெரிவித்தனர். (செ-4)

## வடமராட்சி அபிவிருத்தி குறித்து இரண்டாம் கட்ட கலந்துரையாடல்

யாழ். வடமராட்சி அபிவிருத்தி தொடர்பான இரண்டாம் கட்ட கலந்துரையாடல் நேற்று சனிக்கிழமை மருதங்கேணி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் நடைபெற்றது.

முதலாம் கட்ட கலந்துரையாடல் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த மாதம் இடம்பெற்றது. இதில் தெரிவு செய்யப்பட்டவர்கள் மூலம் முன்மொழிவுகள் முன் வைகப்பட்டன.

இதில் ரின்மீன் தொழிற்சாலை அமைத்தல், பால் பண்ணை, பப்பாசித் தோட்டம், இறால் வளர்ப்பு என்பன முன்மொழியப்பட்டன.

இதில் சாத்தியப்படக் கூடிய விடயங்கள் குறித்து அடுத்த கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது.

மேலும் நேற்று கல்வி, சுகாதாரம், தொழில் வாய்ப்பு, மீன்பிடி, உள்நாட்டு அலுவல்கள் விவசாயம் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.

எம்.ஏ.சுமந்திரனின் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் மருதங்கேணிப் பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ, மாகாண சபை உறுப்பினர்களான கே.தர்மலிங்கம், வி.சிவயோகன், எஸ். அகிலதாஸ், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.செந்தூரன், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுதேஸ்குமார், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-60)

## மதுபோதையில் மோ.சைக்கிளில் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் கைது!

மதுபோதையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு பருத்தித்துறைப் பொலிஸார் ரோந்து சென்று கொண்டிருந்தபோது மதுபோதையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற ஒருவரை பிடித்து விசாரித்த போது அவர் யாழ். மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் கடமை புரியும் பொலிஸார் எனத் தெரிய வந்தது.

இதனையடுத்து இவர் கைது செய்யப்பட்டு மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியதற்காக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (இ-60)

# ‘செல்வம் தரும் வாழ்வா? வாழ்வு தரும் செல்வமா?’


இன்று எமக்கு தரப்படும் பைபிள் பகுதியில் ஒருவர் இயேசுவிடம், போதகரே, சொத்தை என்னோடு பங்கிட்டுக் கொள்ளுமாறு என் சகோதரருக்குச் சொல்லும்" என்றார். இயேசு அந்த ஆளை நோக்கி, என்னை உங்களுக்கு நடுவராகவோ பாகம் பிரிப்பவராகவோ அமர்த்தியவர் யார்?" என்று கேட்டார். பின்பு இயேசு அவர்களை நோக்கி, எவ்வகைப் பேராசைக்கும் இடங் கொடாதவாறு எச்சரிக்கையாய் இருங்கள். பின்பு அவர்களுக்கு அவர் ஓர் உவமையைச் சொன்னார்: செல்வனாய் இருந்த ஒருவனுடைய நிலம நன்றாய் விளைந்தது. அவன், நான் என்ன செய்வேன்? என் விளைபொருட்களைச் சேர்த்து வைக்க இடமில்லையே! என்று எண்ணினான். ஒன்று செய்வேன் என் களஞ்சியங்களை இடித்து இன்னும் பெரிதாகக் கட்டுவேன். அங்கு என் தானியத்தையும் பொருட்களையும் சேர்த்து வைப்பேன். பின்பு, என் நெஞ்சமே, உனக்குப் பல்லாண்டுகளுக்கு வேண்டிய பலவகைப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன. நீ ஓய்வெடு. உண்டு குடித்து, மகிழ்ச்சியில் திளைத்திடு. எனச் சொல்வேன் என்று தனக்குள் கூறிக் கொணடான். ஆனால் கடவுள் அவனிடம், அறிவிலியே, இன்றிரவே உன் உயிர் உன்னை விட்டுப் பிரிந்துவிடும். அப்பொழுது நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்? என்று கேட்டார்.

இங்கு இயேசுவின் அறிவுரை இரண்டு பகுதிகளாக காட்டப்படுகிறது. பேராசை அறவே கூடாது. உடைமைகள் ஒருவருக்கு வாழ்வு தருவதல்லை. தொடர்ந்து இயேசு ஓர் உருவகம் தருகின்றார். ‘அறிவற்ற செல்வன்" என்று

### பரமபிதா காட்டிய பாதை

இந்த உருவகத்திற்கு பெயர் தரப்படுகின்றது. இந்த செல்வன் கடின உழைப்பாளி. ‘எனவயிற்றுக்கு நான் உழைக்க வேண்டும்," ‘உழைக்க மனமில்லாதவன் உண்ணலாகாது!' என்று தன் வயிற்றுக்குத் தான் உழைக்கின்றான். இவன் யாரையும் ஏமாற்றி சொத்து சேர்க்கவில்லை. தனக்காக உழைத்தவர்களின் கூலியை மறுக்கவில்லை. மேலும், இவர் நலல முகாமையாளரும் கூட. திட்டமிடுவதில் கைதேர்ந்தவர். ஆகையால்தான், ‘தானியத்தைக் கொள்வதற்கு கிடங்கு போதாது" என்று அதை மேம்படுத்த முயற்சி செய்கின்றார். இதுவரைக்கும் அவர் செய்தது சரிதான். ஆனால், இதற்குப் பின் அவர் தன் உள்ளத்தைப் பார்த்துச் சொல்லும் வார்த்தைகள்தாம் இயேசுவைப் பொறுத்த வரையில் தவறாகின்றன.

இவர் தன் செல்வங்கள் மட்டுமே உண்மை என்று நினைத்துக் கொண்டிருந்த வேளையில் அங்கே ஒலிக்கிறது கடவுளின் குரல்: ‘அறிவிலியே! இன்றிரவே உன் உயிர் உன்னை விட்டுப் பிரிந்துவிடும். அப்பொழுது நீ சேர்த்து வைத்தவை யாருடையவை ஆகும்?" என்று கேட்கிறார் கடவுள். ‘என் எதிர்காலம் இப்படித்தான் இருக்கும்!' என்று செல்வர் நினைத்துக் கொண்டிருந்த வேளையில், அவரின் மற்றொரு எதிர்காலத்தை அவருக்குச் சுட்டிக் காட்டுகிறார் கடவுள். ‘மகிழ்ந்திரு' என்ற செல்வரின் இறுதி வார்த்தையை ‘முட்டாள்" என தன் முதல் வார்த்தையாக மாற்றிப் போடுகின்றார் கடவுள். ‘எல்லாம் எனக்கே" என்று நினைத்த செல்வரிடம், ‘இதெல்லாம் வேறொருவருடையதாகும்!" என்கிறார் கடவுள்.



எனவே நாம் சேர்த்து வைக்கும் செல்வத்தை நாம் எடுத்துச் செல்ல முடியாது, அதற்கு உரிமை இல்லாத ஒருவருக்கு அனைத்தையும் விட்டுச்செல்ல வேண்டும் என்பதே வாழ்வின் எதார்த்தம். எனவே கடவுளின் அருள் துணை கொண்டு நாம் நிலைவாழ்வில் பங்கேற்க இயலும் என்னும் அரிய உண்மையை இயேசு நமக்கு அறிவிக்கிறார். கடவுள் மீது முழு நம்பிக்கை கொண்டு, அவருடைய வழியில் நடந்து சென்று வாழ்கின்ற மக்கள் இவ்வுலகச் செல்வத்தை நம்பி ஏமாந்து போகாமல், கடவுள் தரும் செல்வமாகிய நிலைவாழ்வைப் பெறுவர்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

# தீவக வலயத்திற்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான மஹாமாரி வெற்றிக்கிண்ண கிரிக்கெட் போட்டி

## ஹீரோ ஈஸ்டர் சம்பியன்





மஹாமாரி வெற்றிக்கிண்ண கிரிக்கெட் தொடரின் 2016 இற்கான வெற்றிக்கிண்ணத்தை கரம்பொன் ஹீரோ ஈஸ்டர் விளையாட்டுக் கழகம் தனதாக்கிக்கொண்டது.

தீவக வலயத்தைச் சேர்ந்த 22 அணிகள் பங்குபற்றிய குறித்த தொடரின் இறுதிப் போட்டி 24.07. 2016 ஊர்காவற்றுறை புளியங் கூடல் மஹாமாரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

கடந்த ஒரு வாரமாக நடைபெற்று வந்த குறித்த போட்டியின் இறு திப்போட்டியில் கரம்பொன் ஹீரோ ஈஸ்டர் அணியும் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் அணியும் மோதிக் கொண்டன. எனினும் சிறப்பான செயற்பாடுகளின் மூலம் மஹாமாரி வெற்றிக்கிண்ணத்தை கரம்பொன் ஹீரோ ஈஸ்டர் தனதாக்கிக் கொண் டது. இப்போட்டியில் தொடராட்ட நாயகன் விருதை கரம்பொன் ஹீரோ ஈஸ்டர் அணியின் வீரர் குமரன் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

# இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் அண்ணா சிலையடி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் மனோகரா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து எவறெஸ்ட் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

கணேசானந்தா வெற்றிக் கிண்ணத்திற்கான மென்பந்து போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் பிங்பொங் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து செந்தமிழ் விளையாட்டுக்க ழகம் மோதவுள்ளது. (கு)

# சங்கானை உதயதாரகையை வீழ்த்தியது பருத்தித்துறை வீனஸ் விளையாட்டுக்கழகம்



மல்லாகம் ஸ்ரீ முருகன் விளை யாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுத்தொடரில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் வீனஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சங்கானை உதயதாரகை விளை யாட்டுக்கழகம் மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வீனஸ் வி.க. துடுப்பாட்டத்தை தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வீனஸ் விளையாட்டுக்கழகம் 6 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 79 ஓட்டங்கள் பெற்றது.

80 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய சங் கானை உதயதாரகை விளையாட் டுக்கழகம் 6 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 46 ஓட்டங்கள் மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தது. இப் போட்டியின் ஆட்டநாயகனாக வீனஸ் அணி வீரர் கிருபாகரன் தெரிவா னார். இவர் ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்கள் பெற்று வெற்றி இல க்கை பெற்றுக்கொடுத்தார். (கு)

# இறுதிப்போட்டியில் புத்தூர் கலைமதி

புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்ட சுற் றுப்போட்டியில் அண்மையில் நடை பெற்ற A பிரிவுக்கான அரையிறு திப்போட்டியில் அச்சுவேலி யூத் விளை யாட்டுக்கழகத்தினை எதிர்த்து புத் தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் மோதியது.

விறுவிறுப்பான ஆட்டத்தில் புத் தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் 3:0 (19:25,23:25,17:25) என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று இறு திப்போட்டிக்கு முன்னேறியது. (கு)

# மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக சிநேகபூர்வ உதைபந்தாட்ட போட்டி




மட்டுவில் வளர்மதி விளையாட் டுக்கழகத்தின் தாயக அணிக்கும் புலம்பெயர் வாழ் அணிக்குமிடையிலான உதை பந்தாட்ட போட்டியில் தாயக அணியினர் 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றனர். இப்போட்டியில் அணித்தலைவர் வேணு 2 கோல்களையும் பாணு, சசி மற்றும் சுஜீவன் ஆகியோர் தலா ஒரு கோல்களையும் தாயக அணிக்காக பெற்றனர். புலம்பெயர் வாழ் அணிக்காக சஞ்சீவனால் கோல் பெற்றுக்கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (கு)

# அரையிறுதிப் போட்டி இளவாலை மத்தி வெற்றி

புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்ட சுற் றுப்போட்டியில் அண்மையில் நடை பெற்ற A பிரிவுக்கான காலிறுதிப் போட்டியில் இளவாலை மத்தி விளை யாட்டுக்கழகத்தினை எதிர்த்து அச்சு வேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மோதியது.

விறுவிறுப்பான ஆட்டத்தில் இள வாலை மத்திய விளையாட்டுக்கழ கம் 2:0 (15:25,24:26) என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அரை இறுதிப்போட்டிக்கு முன்னேறி யது. (கு)

# ஸ்ரீமுருகன் வி.கழகம் நடத்தும் மென்பந்தாட்டச் சுற்றுத் தொடர்

## எலெவின்ஸ் வெற்றி



மல்லாகம் ஸ்ரீ முருகன் விளை யாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுத்தொடரில் அண்மையில் நடை பெற்ற போட்டியில் ரொப் எலெ வின்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து காமாட்சி விளை யாட்டுக் கழகம் மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ரொப் எலெவின்ஸ் வி.க. துடுப்பாட்டத்தை தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ரொப் எலெவின்ஸ் விளையாட்டுக்கழகம் 6 ஓவர்களில் 4விக்கெட் இழப்பிற்கு 64 ஓட்டங்கள் பெற்றுள்ளது. பதிலு க்கு 65 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய காமாட்சி விளையாட்டுக்கழகம் 6 ஓவர்களில் 4 விக்கெட்டினை இழந்து 53 ஓட்ட ங்கள் மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தது.

போட்டியின் ஆட்ட நாயகனாக ரொப் எலெவின்ஸ் அணி வீரர் ஜிந்தா தெரிவானார். இவர் 15 ஓட்டங்களை யும் 2 இலக்கை பெற்று வெற்றியை பெற்றுக் கொடுத்தார். (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்தி

மட்டுவில் மோகனதாஸ் விளை யாட்டுக்கழகம் நடத்தும் கரப்பந் தாட்ட சுற்றுப் போட்டியில் அண் மையில் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இள வாலை மத்திய விளையாட்டுக்கழ கத்தை எதிர்த்து போட்டியிட்ட ஆவ ரங்கால் மத்திய வி.க 3:0 (25:18 25:23 25:19) என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியது. (கு)

# வடமாகாண தடகள விளையாட்டுப்போட்டியில் மாகாண ரீதியில் கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயத்துக்கு 4 பதக்கங்கள்



2016ஆம்ஆண்டுக்கானமாகாண ரீதியில் நடத்தப்பட்ட தடகள விளை யாட்டுப் போட்டியில்கலந்து கொண்டு 04 வெற்றி பதக்கங்களை கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயம் சாதனை படைத்துள்ளது.

இளங்கீரன் அனுயன் மரதன் ஓட்டத்தில் 02 பதக்கங்களையும் பாலகிருஸ்ணன் விதுசன் மரதன் ஓட்டத்தில் 01 பதக்கத்தையும் ஸ்ரீர ங்கநாதன் வினோஸிதா குண்டு எறி தலில் 01 பதக்கத்தையும் வென்று மாகாண ரீதியில் வெற்றியீட்டியுள் ளனர். (கு)

## மூன்றாம் நாளாக...

யாத்திரை நிட்டம்புவ நகர் சென்று நேற்று மாலையுடன் நிறைவடைந்துள்ளது.

எனினும் பாதயாத்திரையில் பங்கேற்ற ஆதரவாளர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் குறைவடைந்து வருவதுடன் பாதயாத்திரையில் அதிகளவான வாகனங்களே இணைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இன்று 31ஆம் திகதி நிட்டம்புவ பகுதியிலிருந்து கிரிபத்கொட வரையிலும், நாளை ஓகஸ்ட் முதலாம் திகதி கிரிபத்கொடையிலிருந்து கொழும்பு வரையிலும் இந்தப் பாதயாத்திரையை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## மீள விசாரி...

கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பிலான வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த இராணுவ உறுப்பினர்கள் ஆறு பேரும் கடந்த 27 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர்.

எவ்வாறாயினும், இந்த சம்பவம் தொடர்பிலான வழக்கை மீண்டும் விசாரித்து தமக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்குமாறு குமாரபுரம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-11)

## தாய்ப்பால்...

தாய்ப்பால் கொடுத்து நித்திரையாக்கியுள்ளார்.

பின்னர் தாய் 9 மணியளவில் மீண்டும் பால் கொடுப்பதற்காக சென்ற போது சிசு அசைவின்றி இருப்பதை கண்டு உடனடியாக யாழ.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செனறுள்ளார்.

இதன்போதே தாய்ப்பால் புரைக்கேறியதில் சிசு ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து மரண விசாரணைகளை வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

பிரேதபரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (செ-9)

## பாதயாத்திரை...

மாதம் முதலாம் திகதி கொழும்பைச் சென்றடையவுள்ளது.

இந்நிலையில், இந்தப் பாதயாத்திரை கொழும்பை சென்றடையும் போது, அமைதிக்கு குந்தகத்தை ஏற்படுத்தும் வகையிலான சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் நோக்குடனேயே அரசாங்கம் பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தியுள்ளது.

கொழும்பு நகரின் பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்துமாறு சிறப்பு அதிரடிப்படை பொலிஸாரை தயார் நிலையில் வைத்திருக்க தேசிய பாதுகாப்புச் சபை தீர்மானித்துள்ளது.

அத்துடன், அமைதிக்கு குந்தகத்தை ஏற்படுத்தும் வகையில் கூட்டு எதிரணியின் ஆதரவாளர்களுக்கு திட்டங்கள் எதுவும் உள்ளதா என்பது தொடர்பிலும் புலனாய்வுப் பிரிவினர் ஆராய்ந்து வருகின்றனர்.

இது தொடர்பில் பிரதி பொலிஸ் மா அதிபர்களுடன் பொலிஸ் மா அதிபர் ஆராய்ந்ததை அடுத்தே, கொழும்பு நகரின் பாதுகாப்பை பலப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இத்துடன், இந்தப் பாதயாத்திரை கொழும்பை சென்றடையும் போது கூட்டு எதிரணியினர் குழப்பங்களை ஏற்படுத்த முனைந்தால், அதனைக் கட்டுப்படுத்த முப்படையினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## செய்தியில் திருத்தம்

நேற்றைய வலம்புரி பத்திரிகையின் 8ஆம் பக்கத்தில் பிரசுரமான விசாரணைகள் தேவையில்லை; நாட்டில் எழுதப்படாத சட்டம் எனத் தலைப்பிடப்பட்டிருந்த செய்தியினை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு என திருத்தி வாசிக்கவும். (ஆ-ர்)

## சாலாவ இராணு...

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நேற்றையதினம் காலை ஒன்பது மணிமுதல் மாலை நான்கு மணிவரை மேற்குறித்த செயலணியின் அமர்வு நடைபெற்றது. இதன் போதே யுத்தத்தினாலும், காணாமல் போதல்கள் உட்பட பல அரசியல் காரணங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தனர்.

இதன்போது போரினால் பாதிக்கப்பட்ட ஒருவர் கூறுகையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டார் என்றெல்லாம் பேசும் நாங்கள் பிரபாகரன் எவ்வாறு கொல்லப்பட்டார் என்பது குறித்து நாம் ஆராயவில்லை. பிரபாகரன் நச்சு ஆயுதங்கள் மூலமே தாக்கப்பட்டார்.

இந்த நிலையே இறுதி யுத்தத்தில் நாற்பதாயிரத்திற்கும் அதிகமான தமிழ் மக்களுக்கும் நடைபெற்றது. யுத்தத்தில் பல்லாயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்ட நிலையில், இவர்களில் நூற்றுக்கணக்கான மக்கள் இறப்பதற்கு புலிகள் காரணமாக இருந்திருந்தாலும்,

ஏனைய பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்படுவதற்கு இராணுவமே காரணமாகும். போரில இரசாயன ஆயுதங்கள், கொத்துக் குண்டுகள், பொஸ்பரஸ் குண்டுகள் எல்லாவற்றையும் இராணுவம் பயன்படுத்தியுள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது. எனினும் இதை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

இது தவிர போராளிகளை மயக்க நிலையில் அல்லது சுயநினைவு அற்ற நிலையில் வைத்திருக்கும் ஆயுதங்களும் இராணுவத்தினரால் வீசப்பட்டுள்ளதென குறிப்பிட்ட அவர்,

இவ்வாறு இந்த குண்டுகள் வீசப்பட்டதும் போராளிகள் சுய நினைவு அற்ற நிலைக்கு சென்றுவிடுவதாகவும் அப்போது இலங்கை இராணுவம் அவர்களை கடத்தி சென்று சித்திரவதை செய்ததாகவும் புதிய தகவலொன்றினை வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் இவ்வாறு பயன்படுத்தப்பட்ட சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் அவை பெறப்பட்ட வழிமுறைகள், அதற்கான ஆவணங்கள் எல்லாமே சாலாவ இராணுவ முகாமில்தான் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன.

அவற்றை தடயமில்லாமல் அழிப்பதற்கே இந்த குண்டு வெடிப்பு நாடகம் அரங்கேற்றப்பட்டது.

குறித்த இராணுவ முகாமில் இராண்டாயிரத்திற்கும் அதிகமான இராணுவம் இருந்ததாக கூறப்படும் நிலையில், இரு இராணுவ சிபபாய்கள் மட்டுமே உயிரிழந்துள்ளனர்.

இந்த பாரிய வெடிப்பில் கொல்லப்பட்டது இரு இராணுவத்தினர் தான் என்றால் ஏனையவர்கள் எவ்வாறு தப்பித்து சென்றனர்? அல்லது முற்கூட்டியே தப்ப வைக்கப்பட்டார்களா? என கேள்வி எழுப்பிய அவர்,

எமக்கு எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்றின் ஊடாகவே நீதி கிடைக்க வேண்டும். அந்த சர்வதேச விசாரணையின் மூலமாகவே எமக்கான நீதியும் கிடைக்க முடியும்.

உள்நாட்டு நீதித்துறைகள் பற்றிய நடுநிலைமைகள் தொடர்பில் நாங்கள் பல இடங்களில் கற்றுவிட்டோம். இனியும் எம்மால் ஏமாற முடியாது என அவர் உறுதியுடன் கூறினார். (செ-4)



அம்பாறை, பொத்துவில் பிரதேசத்திலிருந்து அக்கரைப்பற்றுப் பிரதேசம் நோக்கி மரக்குற்றிகளை ஏற்றிச் சென்று கொண்டிருந்த லொறியொன்று, குஞ்சான் ஓடைப் பாலத்துக்கு அருகில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை மாலை குடைசாய்ந்துள்ளது.

## உடல் எடையை மாத்திரமே...

ஒன்றும் செய்ய முடியாது என பாராளுமன்ற உறுப்பினர்ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

கண்டியிலிருந்து கொழும்பை நோக்கிய பாதயாத்திரையால் எதுவும் மாற்றமடைய போவதில்லை. அதற்காக அரசாங்கம் பீதியடை வதற்கும் ஒன்றுமில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

கொலன்னாவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் நேற்று கலந்துகொண்ட பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

குறித்த பாதயாத்திரையால் ஜனாதிபதியோ பிரதமரோ தங்களது செயற்பாடுகளை மாற்றிக் கொள்ள போவதில்லை. 5 வருடங்களுக்கு தேசிய அரசாங்கம் பிளவுப்பட போவதுமில்லை.

எனவே குறித்த பாதயாத்திரை தொடர்பில் பீதியடைவதற்கு ஒன்றும் இல்லையென தெரிவித்தார். (செ-11)

## நடைபழக...

தருவேன்.

தேயிலை தோட்டங்களை அழிக்க விடமாட்டேன் என சொன்னார்.

ஆனால் இன்று இந்நிலை மாறியுள்ளது. இவ்வாறெல்லாம் சொன்ன அவர் மலையக மக்களால் புறக்கணிக்கப்பட்டு நடைபழக பாதயாத்திரை செல்கின்றார்.

குறுக்கு வழியில் செய்த ஊழல்களை மறைக்க ஆட்சியை கைப்பற்ற நினைக்கின்றார்.

ஆனால் எதிர்வரும் 4 ஆண்டுகளுக்குள் இந்த நல்லாட்சி அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது என்றார். (செ-11)

## என் மகனை...

சனிக்கிழமை காலை 9 மணிக்கு மன்னார் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது. நல்லிணக்க பொறிமுறைகள் பற்றி கலந்தாலோசனைக்கான வலய செயலணியின் தலைவர் அருட்தந்தை இ.செபமாலை அடிகளார் தலைமையில் ஆறு பேர் அடங்கிய குழுவினர் முன்னிலையில் இடம்பெற்றது.

இதன் போது கலந்து கொண்டு கருத்துக்களை பதிவு செய்த, மன்னாரில் வீட்டில் வைத்து விசாரணைக்கு என அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் போன இளைஞன் ஒருவருடைய தாய் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், வீட்டில் இருந்த எனது பிள்ளையை யார் கொண்டு சென்றது என்று என்னால் அப்போது கூற முடியாது அச்சநிலை இருந்தது. தற்போது கூறுகின்றேன். இராணுவமே எனது மகனை அழைத்துச் சென்றது. துணிந்து சொல்ல தற்போது தைரியம் ஏற்பட்டுள்ளது.

முன்னதாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைகள் இடம்பெற்ற போது எமது கருத்துக்களை வழங்க உரிய நேரம் வழங்கப்படவில்லை.

மாறாக விசாரணைகளை மேற்கொண்டவர்கள் எங்களுடைய கவனத்தை திசை திருப்பும் வகையில் வாழ்வாதாரத்திற்காக ஆடு, மாடு, கோழி தருகின்றோம் என பொறுப்பற்ற வகையில் கூறினார்கள்.

இந்த நேரத்தில் எங்களை உரிய பதில் கூற சந்தர்ப்பம் வழங்கவில்லை. இராணுவம் தான் எங்களுடைய பிள்ளைகளை கொண்டு போனது என நாங்கள் கூறியிருக்க முடியும். ஆனால் அச்ச நிலைமைகளால் நாங்கள் ஒதுங்கிக்கொண்டிருந்தோம்.

2008 ஆம், 2009 ஆம் ஆண்டுகளில் மன்னாரில் பிடிக்கப்பட்ட, கடத்தப்பட்ட தமிழ் இளைஞர்களை சுட்டுக் கொன்று விட்டு கண்ட இடங்களில் எல்லாம் சடலங்களை தூககி வீசிப்போட்டு சென்றார்கள்.

அந்த சமயத்தில் எனது மகனாக இருக்குமோ என்ற அச்சத்தில் நாங்களும் சென்று குறித்த சடலங்களை பார்வையிட்டோம்.

ஆனால் எனது மகன் எங்கேயும் சுட்டு போடப்படவில்லை. எனது மகன எங்கேயோ ஒரு இரகசிய தடுப்பு முகாமில் தற்போது வரை உயிரோடு இருக்கின்றான் என நான் முழுமையாக நம்புகின்றேன.

எனவே காணாமல் போன அனைவரையும் எங்களுக்கு காணபிக்க வேண்டும். அப்படி காணாமல் போன எமது பிள்ளைகளையும், உறவுகளையும் காட்டமுடியாது விட்டால் அவர்களுக்கு என்ன நடந்தது என்று உண்மையை பகிரங்கமாக கூற வேண்டும் என அந்தத் தாய் கண்ணீருடன் கோரிக்கை விடுத்தார். (செ-4)

## 5 வருடங்களுக்கு அரசாங்கத்தை...

ஐக்கிய அரசாங்கத்தை ஒத்துழைப்புடன் முன்னெடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று முற்பகல் பொலநறுவை றோயல் கல்லூரியில் இடம்பெற்ற ஒரு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐந்து ஆண்டுகளுக்கு இந்த அரசாங்கத்தை அசைப்பதற்கு எவராலும் முடியாது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அரசியல் சூழ்ச்சிகளின் மூலம் அரசாங்கத்தை மாற்ற முடியாது என்றும் தெரிவித்தார்.

மக்களுக்கு வழங்கிய உறுதிமொழியை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு நல்லாட்சி அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

ஒன்பது இலட்சம் கோடி கடன் சுமை உள்ளிட்ட பொருளாதார சவால்கள் மற்றும் சர்வதேச ரீதியாக எழுந்த பிரச்சினைகளுக்கு மத்தியில் முன்னாள் ஜனாதிபதி தமது பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலுக்கு சென்றதாகவும் அந்த அரசாங்கம் முகம்கொடுக்க வேண்டியிருந்த சவால்களுக்கு தற்போதைய அரசாங்கம் முகம்கொடுத்திருப்பதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, உரிய அரச கொள்கை மற்றும் முகாமைத்துவத்தின் அடிப்படையில் அந்த எல்லா சவால்களுக்கும் வெற்றிகரமாக முகம்கொடுத்து நாட்டு மக்களுக்கு சுபீட்சமானதொரு தேசத்தைக் கட்டியெழுப்ப தாம் அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த பொலநறுவை மாவட்டத்தில் கடந்த ஒரு மாதகாலமாக நடைபெற்று வந்த நடமாடும் சேவையின் நிறைவு விழா நேற்று ஜனாதிபதியின் தலைமையில் பொலநறுவை றோயல் கல்லூரியில் நடைபெற்றது.

மூன்று தேர்தல் தொகுதிகள் மற்றும் 7 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் கடந்த முதலாம் திகதி ஆரம்பமான இந்த நடமாடும் சேவையின் போது, மக்களிடமிருந்து சுமார் 44 ஆயிரம் பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டிருந்ததோடு அவற்றில் சுமார் 40 ஆயிரம் பிரச்சினைகளுக்கு வெற்றிகரமாக தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

இலவசமாக பிறப்பு, இறப்பு, மற்றும் திருமண சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றைப் பெற்றுக்கொடுத்தல் மருத்துவ முகாம்கள், மூக்குக் கண்ணாடி வழங்குதல் சமுர்த்தி கொடுப்பனவுகள், ஓய்வூதியம் தொடர்பான பிரச்சினைகள், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான கடன் வழங்கல், காணிப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு இதன் மூலம் தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற நிறைவு விழாவின் போது பொலநறுவை மாவட்டத்தின் புண்ணிய நிலங்களுக்கான காணி உறுதிகளை வழங்குதல், விவசாய சங்கங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்குதல், சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள குடும்பங்களுக்கு சுயதொழில் உபகரணங்களை வழங்குதல், சிசுதரிய புலமைப் பரிசில்களை வழங்குதல் போன்ற பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் ஜனாதிபதியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன உள்ளிட்ட அமைச்சர்கள், ஜனாதிபதியின் செயலாளர், பிரதமரின் செயலாளர் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகளும் பெருமளவான பொதுமக்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ-11)

## கிரிக்கெட் அணிக்கு...

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர அஞ்சலோ மத்தியூஸை நேற்று பிற்பகல் தொலைபேசியில் தொடர்புகொண்டு ஜனாதிபதி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டதோடு, இலங்கை கிரிக்கெட் அணியின் எதிர்கால வெற்றிக்காகவும் தமது ஆசிகளைத் தெரிவித்தார்.

சிறந்த துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய குசல் மெண்டிஸையும் பந்துவீச்சில் திறமை காட்டிய ரங்கன ஹேரத்தையும் ஜனாதிபதி பாராட்டியதுடன், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 17 வருடங்களுக்குப் பின்னர் வெற்றிபெற்று தாய்நாட்டுக்கு பெருமை தேடித் தந்தமைக்காக தமது நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

இதேவேளை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அப்துல் கேசப்பும் இலங்கை அணிக்கு தனது வாழ்த்துக்களை டுவிட்டர் மூலம் தெரிவித்துள்ளார். (செ-11)

## வடக்கு குற்றச்...

ட்ட தரப்பினர் நல்லிணக்க பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணியிடம் தெரிவித்துள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நேற்றைய தினம் காலை ஒன்பது மணிமுதல் மாலை நான்கு மணிவரை மேற்குறித்த செயலணியின் அமர்வு நடைபெற்றது.

இதன் போதே யுத்தத்தினாலும், காணாமல்போதல்கள் உட்பட பல அரசியல் காரணங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

தற்போது எமது பிரதேசங்களில் என்றும் இல்லாத வாறு குற்றச்செயல்கள் நடைபெற்று கொண்டே இருக்கின்றன. ஆனால் அவை குறைந்தபாடில்லை. தமிழர் பிரதேசங்களில் ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஒவ்வொரு பிரச்சினைகள் இருந்த வண்ணமே காணப்படுகின்றது. கிறீஸ் பூத பிரச்சினையும், இப்போது வாள்வெட்டும், வன்முறைகளும் என நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது.

இவை எல்லாம் சாதாரணமாக நடைபெறுகின்றது என எம்மால் கருத முடிய்வில்லை. இவற்றுக்கு எல்லாம் ஒரு பின்புலம் இருப்பதாகதான் தோன்றுகின்றது. 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் எங்கள் பிரதேசம் தூய்மையாகதான் காணப்பட்டது. எப்பொழுது எமது இடங்களுக்குள் இராணுவம் வந்ததோ அன்று எமது நிம்மதியும் தொலைந்தது.

இராணுவம் இங்கு தொடர்ந்தும் இருப்பதே குற்றச்செயல்கள் அதிகரிப்பிற்கான காரணமாகும். ஆகையால் உடனடியாக இங்கிருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும். இதுவே நல்லிணக்க பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணியிடம் நாம் முன்வைக்கும் கோரிக்கையாகும். பொலிஸார் நினைத்தால் இவற்றை எல்லாம் கட்டுப்படுத்த முடியும்.

பொலிஸ்மா அதிபர் இவற்றை கட்டுப்படுத்துவதாக கூறி அதை செயலிலும் காட்டியிருந்தார். எனவே இவை எல்லாம் பொலிஸார் நினைத்தால் சிறுவிடயம். பெரும்பான்மையின மக்களுக்கு எந்தளவிற்கு சுதந்திரம் அதிகாரம் உள்ளதோ அந்தளவிற்கு எமக்கான சுதந்திரம் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர். (செ-4)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

கார்கள் வாடகைக்கு உண்டு
Axio, Premio, N16, N15, DAEWOO
தொடர்புகளுக்கு
077 996 1250
(5480)

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
அழையுங்கள் - 077 29 31 062
CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
(C-5336)

வீடு விற்பனைக்கு
புத்தூர் சந்தியில்
ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரிக்கு
அண்மையில் 50 மீற். தூரத்தில்
4 1/2 பரப்பு காணியில் சகல
வசதிகளுடன் அமைந்த
4 அறைகளுடன் இணைந்த
குளியலறையினைக் கொண்ட
வீடு உடன் விற்பனைக்குண்டு.
விலை பேசி தீர்மானிக்கலாம்.
தொடர்பு :
076 696 5124
(5431)

காணி விற்பனை
பலாலி வீதி, திருநெல்வேலியில் 05 பரப்பு காணி மொத்தமாகவும் துண்டுகளாகவும் விற்பனைக்கு உண்டு.
வீட்டுடன் காணி விற்பனை
பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகாமை வன்னியசிங்கம் வீதியில், 2 1/4 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-
0771671174, 0777286061
(5479)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

LONDON METROPOLITAN COLLEGE
சர்வதேச தரத்திலான கற்கைநெறிகளை நடாத்தும் யாழ்ப்பாணத்தின் முன்னிலைக் கல்விநிறுவனம்
IELTS LIFE SKILLS(A1)
Speaking & listening I Duration : 48 hours (Week & Week Ends)
WEEK DAYS :
Tuesday - 11 am to 1 pm
Wednesday – 11 am to 12.30 pm
Thursday – 11 am to 12.30 pm.
Friday – 11.30 am to 1 pm
WEEK ENDS :
Saturday – 11 pm to 1 pm
Sunday – 11 pm to 1 pm
UKBA இன் புதிய நடைமுறைக் கேற்ப settlement விசாக்களுக்கான IELTS A1 புதியபாடத்திட்டம் தற்போது கற்பிக்கப்படும்.
- ஒவ்வொருமாணவர் மீதும் தனிப்பட்டகவனம்
- இதுவரைபயின்ற அனைத்து மாணவர்களுமே சித்தி அடைந்துள்ளனர்
- ஒருவகுப்பிற்கு 10 பேர் மட்டுமேஉள்வாங்கப்படுவார் விரைந்து விண்ணப்பியுங்கள்.
- விண்ணப்பிக்கும் சகலமாணவர்களும் பரீட்சை எழுதக்கூடிய ஆற்றல் (Knowledge) விருத்திசெய்யப்படும்.
- ஆங்கில அறிவுகுறைவான மாணவர்களுக்கு தனிப்பட்டரீதியில் விசேடகற்றல் பயிற்சிவழங்கப்படும். இதற்காக மேலதிககட்டணம் அறவிடப்படமாட்டாது.
LONDON METROPOLITAN COLLEGE
www.expogroup.lk
திருமணமாகி வெளிநாடு செல்ல இருக்கும் அனைத்து மாணவர்களுக்கான கற்கை நெறி
LONDON METROPOLITAN COLLEGE
மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்தை நாடவும்.
ADDRESS : No 136, Palali road,
Parameswarajunction. Jaffna. I TP : 021 753 8395
(சி-5334)


La Passion
Hair - Beauty - Reflexology (லா பெஷன்)
✓ கெயார் கட்-ஆண் (HAIR CUT MALE) = Rs 200/=
✓ கெயார் கட் -சிறுவர் (HAIR CUT CHILDREN) = Rs 150/=
✓ முகச் சவ்ரம் (SHAVE) = Rs 150/=
✓ தலை மசாஜ்-ஆண் (HEAD MASSAGE MALE) = Rs 250/=
சகல வேலைகளும் தெரிந்த ஆண் முடி திருத்துனர் உடனடியாக எமது நிறுவனத்திற்கு தேவை (யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)
தொடர்புகளுக்கு: La Passion
176, K.K.S ROAD, JAFFNA.
0767593357
(5429)

NVQ Level 4 / Level 5 கல்விகற்கும் Engineering துறை தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களுக்கு பொறியியலாளராக அரிய வாய்ப்பு
City & Guilds
UK Exam 2016/2017 British / IESL Recognized Qualification
NVQ Level 4 / 5 படிக்கும் மாணவர்கள் தராதரப்பத்திரம் இன்றி கல்லூரி அதிபரின் சிபாரிசுடன் பின்வரும் துறைகளில் கல்வி கற்பதற்கு அரிய வாய்ப்பு
Civil Engineering
Electrical & Electronics
Quantity Surveying
Telecommunication
NVQ Level 4 மாணவர்கள் C&G Level 4 ஐயும்
NVQ Level 5 மாணவர்கள் C&G Level 5 ஐயும் கற்கலாம்
A/L / O/L மாணவர்கள் C&G Level 3 ஐயம் கற்கலாம்
வகுப்புக்கள் ஆரம்பம்: 06.08.2016
வடக்கு கிழக்கு மாணவர்களுக்கு Course Fee இல் 10-15% Discount வழங்கப்படும்
Course Director: Prof.க.சந்திரபோஸ்
(City & Guilds Medal of Excellence Winner)
APSS International
(College of Engineering Studies)
No.35, Nelson Place, Colombo 06. 011 2361587
077 230 6642
077 880 1204
(சி-5347)

Golden Way Spoken English Pack

சரளமாக ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க வீட்டிலிருந்தவாறே பயிற்சி பெறலாம்.
என் யோசிக்கிறீங்க? உங்களாலும் ஆங்கிலத்தில் பேச முடியும்.
◀ பூரண தமிழ் மொழி மூல விளக்கம். ◀ ஆங்கில பேச்சு பயிற்சி இலக்கண புத்தகங்கள். ◀ Spoken English CDs. ◀ Gift Vouchers ◀ Hand Bag வழங்கப்படும். ◀ காலம். 60 நாட்கள். ◀ Diploma In English சான்றிதழ். Pack விலை 1790/- மட்டுமே
Free இலவசம்
ரூ,10,000/- பெறுமதியான Cash Gift Vouchers
மேலதிக விபரங்களை பெற, பெயர், முகவரி வயது, என்பவற்றை
SMS செய்யுங்கள்
0777-280 834
Face book Lees Spoken English
Jei Educational System, P.o.Box.119 .Kandy- Tel.0813-840 815
(சி-002)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


வலம்புரி

# சங்குநாதம்

Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2047 | 31.07.2016 | தொலைபேசி : 021 222 3378

நாதம் 76



# பாதத்தைத் தேயவைக்கும்

# பதவி ஆசை

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# பௌத்த மதத்திற்காக குரல் கொடுக்கும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை



இலங்கையில் இருக்கக் கூடிய அத்தனை பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்க வேண்டுமாக விருந்தால், அரசியல் அமைப்புச் சீர்திருத்தமே ஒரே வழியென்று கருதப் படுகின்றது. இந்த கருத்தியலுக்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா. சம்பந்தனும் பரிபூரண உடன்பாடு கொண்டவராகவுள்ளார்.

இதன் காரணமாக இலங்கை பாராளுமன்றம் சட்ட சபையாக மாற்றப்பட்டு அரசியலமைப்பு திருத்தப் பணிகள் நடந்து வருகின்றன.

இதற்கு முன்னதாக அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் மக்கள் கருத்தறியும் பணியும் நடந்துள்ளது. மாவட்டங்கள் தோறும் நடந்த மக்கள் கருத்தறியும் செயற்றிட்டத்தில் மக்கள் அமைப்புகள் பங்கேற்று தமது கருத்துக்களை பதிவு செய்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நிலைமை இதுவாக இருக்கையில், அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பிலும் பலத்த வாத பிரதிவாதங்கள் உண்டு என்பது மறுதலிப்புக்குரியதன்று.

எதுவாயினும் நாட்டிலிருக்கக்கூடிய குறை குற்றங்களை நீக்குவதாக (புதிய) அரசியலமைப்பு சீர்திருத்தம் அமைந்தால் அன்றி அதனால் எந்தப் பிரயோசனமும் ஏற்பட மாட்டாது என்பது சந்தேகத்திற்கு இடமற்ற உண்மை.

இது ஒரு புறம் இருக்க, அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் மீது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கொண்டுள்ள நம்பிக்கை என்பது மிகவும் அபரிமிதமானது. இவ்வாறான அபரித நம்பிக்கை அவரிடம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பது தெரியவில்லை ஆயினும் அரசியலமைப்பு சீர்திருத்தம் நடந்தால் இந்த நாட்டில் இனவாதம், மதவாதம் என எல்லா நோயும் குணமடையும் என்ற சம்பந்தர் ஐயாவின் நம்பிக்கையை இப்போதைக்கு நாம் பரிகசிப்பது அவ்வளவு நல்லதல்ல.

எனினும் அரசியலமைப்பு சீர்திருத்தமும் திருத்தி அமைக்கப்பட்ட இனவாத, மதவாத பேணுகைக்கானது என்று கூறுவதில் தவறில்லை என்பதை தென் பகுதியில் நடந்து வரும் கருத்தியல்கள் உறுதி செய்துள்ளன.

அதிலும் குறிப்பாக

## மானசீக பௌத்தர்களாக வாழும் சிங்கள கத்தோலிக்க மக்கள்

ஏற்கனவே இருந்து வரும் பௌத்த மத சாசனத்திற்கு எந்தப் பாதிப்பையும் புதிய அரசியலமைப்பு சீர்திருத்தம் ஏற்படுத்தி விடக் கூடாது. இந்த நாடு பௌத்த நாடு.

எனவே பௌத்த மதத்திற்கு (புதிய) அரசியலமைப்பு சீர்திருத்தம் எந்த



நோவையும் ஏற்படுத்தி விடக்கூடாது என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டுமென்று கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கூறியுள்ளார்.

ஒரு கத்தோலிக்க மதத்தலைவர் இவ்வாறு கூறியிருப்பது நம் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தாலும் சிங்கள மக்கள் மத்தியில் அதுவொரு வழமையான விடயமாகவே கருதப்படும்.

பொதுவில் இலங்கை மண்ணில் உள்ள கத்தோலிக்க சிங்களவர்கள் உள்ளார்ந்தமாக பௌத்தர்களாகவே வாழ்கின்றனர்.

இந்த நாட்டில் பௌத்தம் தழைத்தோங்கினால் மட்டுமே சிங்களம் வாழ முடியும் என்பது அத்தனை கத்தோலிக்க சிங்கள மக்களினதும் கருத்தாகும். இந்த கருத்து நிலை அங்கு ஒருபோதும் குறைவடைவதில்லை. இதன் உச்ச கட்டமான வெளிப்பாடே கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் கருத்தாகவுள்ளது.

இலங்கை பௌத்த நாடு. பௌத்த மதத்திற்கான அரச சலுகைகள், அந்தஸ்துக்களை புதிய அரசியலமைப்பு சீர்திருத்தம் குறைத்து விடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக ஒரு கத்தோலிக்க மதத் தலைவர் இருக்கிறார் என்றால் அது எத்துணை முக்கியமானது என்பதை நாம் கற்றறிய வேண்டும்.

சிங்கள மக்களின் தாய்ச் சமயமாகிய பௌத்தத்தை பாதுகாப்பதில் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு இருக்கக்கூடிய அக்கறைப்பாட்டை இந்த நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொரு மதத்தலைவர்களும் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

பௌத்த மதத்திற்கு அரசியலமைப்பில் வழங்கப்பட்ட அந்தஸ்துக்களும் இந்த நாட்டில் மதவாதம், இனவாதம் விரிந்து பரந்து பேரழிவை ஏற்படுத்தக் காரணம் என்று இருக்கின்ற நிலைமையில்- பௌத்தத்திற்கான அதீத முன்னுரிமையை அரசியலமைப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று பலரும் கருத்துரைத்துள்ள இந்நேரத்தில் வத்திக்கானின் கத்தோலிக்க சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை பௌத்த மதத் திற்கான உயர் அந்தஸ்தை அரசியலமைப்பிலிருந்து நீக்கக் கூடாது என்று கூறி யுள்ளார் எனில் தென்பகுதியிலிருக்கக்கூடிய நிலைமை என்ன என்பதை புரிந்து கொள்வதில் கடினம் இருக்க முடியாது.

அதேநேரம் தன் இனம் சார்ந்த மக்களின் தாய்ச் சமயத்தை காப்பாற்றுவது மதம் மாறிய போதிலும் தனது தலையாய கடமை என்று மல்கம் ரஞ்சித் ஆண்டகை நினைத்திருப்பது உண்மையில் பாராட்டப்பட வேண்டியது.

இந்த நிலைமைதான் ஒட்டுமொத்த சிங்கள மக்களின் வெற்றிக்கு காரணமாகிறது.

ஆனால் இந்த நிலை இலங்கைத் தமிழ் மக்களிடம் இல்லை என்பதை சொல்லித்தானாக வேண்டும்.

மல்கம் ரஞ்சித் ஆண்டகை கூறியது பற்றி நாமும் சிந்தித்தால், தமிழ் மக்களின் தாய்ச் சமயமாகிய சைவம் தழைத் தோங்கினால் தான் இந்த நாட்டில் தமிழ் வாழும் என்று சொல்ல வேண் டும். எனினும் எந்தவொரு மதத்தலைவரும் அவ்வாறு கூறப்போவதில்லை. கூற வும் மாட்டார். அவ்வாறு கூறினால் அது தாம் தாம் சார்ந்த சபைகளை நிந்தி ப்பதாக பொருள்படும் என்று உரைக்கின்றவர்களே இருப்பர்.

இதன் காரணமாகத்தான் தமிழ் இனம் இன்றுவரை பல்வேறு கஷ்டங்களை சந்திக்கின்றது.

தமிழ் மக்களின் தாய்ச் சமயமாகிய சைவம் வாழ்ந்தால் தான் தமிழ் வாழும். ஏனெனில் தமிழ் ஒரு பக்தி மொழி.

பக்தி மொழியாகிய தமிழ், தேவாரத்திருமுறைகளிலும் சித்தாந்த வேதாந்தங்களிலுமே உயிர் வாழ்கின்றது. அந்த உயிர்ப்பை நாம் தூக்கித் தொலைவில் வைத்து விட்டு தமிழ் வளர்க்க தலைப்பட்டுள்ளோம். இந்த நிலைமை மாற வேண்டும். கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை போன்றவர்கள் தமிழ் இனத்திலும் இருக்க வேண்டும்.

அப்போதுதான் தமிழ் வாழும்.

க்த்தோலிக்க மதத்தின் கொள்கையை பின்பற்றுவோம். ஆனால் பௌத்தர் களாகவே வாழ்வோம் என்ற நினைப்புடைய கத்தோலிக்க மதத் தலைவர்கள் தென்பகுதியில் இருக்கும் வரை இந்த நாட்டில் சிங்களம் தழைக்கும்.

அதேநேரம் சைவசமயத்தை வேரறுத்து தத்தம் சமயங்களை புகுத்த வேண்டும் என்ற சின்னத்தனங்கள் இருக்கும் வரை தமிழ் வாழ்வதே கடினம் என்பது தான் உண்மை.

இந்த உண்மையை சமயவாதமாக எவர் பார்த்தாலும் அதுவே மாபாவமாக அமையும்.

ஆகையால் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் நாம் நிறைய கற்க வேண்டும்.

பௌத்தம் எங்கள் தர்மம் என்று அவர் கூறிய கருத்து எத்துணை உயர்வானது. அதுவும் காலம் உணர்ந்து உரிய வேளையில் கூறியது எவ்வளவு பெறுமதியானது என்பதை நாம் உள்ளுணர வேண்டும்.

இத்தகைய பெறுமதிகள் தென்பகுதியில் இருப்பதால்தான் இறைவனும் அவர்கள் பக்கமாக இருக்கின்றார் போலும்.

மணிவாசகன்

# பாதத்தை தேய வைக்கும் பதவி மீது கொண்ட ஆசை



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியினர் நல்லாட்சி அரசிற்கு எதிரான பாதயாத்திரையை கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்துள்ளனர்.

கண்டியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த பாதயாத்திரை கொழும்பை நாளை முதலாம் திகதி வந்தடையும் என்று உறுதிபடத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணைகளையடுத்து ராஜபக்ஷ குடும்பத்தார் ஒருவர் பின் இன்னொருவராக கைது செய்யப்பட்டு வரும் நிலையில் பாதயாத்திரையை மகிந்த அணி ஆரம்பித்து இன்று நான்காவது நாளாகிறது.

இந்த பாதயாத்திரை குறித்து அச்சம் கொள்ளவில்லை என்று அரச தரப்பினர் குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியினர் கருத்துரைத்துள்ள போதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அரசாட்சி சீர்குலைந்திருந்ததாகவும் ஒழுங்காக ஆட்சி செய்திருந்தால் இரு கால்களும் தேயும் வரை பாதயாத்திரை செய்திருக்க வேண்டி வந்திருக்காது என்றும் அவர் சாடியுள்ளார்.

இரு பாதங்களும் தேயும் வரை பாதயாத்திரை செய்யும் அளவுக்கு மகிந்த ராஜபக்ஷ அர்ப்பணிப்புடன் இதில் பங்கேற்கவில்லை. பாதயாத்திரை என்று தலையங்கம் இடப்பட்டுள்ளதே தவிர மகிந்த உட்பட பல முக்கியத்தர்கள் வாகன யாத்திரைதான் செய்கின்றனர். எனவே மகிந்த மற்றும் அவர் தரப்பிலுள்ள முக்கியஸ்தர்களின் இருகால்களும் தேய வாய்ப்பில்லை.

**கள்ளத் தனம் செய்து வெறியாட்டம் ஆடும்**
**கள்ளைப் பாலாக்கிக் களியாட்டம் போடும்**
**கடவுள் இருப்பதைக் கருதாமல் ஓடும்**
**மனம் ஒரு குரங்கு மனித மனம் ஒரு குரங்கு**
***(கவிஞர் கண்ணதாசன்)***

மூன்றாவது முறையாக ஜனாதிபதியாகிவிட வேண்டும் என்ற அவாவுடன் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே தேர்தலை நடத்தி அதில் தோல்வியடைந்த மகிந்த அடுத்து வந்த பாராளுமன்றத் தேர்தலில் பிரதமர் ஆகும் கனவுடன் களம் கண்டார்.

ஆனால் பாராளுமன்றம் செல்லும் அதிகாரத்தை மட்டுமே அவரால் பெறமுடிந்தது. மகிந்தவுக்கு மட்டுமல்ல தினேஷ் குணவர்த்தன, பசில் ராஜபக்ஷ, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, நாமல் ராஜபக்ஷ, பந்துல குணவர்த்தன, கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட பலர் ஓரங்கட்டப்பட்டனர். அது மட்டுமின்றி வாரத்துக்கு ஒருவராக கைது செய்யப்படுவதும் சிறைச்சாலையில் அடைக்கப்படுவதும் பின்னர் சிறைச்சாலை வைத்தியசாலையில் நோயாளர்களாக அனுமதிக்கப்படுவதும் என்ற நிலை கஷ்டமாக மாறிக்கொண்டிருக்கையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த பாதயாத்திரையும் கஷ்டமான காலகட்டத்தை அடைந்துள்ளது.

ஜனநாயக ரீதியில் தொடர் தோல்விகளை சந்தித்த மகிந்த, இன்னும் பதவி ஆசை அடங்காத நிலையில் பாதயாத்திரையை ஆரம்பித்துள்ளார். பாதயாத்திரைக்கு பல்லாயிரக்கணக்கான மக்களையும் அழைத்து தனக்கு ஆதரவுள்ளது என்பதையும் வெளிப்படுத்தியுள்ளார்.

மகிந்தவின் மனம் பதவிகளை விட்டுக் கொடுக்க இன்னும் தயாராகவில்லை. இறக்கும் வரை உயர் பதவியில் இருக்க வேண்டும் என்ற நோக்கோடு நாட்டில் அரசியல் அமைப்பில் தன் இஷ்டத்துக்கு திருத்தங்களை கொண்டு வந்த மகிந்த பாராளுமன்றத்தையும் நீதித்துறையையும் கேலிக்கூத்துக்குள்ளாக்கியதன் விளைவை அனுபவிக்க தலைப்பட்டுள்ளார்.

பதவி ஆசையில் செய்ய மக்களுக்கு இழைத்த தீங்குகளை ஒருபொருட்டாக கருதாது தனது குடும்ப ஆட்சிக்கு முன்னுரிமை கொடுத்து தானும் தனது சுற்றத்தாரும் சுபபோக வாழ்க்கை வாழ்ந்தால் போதும் என்று கருதிய மகிந்த இழந்த பதவியை மீண்டும் அடைய இன்னும் பல எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடும்.

மகிந்த அணியின் எதிர்ப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும் நீண்ட நாட்களுக்கு சிறையில் வைப்பதற்கும் அரசிற்கு உள்ள ஒரே வழி மகிந்த ஆட்சிக்காலத்தில் ஈழத்தில் நடந்த தமிழின அழிப்புக்கு எதிராக சர்வதேச நீதி விசாரணைக்கு அனுமதியளித்து போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களை தண்டிப்பதேயாகும்.






நல்லாட்சி அரசு இதைச் செய்யத் தவறியதால் மகிந்த தரப்பு ஆட்சி கவிழ்ப்பு நடவடிக்கையில் சுதந்திரமாக ஈடுபடும். பல்லாயிரக்கணக்கான தமிழர்களைப் படுகொலை செய்யக் காரணமானவர்களுக்கு ஆட்சி அதிகாரத்துக்காக எதனையும் செய்யும் துணிச்சல் இருக்கும்.

2015 ஜனவரி 8 அன்று இராணுவ சதிப்புரட்சியில் ஈடுபட முயன்ற தரப்பு என்று தெரிந்தும் அவர்களுக்கு ஏற்ற சூழ்நிலையை பேணிப்பாதுகாப்பது ஆபத்தான விளைவை ஏற்படுத்தும்.

எனவே மகிந்த ஆட்சியை கவிழ்க்க கூட்டுச் சேர்ந்தவர்கள் மகிந்தவின் கூட்டு எதிரணியை இல்லாது செய்ய போர்க்குற்ற விசாரணை என்னும் பிரமாஸ்திரத்தைக் கையிலெடுக்க வேண்டும். நல்லாட்சி நிலைக்கவும் நாட்டு மக்கள் நலமோடு வாழவும் பாதயாத்திரை செல்லும் பாதகர்களை பதபதைக்க வைக்க அதிரடி முடிவுகளை எடுக்க வேண்டும்.

**எஸ்.ஆர் கரன்**




# நடப்பது எல்லாம் நன்மைக்கே!

**கா**ட்டு ராஜா சிங்கத்தின் குகை வாசலில், ஏகப்பட்ட மிருகங்களின் கூட்டம். காட்டு ராஜா, வேட்டையாடச் சென்ற போது, கால்விரலில் அடிபட்டு, விரல் துண்டாகி விட்டதென்று அறிந்து துக்கம் விசாரிக்கத்தான் காட்டுப் பிரஜைகளான மிருகங்கள் கூடியிருந்தன.

ஒவ்வொரு மிருகமாக வரிசையில் நின்று, குகையின் உள்ளே சென்று, சிங்க ராஜாவைப் பார்த்து விட்டுத்திரும்பின.

சிங்கராஜா காலில் பலமான கட்டுடன், கட்டிலில் படுத்துக் கிடந்தது. அருகே சிங்கராணி, வழியும் கண்ணும், சிந்திய மூக்குமாக அமர்ந்து இருந்தது.

ஒவ்வொரு மிருகமாக வரிசையாகச் சென்று கொண்டிருந்தபோது, வரிசையின் இடையே வந்து, புகுந்து கொண்ட குள்ளநரி, சிங்க ராஜாவின் அருகே சென்றதும் பெருமூச்சு விட்டபடி "ஊம் நடப்பது எல்லாம் நன்மைக்கே" என்றது. சிங்கராஜாவுக்கு கடுங்கோபம் வந்துவிட்டது.

நமது காலிலுள்ள ஒரு விரலே போய்விட்டது. இந்தக் குள்ளநரி, நடப்பதெல்லாம் நன்மைக்கே, என்று கூறுகிறதே. "பிடி அதை அடைத்துவை, குகைச்சிறையில்!" எனக் கட்டளை இட்டது சிங்கராஜா.

சிப்பாய்க் குரங்குகள் பாய்ந்து, நரியைப் பிடித்து இழுத்துச் சென்றன.

"ஒவ்வொரு காரியமும் நமது நன்மைக்குத்தான் நடக்கிறது என்ற உண்மையைத்தானே சொன்னேன்" என்று புலம்பியபடி சென்றது குள்ளநரி.

சிங்கராஜாவின் காலிலுள்ள புண் குணமாவதற்கு, மூன்று மாதகாலம் கடந்தது. காலில் ஒருவிரல் இல்லாமையால், சிங்கராஜா கம்பீரமாக நடக்க இயலாமல், நொண்டி நொண்டி நடந்தது. அதனால் மிருகங்கள் எல்லாம் மறைமுகமாக "நொண்டி ராஜா" என அழைத்தன.

இப்படிச் சிங்கராஜாவை எல்லோரும் கேலி செய்வதைக் கேட்டு, சிங்கராணிக்கு மிகுந்த வருத்தம். என்ன செய்வது? இந்தப் பட்டத்தைச் சூட்டியது எந்த மிருகம் என்பது தெரிந்தால், இளவரசன் சிங்கக்குட்டியிடம் தண்டனை கொடுக்கச் சொல்லலாமே என நினைத்தது.

உண்மையில் இப்படி பெயர் வைத்தது, குறும்புக்கார முயல் என்பது எவருக்கும் தெரியாது.

சிறையில் அடைபட்டிருந்த குள்ளநரிக்கு, சைவ உணவே தினசரி ஒரு வேளை வழங்கப் பட்டது. காட்டுக்கிழங்கையும் கனிகளையும் பார்த்தாலே குள்ளநரிக்கு பிடிக்காது, என்ன செய்வது? வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்காமல், வார்த்தையைக் கொட்டிவிட்டு, வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டோமே, என ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தது குள்ளநரி.

வெகுநாட்களாகியும் குணமாகாமல் காலை நொண்டிக் கொண்டே ஒரு நாள் காட்டில், வெகுதூரம் வேட்டைக்கு வந்து விட்ட சிங்கம், ஒரு இடத்தில் திறந்து வைக்கப்பட்டிருந்த ஒரு கூண்டுக்குள், ஆட்டுக்குட்டி ஒன்று இருந்ததைக் கண்டது. ஆவலுடன் ஆட்டுக்குட்டியின் மீது பாய்ந்து, கடித்துக் குதறித் தின்றது.

தின்று முடிந்து, ஏப்பம் விட்டபடி திரும்பிய சிங்கம் அந்த இரும்புக்கூண்டு கம்பிக்கதவால் மூடப்பட்டிருந்ததைக் கண்டு, திகைத்தது. மடத்தனமாக கூண்டுக்குள் அகப்பட்டுக் கொண்டோமே என்று நினைத்து வேதனைப்பட்டது. ஆத்திரத்தில் கர்ஜனை செய்தது. அப்போது கூண்டில் அடைபட்ட சிங்கத்தை, தங்கள் வண்டியில் கட்டி இழுத்துச் சென்ற காவலர்கள், "நம் இளவரசர் கேட்டபடி அவர் விளையாடுவதற்கு ஒரு சிங்கம் கிடைத்துவிட்டது. இதைப் பார்த்தால் மிகவும் மகிழ்ச்சியடைவார். இளவரசரின் மகிழ்ச்சியைக் கண்டு மன்னர் நமக்குப் பரிசுகள் கொடுப்பார்", என்றெல்லாம் பேசிக்கொண்டே அரண்மனையை அடைந்தனர்.

கூண்டிலிருந்த சிங்கத்தை இறக்கியபோதுதான் அது நொண்டி நொண்டி நடந்ததை அறிந்தனர்.

இதைக்கண்டு வருந்திய அவர்கள், "இது ஊனமுற்ற சிங்கம். இதை நம் இளவரசர் விளையாடப் பழக்கப்படுத்த முடியாது. "எனவே, இதைக் காட்டில் கொண்டு போய் விட்டுவிடுவதே நல்லது" என்று கூறியபடி சிங்கத்தை மீண்டும் காட்டுக்குள் கொண்டு சென்று விட்டுத் திரும்பினர் காவலர்கள். சிங்கத்திற்கு மகிழ்ச்சி பொங்கியது.

நமது கால் விரல், இல்லாததால்தான் நம்மை விட்டு விட்டார்கள். "நடப்பது எல்லாம் நன்மைக்கே" என்று அன்றைக்கு நரி சொன்னபோது, ஆத்திரப்பட்டு அதைக் கூண்டில் அடைத்தோம். ஆனால் அது சொன்னது சரியென்று இப்போதுதான் உணர முடிகிறது" என்றெல்லாம் நினைத்தபடி தனது குகைக்குச் சென்ற சிங்கம், தனது மனைவியிடமும் குட்டிகளிடமும் நடந்ததைச் சொன்னது.

உடனடியாக, சிப்பாய்க் குரங்குகளை அழைத்து, "சிறையைத் திறந்து குள்ளநரியை வெளியில் அனுப்புங்கள்" என்று உத்தரவிட்டது.

அதன்படி சிறையை விட்டு, வெளிவந்த குள்ளநரியை வரவேற்ற சிங்கராஜா, "அறிவுக் கடலே, இன்று முதல் நீங்கள்தான் எனது மந்திரி, நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று அன்று நீங்கள் சொன்னது உண்மையாகி விட்டது. யார் எதைச் சொன்னாலும் அவசரப்படாமல் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டேன் என்று மகிழ்ந்தது.

**நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று நினைத்தால் துன்பம் தரக்கூடிய செயல் எதுவும் இல்லை.**


முத்தான 10 தமிழ் செனல்கள் இப்பொழுது PEO TV யில்!

Sri Lanka Telecom



அதிநவீன தொழில்நுட்பத்துடன்கூடிய PEO TV யில் இப்பொழுது நீங்கள் சன் TV, சன் மியூசிக், KTV, விஜய் TV, கலைஞர் TV. இசையருவி, சிரிப்பொலி, ஆதித்யா TV, ராஜ் TV மற்றும் ராஜ் மியூசிக் போன்ற 10 தென்னிந்திய செனல்கள் உட்பட உள்நாட்டு மற்றும் சர்வதேச TV செனல்களை மிகத் துல்லியமாகப் பார்த்து மகிழுங்கள். தென்னிந்திய செனல்களில் உடனுக்குடன ஒளிபரப்பாகும் உள்நாட்டு, வெளிநாட்டு செய்திகள், றியாலிட்டி ஷோக்கள், அறிவுபூர்வமான போட்டிகள், குடும்பப் பாங்கான நாடகங்கள் மற்றும் புதிய, பழைய திரைப்படங்களைப் பார்த்து மகிழுங்கள்.

PEO TV யில் உள்ள சிறப்பம்சங்கள்

கெச்-அப் TV

வீடியோ ஒன் டிமாண்ட்

பிக்சர் இன் பிக்சர்


றெயின் புறூவ்

PEO TV

TV பார்க்க சிறந்த வழி

PEO TV இணைப்பைப் பெற அழையுங்கள்

24h 1212





# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
SMS (குறுந்தகவல்) 021 567 1532



தாஜ்மஹால் பற்றி என்ன நினைக்கிறீங்கள்?

ஈழத்தமிழரின் சுயவிபரக் கோவையை சொல்லுங்கள்?

நம் நாட்டில் சமத்துவம் இருக்காம். அப்ப கிரிக்கெட் அணியில் சமத்து...

**கரன் — கரணவாய்**

**பயங்கரவாத தடைச்சட்டம் பற்றி?**

யுத்தம் முடிவடைந்த பின்பும் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கும் பதம்.

**லயன்சன் — வளலாய்**

**கபாலி வசூல் பற்றி?**

உலகம் முழுவதும் வெளியாகி ஏழு நாட்களில் 400 கோடியைத் தொட்டுவிட்டது.

**பிரணவன் — மூளாய்**

**இவ்வளவு காலமும் நான் எந்த வேலைக்கும் போகல இனி வேலைக்கு போகனுமா வேண்டாமா?**

சும்மா இருக்கிறது ரம்பக் கஷ்டம் ராசா. அந்த வேலையை நீ செய்கிறாய் என்றால் தாராளமாய் செய்.

**நந்தகுமார் — மானிப்பாய்**

**நம் நாட்டில் சமத்துவம் இருக்காம். அப்ப கிரிக்கெட் அணியில் சமத்துவத்தைக் காணோமே?**

இலங்கை என்ற ஒரு சிறு புள்ளியை உலக அரங்கில் எடுத்துக் காட்டியவர் முரளிதரன். இவர் பல இடங்களில் தான் ஒரு தமிழன் என்பதை கூறத்தவறினாலும் ஒரு சாதனையாளன் தமிழன் என்று நாம் தலையில் வைத்துக் கொண்டாடினோம். அந்த சாதனையாளன் அவுஸ்திரேலியா அணியின் பந்துவீச்சு ஆலோசகராக நியமிக்கப்பட அதே சாதனைத் தமிழனை இப்போது துரோகி என்கிறார்கள். எப்போதும் தமிழன் கறிவேப்பிலை தான்.

**நாகினி — பல்லவராயன்கட்டு**


**ஐந்து தலை நாகம் இருக்கிறது உண்மையா?**

கணனியின் கைவண்ணத்தில் ஐந்தென்ன ஐம்பது தலையுடனும் நாகத்தை உருவாக்கி விடலாம்.

**ஜனனி — திருநெல்வேலி**

**ஆயிரம் நண்பர்களில் உண்மையான நட்புக்கொண்ட நண்பனை எப்படி கண்டு பிடிப்பது?**

நட்பு என்பதன் மறுபெயர் நம்பிக்கை. அந்த நம்பிக்கைக்கு யார் துரோகம் செய்யாமல் உண்மையாக இருக்கிறாரோ அவர்தான் உண்மையான நண்பன்.



**கமல் — வல்வெட்டித்துறை**

**இன்றைய தமிழ் தலைமை பற்றி?**

தந்தை செல்வா - அமிர்தலிங்கம் போன்ற தலைவர்கள் பற்றி நிறையப் படித்திருக்கிறேன். இப்போது எம்மவர்களில் சிலர் நான் தந்தை செல்வா - அமிர்தலிங்கம் ஆகியோரின் பாசறையில் வளர்ந்தவன் என மார்தட்டுகிறார்கள். இருந்தாலும் அவர்களின் கொள்கை செயல் இவர்களில் இம்மியும் இல்லை என்பது எமது கருத்து.

**அருள்நேசன் - வினோ**

**ஈழத்தமிழரின் சுயவிபரக் கோவையை சொல்லுங்கள்?**

பெயர்– ஈழத்தமிழன். வேறு பெயர் - பயங்கரவாதி, இனவாதி. வயது - கல்தோன்றா மண் தோன்றா காலம். தொழில் - அடிவாங்குவது. அடிவாங்கும் இடம் - பொலிஸ் நிலையம், இராணுவ நிலையம், தற்போது யாழ்.பல்கலைக்கழகம். உப தொழில் - காட்டிக்கொடுப்பது. பெருமைப்படுவது - ஆண்டான் பரம்பரை என்று, விட்டது - தன்மானத்தை. விடாதது - சாதியை. செய்யத்துடிப்பது - அஞ்சலி நிகழ்வுகள். செய்யாதது - ஒற்றுமையாய் இருப்பது. மறந்தது - கல்வியை. மாற்ற நினைப்பது - எதுவுமில்லை. மாறாதது - வீட்டுக்கு ஓட்டுப்போடுவது. உப குணம் - மறதி. வீரம் - வெளிநாட்டுக்குப் போன பின்தான் வரும். சாதனை - மதுபாவனையில் முதலிடம். எதிர்காலத்திட்டம் - தொடர்ந்தும் மதுபாவனையில் முதலிடம் வகிக்கப் பாடுபடுவது.

**கம்சன் — மாங்குளம்**

**தாஜ்மஹால் பற்றி என்ன நினைக்கிறீங்கள்?**

ஷாஜகான் தன் காதலிக்காக கட்டிய நினைவுச் சின்னம் என்பதைவிட அந்த அழகிய கட்டுமானத்திற்காய் இரவு பகல் கஷ்டப்பட்ட ஒவ்வொருவரின் காதலிகளும் ஒவ்வொரு கற்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவை அனைத்தையும் மும்தாஜ் என்கின்ற பெயர் மறைத்துவிட்டது.

**தர்சி — யாழ்ப்பாணம்**

**காதலித்து ஏமாற்றும் ஆண்கள் பற்றி?**

ஏமாற்றும் ஆண்களாய்ப் பார்த்துக் காதலிக்கும் பெண்கள் பற்றி?

**அபி — விசுவமடு**

**இந்தக் காலத்தில் மனிதனைவிட நாய்க்கு மரியாதை கிடைக்கிறதே?**

நாய்கள் நம்பிக்கைக்குத் துரோகம் செய்வதில்லையே.

**சகுந்தினி — மந்துவில்**

**நல்லாட்சி அரசு இயங்குகிறதாம் உண்மையா?**

நான் ஜனாதிபதியாக இருக்கும் வரை போர்க்குற்ற விசாரணைகளுக்கு வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதியேன் - ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

**வாசன் — அல்வாய்**

**ஊமையின் தாய்மொழி என்ன?**

மௌனம்

**கஜன் — முல்லை**

**காதல் பாடல்கள் மனதை கொள்ளை கொள்கின்றன ஏன்?**

காதல் வயப்படாதவர்கள் இந்த உலகில் இல்லை என்பதனால்.

**கிரி — நெல்லியடி**

**காதல் தோல்விடைய காரணம் என்ன?**

அத்திபாரத்தை சரியாகப் போடாமல் வீட்டைக் கட்டிவிட்டு பின்பு அது இடிந்துவிட்டது என்று புலம்பி என்ன பயன்.

**பாணு — உடுப்பிட்டி**

**சேகுவேரா பற்றி?**

1967-ம் ஆண்டு ‘சே’ யூரோ கால்வாயை கடந்து செல்கிறார். ஆடு மேய்க்கும் பெண்ணில் இரக்கப்பட்டு 50 பெலோக்களைக் கொடுத்துவிட்டு செல்கிறார். அதே பெண்ணால் ‘சே’வின் இடம் காட்டிக்கொடுக்கப்படுகிறது. பெவிலியன் நாட்டு இராணுவத்துடன் சண்டை நடக்கிறது.

காலில் பலத்த காயத்துடன் ‘சே’ கைது செய்யப்படுகிறார். இடிந்த கட்டடம் ஒன்றில் சிறை வைக்கப்படுகிறார். ‘சே’க்கு உணவு கொண்டு வந்தவரிடம் இது என்ன இடம் என கேட்கிறார்.

அதற்கு அவர் இது ஒரு பள்ளிக்கூடம் என்கிறார். ‘சே’வின் கண்களில் நீர் பெருகியது. பிள்ளைகள் படிக்கும் இடம் ஏன் இவ்வளவு அழுக்காக இருக்கிறது என்று. சாவின் விளிம்பில் கூட ‘சே’வின் தேச அர்ப்பணிப்பு வியக்கத்தக்கது.

**உங்கள் கேள்விகளை அனுப்புங்கள்**

**குறுந்தகவல் (SMS)**

**021 567 1532**



# கவிதைக் கலசம்

## நினைவுகள்

சுட்டெரிக்கும் சூரியனை
தொட்டு விளையாட நினைக்கும்
குழந்தை மனம் கொண்டவள்தான்
என் நிலா இருள் சூழ்ந்த வேளையிலே
தனக்கு மட்டும் ஒளி பாய்ச்சச்சொல்லும்
அவளின் குறும்புத்தனம்தான்
அவளை ரொம்பவும் எனக்குப் பிடிக்கும்
நீ இல்லா நேரமது உன் நினைவுகளை
சுமக்கும் என் இதயமது வேரில்லா
விழுதுகள் போல் வாடிக்கிடக்கித்திங்கே
நிலா விட்டுப் பிரிந்த உறவுகளை
தொட்டுப் பார்க்க நினைக்கின்றேன்
முடியவில்லை என் இதயமதைக்
கட்டுப்படுத்திக் காத்துக்கிடக்கிறேன்
தொலைக்கப்பட்ட நம் நினைவுகள்
என்று முடித்து வைக்கின்றேன்...?

சிறுவையூர்
த.ரவீந்திரசர்மா

## வாழும் நீதி

வாழ்க்கை சுமையானது என்று
வாதம் பேசும் வரட்டு விவாதம்
தேவையற்றது காண்பீர் உலகில்
வாழ்வும் தாழ்வும் என்றும்
வழியில் வருவதல்ல
உழைத்து வாழும் உந்தன் கையில்
உள்ளது உலகம் உணர்வாய் நன்று
வாழ்க்கை என்பது சுமையால் உள்ளது
வாழும் வழியை மறக்கும்போது
வாழும் வழியை நன்கு இன்று
தெரிந்து கொண்டு திசையைத்தேடு
தெரியும் உனது எதிர்காலம்
தேடியதெல்லாம் தெரிவதுமில்லை
நாடியதெல்லாம் வருவதுமில்லை
என்று ஏங்கி உன்னை நீயே
தாழ்த்தியிங்கு தயக்கம் கொள்ளாதே
முடியும் என்ற முயற்சியேயிங்கு
வெற்றிப்படியாகும் உணர்வாய் நன்று
உறுதிகொண்ட உள்ளத்தோடு
வீறுகொண்டே உலகை நாடு
வீழும் கொடுமை வாழும் நீதி
வாழ்வும் உனதே ஆகும் நாளை

க.சிவகுமார்

## தேவையின் பார்வை

நிழலை நோக்கிச் சென்றால்
நாம் நிழலைப்
பிடிக்க முடியுமா?
ஒளியை நோக்கிச்
சென்றால்தான்
நம் நிழல்கூட நமக்குப்
பின்னே வரும்
விடியலை நோக்கிய
பயணங்களில்
ஒளியைப் பின் தொடர்வோம்
அதிர்ஷ்ட வாசல்கள்
தானாகத் திறப்பதில்லை
எங்கே விடாமுயற்சி
இருக்கிறதோ– அங்கே
அற்புதச் செயல்கள்
பிறந்து கொள்கிறது
நம் ஒரு விரலை
நீட்டினாலும்–அதற்கு
ஒரு நோக்கம்
இருக்கவேண்டும்
ஒரேயொரு வார்த்தை
பேசினாலும்
அதற்கு ஒரு தேவை
இருக்க வேண்டும்
நாளைய எதிர்பார்ப்புக்களை
நேற்றைய ஏமாற்றங்கள்
அடக்குவதற்கு
இடம் கொடாதீர்கள்
துணிந்து நில்
தொடர்ந்து செல்
தோல்வி கிடையாது

அ.நளினாசினி
கோண்டாவில்

## இப்படிக்கு எட்டப்பன்

வீரத்தாய் மறவர் நாம்
வீழ்ந்து விட்டோம் என
எண்ண வேண்டாம்

கருவில் இருக்கும் போதிலேயே
தமிழ் வீரமுட்டிய
விழுதுகள் நாம்

மானத்துக்காய் வாழும்
கவரிமான் –நாம்
மண்டியிடுவோமென்றெண்ணவேண்டாம்

காயத்திற்கு உம்
மருந்தைப் போடோம்– தாய்
மண்ணைக் கட்டி மாற்றிடுவோம்

கைதட்டல் கரகோசம்
விண்ணைப் பிளந்திட
திரை மூடுகிறது

கொழும்பில் இருந்து
ஒரு கோல் றிங் றிங் றிங்...
“என்ன பேச்சு பேசுறது?”

ஐயா சாமி மந்தைத் தமிழரிடம்
ஓட்டுப் பெறுவதற்கான
உத்தி ஐயா இது

ஐக்சன்துரை அவர்களே
தேர்தல் முடியும்வரை
உசுப்பேற்றிப் பேச தங்கள் அனுமதி...?

மாவை. நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்– 312



## தங்கை ஜாக்கிரதை

அன்னையும் அப்பனும்
இல்லையோ
அண்ணனவன் அமுதூட்டி
மகிழ்கிறான்
சிறுமியே நீ
குமர்ப் பருவத்தை
அடைந்து விடாதே
பாதகச் செயல்கள்
மலிந்து கிடக்கும்
இப்புவியில் உன்
விழிகளின் ஏக்கம்
எதுவோ அண்ணனும்
தங்கையும் ஜாக்கிரதை

கு.குலமாலிகா
சங்கானை

## பாசம்

அன்போடு உணவை
ஊட்டிவிடும் அண்ணன்
ஆசையாய் வாங்கி
உண்ணுகின்ற தங்கை
என்னவொரு பாசம்
இதிலில்லை வேசம்
தொடரவேண்டும்
உங்கள் பாசம்

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## உன்னைப்போல் பலர் இருந்தால்

உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோராவார்
அன்னை தந்தையற்ற சிறுமி
உன் அன்புத் தங்கையா?
அயல் வீட்டுச் சிறுமியா
பக்குவமாய் ஊட்டுகின்றாய்
நீ பார்போற்றும் வேந்தனடா
அன்பின் அணிகலனாக
பண்பின் சிகரமாக
பாசத்தின் உறைவிடமாக
அன்புக்கு ஓர் அண்ணனாக
உன்னைப் போல் பலர் இருந்தால்
பூமியே சொர்க்கமடா

சி.கஜா
முரசுமோட்டை

## கண் காணும் தெய்வம்

பொறுப்புணர்வற்ற
அது புரியாத
இக்கால ஆண்
சகோதரர்கள் மத்தியில்
தானுண்ணாது தங்கையுனக்கு
ஊட்டிவிட ஓர் அற்புதமான
அண்ணன் உனக்கு வாய்த்தானே
யார் செய்த புண்ணியமோ?
அவன் அண்ணன் அல்ல
கண்காணும் தெய்வமே
இம்மேதினியில்

திரிசூலி மௌலி
பண்ணாகம்

## தி(தெ)ரு விளையாடல்

தெருமீது சில்லை உரசும்
உயர் வேக இயந்திர ஊர்திகள்
எல்லைதாண்டி அரங்கேற்றும்
விபத்து நிகழ்வில்
ஜோடியாக இழக்கும்
பெற்றோரால்
ஏதிலிகளாகும் சிறார்களில்
பாசமலருக்கு பசிபோக்க
நீளும் பாசக்கரங்களையும்
படைத்து முன்னதை அடைத்து
எம் பெருமான் நடத்தும்
தி(தெ)ரு விளையாடல் என்னே!

அராலியூர் சோ.சிவகுமாரன்

## புரிந்துணர்வு

வறுமை வாட்டும் போதும்
பொறுமையைக் கடைப்பிடிக்கும்
இந்தப் பாசப்பிணைப்பிற்கு
ஈடு இணையேதுமில்லை
நூற்றுக்கு நூறு வீதம்
உண்மையானதொன்று
இது ஊர்கள் தாண்டி
உலக மயமாகும் போது
விலகிப் போகும் பகையுணர்வு
அருகில் வரும் புரிந்துணர்வு


க.நாகராசா
நுணாவில்

## அண்ணனே தங்கையின் தாய், தந்தை

‘விதியின் வழியில்– நாம்
செய்த பாவம்தான் என்ன!
தாயும் தந்தையும் நம்மை
பிரிந்துவிட்ட உலகில்
அதன் வலியை மறக்க
அன்போடு இந்தப் பாவைக்கு
அமுதூட்டிவிடும் அண்ணையே
உன் அன்புக்கு ஈடேது?
இன்னொரு ஜென்மம் வேண்டும்
அதில் நான் உனக்கு
அன்னையாகும் வரம் கேட்கிறேன்
என் அண்ணா

ச.அகல்யா
சண்டிலிப்பாய்

# மௌனத்தின் தேடல் –313



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
‘மௌனத்தின் தேடல்’
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 03.08.2016ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# “ஆயிரம் காலத்துப் பயிர்”




மானிடப்பிறப்பு எடுத்ததற்கு அர்த்தபுஷ்டியாய் அறம், பொருள், இன்பம், வீடு என்றநற்பயன்களை அடைவதற்கு ஒரு வாழ்க்கைத் துணையைத் தேடிக்கொள்வது திருமணம் என்ற இருமனம் இணையும் நாளாகும். திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர் என்பார்கள். அதனைச் சிறப்புடன் நிகழ்த்திட திட்டமிடல் என்பது அவசியமாகும்.

அந்தக்காலத்தில் ஓர் திருமணம் பேசி முடிப் பதற்கு ஆயிரம் செருப்புத் தேயும் என்று கூறு வார்கள். இந்தக் காலத்தில் வரன் தேடுவதற்கு தரகர்கள், திருமண சேவை நிலையங்கள், இணையத்தள திருமணசேவை, பத்திரிகை விளம்பரங்கள் எனப்பல்வேறு வசதிகள் உள் ளன. மேலும் வரனைத் தேடுவதற்கு அழகும் அந்தஸ்தும்தான் முக்கியம் என்று வைத்துக் கொள்ளாதீர்கள். பார்த்ததும் பிடித்துப் போய் விட்டதற்கு என்பதற்காக உடனே திருமணத் திற்கு சம்மதம் என்று கூறிவிடாதீர்கள். எதற்கும் நிதானமாக செயற்படுங்கள். இது உங்கள் பிள்ளைக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும். உங்கள் முயற்சிக்கு வித்திடும்.

விவாகம் என்னும் கிரியை இந்து மதத்தில் மிக முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய
மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை

எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க வாழ்வதற்கு விவா கம் என்பது முக் கிய பங்கு வகி க்கின்றது. விவா கம் என்பதற்கு சிறப்பாக சுமப் பது என்று பொருள் உண்டு.

ஆதலால் தர்ம காரியங்க ளைச் சுமந்து செய்யவேண்டிய பொறுப்பு இந்த விவாகத்தில் நிச்சயிக்கப்படுகின்றது. இத்தர்ம நியதியைக்கொண்டே இல்வாழ்க்கை இல்லறம் என்று போற்றப்படுகிறது. இது மங்க லத்தைத் தருவதால் கல்யாணம் என்றும் தெய் வத் தன்மை பொருந்திய மணமாதலால் தமி ழில் திருமணம் என்றும் வழங்குவர். விவா கத்தில் ஐந்து அம்சங்கள் முக்கியமானதாகும். அவை வாக்தானம், கன்னிகாதானம், வரப் ரேக்ஷனம், பாணிக்கிரகணம்,சப்தபதி என்பன வாகும். திருமண நாளன்று பெண் வீட்டார் சுபநேரத்தில் தோழனுடன் மாப்பிள்ளை வீட்டிற்குச் சென்று மாப்பிள்ளையை மணப்பந்தலுக்கு அழைத்து வருவர். மாப்பிள்ளை வீட்டில் பால் அறுகு வைத்து மாப்பிள்ளையை புனித நீரா ட்டுதல், தலைப்பாகை வைத்தல் போன்ற நிகழ் வுகளும் அதேபோல பெண்ணுக்கும் புனித நீராட்டுதல் இடம்பெறும். திருமணக் கிரியை களைச் செய்ய வரும் சிவாச்சாரியார் தான் செய்யப்போகும் கருமத்திற்கு இறைவனிடத்தும் பெரியோர்கள் இடத்தும் அனுமதி வேண்டுதலைத் (அனுக்ஞை) தொடர்ந்து சங்கற்பம் (அதாவது செய்யப் போகும் கிரியைகளுக்காய் உள்ளத்தை உறுதி செய்து கொண்டு பவித்திரம் அணிதல்) இடம் பெறும். எந்தக் கிரியைகளையும் இனிது முடிப் பதற்கு மேலான தலை வரான விநாயகப் பெரு மானின் திருவருளை வேண்டி விநாயகர் பூசை முடிவில் மூவகைத் தத்து வங்களையும் நினைத்து நீரை உட்கொள்ளல் ஆச மனம் எனப்படும்.

அங்குரார்ப்பணம் எனப் படுவது முளைப்பாலிகை நவதானிய முறை இடுதல். அதாவது முளைக்கும் விதைகளை பாலிகையிடல் என்பதாகும். அனைத்திலும் இந்தக் கிரியைகள் உண்டு. திருமணத்தில் இதைச் செய்வதன் பொருள் நவதானியம் செழித்து வளர்வது போல இத் தம்பதி களின் வாழ்வும் செழிப்புடையதாக அமைய வேண்டும் என்பதற் காகவும் நவ தானியம் எனப்படும் முளைப் பாலிகைகள் மனிதனால் விதைக்கப்பட்டு மனிததேவைக்கு பயன்படுத்துவதுபோல இல் வாழ்க்கையில் கணவன்- மனைவி மற்றோர்க்கும் தம்மால் இயன்ற உதவி புரிந்து அறத்தோடு என்னும் பாலிகை இடும் சுமங் கலிகள் போல மங்களமாய் வாழவேண்டும் என்பதற்காகவும் இடம்பெறும். எடுத்த கருமம் இடையூறின்றி இனிது நிறை வேறவும் சிந் தனை இன் றிக் குறித்த கரும சிந்தனையில் மூழ்கியிருக்க வும் எல்லாப் பாவங்களை யும் நீக்கி புனித மயமாக்க இரட்சபந்தனம் என்னும் கிரிகை இடம் பெறு கின்றது. தமிழில் காப்புக் கட்டுதல் என்று கூறுவர். மணமகன், மணமகள் இருவருக்கும் தனித்தனியாக இந்தக் காப்புக் கட்டுதல் இடம் பெறும்.

குடும்ப வாழ்வைத் தொடங்கும் போது அது தவறின்றி நடப்பதற்கு அக்குடும்பத்தவரது முன்னோரது ஆசீர்வாதம் வேண்டும். அதற்காக முன்னோர்களாகிய பிதுரர்களை திருமணத்திற்கு அழைத்து அவர்களது ஆசிகளைப் பெறும் வகையில் செய்யப்படும் கிரியை நாந்தி சிரார்த்த மாகும். இது மணமகன்,மணமகள் ஆகியோரின் தந்தையர்களால் செய்யப்படும். பெண்ணை முறையாகப் பெற்றோர் தாரதத்தம் செய்வார்கள். பொருளை இறுதியாகக் கொடுப் பதற்கு முன்ன ர் தண்ணீர் விடுதல் முன்னாள் மரபு. இதற்குரிய கிரியையானது மணமகன், மணமகள் இரு பகுதிப் பெற்றோரையும் அழை த்து சங்கல்பம் செய்து சம்பந்திகள் ஒருவ ருக்கொருவர் உபசாரம் செய்வது.

அழகும் அறிவும் பொருந்திய நன்கு அலங் கரிக்கப்பட்ட இந்தப் பெண்ணை நான் உனக்கு அளிக்கின்றேன். அவள் தர்மம், செல்வம், அன்பு அனைத்தையும் காப்பவளாக இருப்பாள் என்ற கருத்துப்பட அம்மந்திரம் ஓதப்ப டுகின்றது. இம்மந்திரத்தை சிவாச்சாரியார் கூறி தாயார் மூன்றுமுறை தண்ணீர்விட மங் கள வாத்தியங்கள் முழங்க கன்னிகாதானமாக மணமகன் கையில் கொடுப்பார். தண்ணீரை தாரையோடு கொடுப்பதால் இதற்கு தாரதத்தம் என்பர். தாலியிலே சிவலிங்கம், விநாயகர் அல்லது லட்சுமியினுடைய திருவுருவம் அமைதல் சாலச்சிறந்தது. இதன் பின் ஒரு தட்டிலே மாங்கல்யம், கூறைச்சேலை, மாலை, கால்மிஞ்சி மற்றும் மங்கலப்பொருட்கள வைத்து மணமகளின் தந்தை, தாய் சபை யோரிடம் ஆசி பெறுதல். பின் மணமகன் தன் கையால் மணமகளிடம் கொடுத்து கூறைச் சேலை மாற்றி வரச்செய்தல், கூறைச்சேலை மாற்றி வந்ததும் மணப்பெண் மணமகனுக்கு வலப்பக்கம் வந்து அமர மாங்கல்யப் பூசை செய்து மணமகன் எழுந்து வலப்பக்கத்திற்கு வந்து சிவாச்சாரியார், அவையோர்கள் ஆசீர்வதிக்க கெட்டி மேளம் முழங்க கழுத்தில் தாலி கட்டுதல் நடைபெறும். தமிழில் மங்கல நாண் பூட்டல் என்று சொல்லப்படும்.

தாலிகட்டி முடிந்தபின் மாலை மாற்றுதல், பால் பழம் பருகுதல், பாணிக்கிரகணம் (கைபிடித்தல்), ஏழடி நடத்தல (ஸ்தபதி),அம்மி மிதித்தல், மோதிரம் போட்டு எடுத்தல், பிராயச்சித்தம், ஆரத்தி எடுத்தல், அருந்ததி பார்த்தல் ,வாழ்த்துதல்,ஆசீர்வாதம், பூதாக்கலம் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும். திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன. புதுமணத்தம்பதிகள் இல்வாழ்க்கையில் பூவும் நாரும் போல நகமும் சதையும் போல கண்ணும் இமையும் போல ஒருவரை ஒருவர் பிரியாமல் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து இரு மனங்களும் ஒன்றிணைந்து வாழ்ந்து கிடைத்தற்கரிய இல்வாழ்க்கையின் பயனை அனுபவித்து இந்த மண்ணிலே நல்ல வண்ணம் வாழ்ந்து மனிதப் பிறவி எடுத்ததன் பயனை அனுபவிப்பீர்களாக!

க.கனகசபை
முன்னாள் எழுதுநர்,
பரந்தன் இரசாயனக்
கூட்டுத்தாபனம்

# வாழைப்பழத்தோல் பலன்கள் ஏராளம்




**முள்ளை எடுக்க வேண்டுமா?**

கைகளிலோ, பாதத்திலோ, மரச் சில்லுகள் அல்லது முள் குத்தினால், முள் குத்திய இடத்தில் வாழைப் பழத் தோலினை மெல்ல தடவுங் கள். பின்னர் அந்த இடத்தை சுற்றி அழுத் தம் கொடுத்தால் எளிதில் முள் வெளியே வந்து விடும். ட்ரை பண்ணிவிட்டு சொல்லுங்க மக்களே.



**மருக்கள் காணாமல் போகச் செய்ய**

வாழைப்பழத் தோலினை மருக் கள் மீது தேயுங்கள். பின், வாழைப்பழத் தோலினை மருக்கள் மீது வைத்து ஒரு துணியினால் கட்டி ஒரு இரவு முழுவதும் வைத்திருங் கள். நாளடைவில் மருக்கள் மாயமாய் மறைந்துவிடும்.




**சரும அலர்ஜியா?**

ஏதாவது சிறு பூச்சி கடித்தால், அல்லது வேறு பிரச்சினைகளால், சருமம் தடித்து, அரிப்பு ஏற்படும், எரிச்சலும் ஆகும். இதற்கு முதலுதவியாய் வாழைப்பழத் தோலினை ட்ரை பண்ணுங்க. வாழைப்பழத் தோலை ஃப்ரிட்ஜில் வைத்து, அதன் பின் அதனை எரிச்சல் மற்றும் அரிப்பு இருக்கும் இடத்தில் தடவுங்க. விரைவில் நிவாரணம் கிடைக்கும்.



**முகப்பருவை எதிர்க்கிறது**


முகப்பருவை எளிதில் போக்க இன்ஸ்டென்டாய் வாழைப்பழம் இருந்தால் போதும். வாழைப்பழத் தோலில் இருக்கும் ஒரு என்சைம் சருமத்தின் துவாரங்களில் சென்று பாதிக்கப்பட்ட இடத்தில் செயல் புரிகிறது. இதனால் முகப்பருக்கள் குறைந்து, அதனால் ஏற்படும் தழும்புகளும் மறையும்.



**வெண்மையான பற்கள் பெற**

மஞ்சள் கறை இல்லாமல் வெண்மை யான பற்கள் பெற எல்லோருக்கும் ஆசை தான். இயற்கையான ப்ளீச்சான நம்ம வாழைப்பழத் தோல் இருக்கு பாஸ். அதை எடுங்க. தினமும் பல் விளக்கிய பின், காலையிலும் இரவிலும், வாழைப் பழத் தோலினைக் கொண்டு உங்கள் பற்களை தேயுங்கள். அப்புறம் பாருங்க. பற்கள் மின்னும்.







# கோபம் இருந்தால் இலாபம் வராது!

அடிக்கடி கோபப் படுபவர்களுக்கு தலைவலி, அஜீரணக்கோளாறு, தூக்கமின்மை, மனக்கவலை அதிகரித்தல், அடிவயிற்றில் வலி ஏற்படுதல், மனஅழுத்தம், உயர் இரத்த அழுத்தம், தோல் நோய்கள், மாரடைப்பு, பக்கவாதம் போன்ற பத்து வகையான நோய்கள் வருவதற்கான வாய்ப்பு இருப்பதாக மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்த உண்மை தெரிந்ததாலோ என்னவோ வெற்றியாளர்கள் அடிக்கடி கோபபப்பட்டு சொந்தக்காசில் சூனியம் வைத்துக் கொள்வதில்லை. உடம்பு நன்றாக இருந்தால்தான் உழைக்க முடியும் என்கிற உண்மையை அவர்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

ஒரு துறவி படகில் பயணித்துக் கொண்டிருந்தார். திடீரென்று படகின் பின்னால் வேறொரு படகு வந்து மோதியது. அந்த சத்தத்தைக் கேட்டு யாரது என்று கோபத்தோடு திரும்பிய அவர் அங்கே வெறும் படகு மிதந்து வந்திருப்பதைக் கண்டார்.

## கோபப்படுவதால் எந்தப் பிரச்சினையும் தீர்ந்ததாக சரித்திரம் கிடையாது

அப்போதுதான் தமக்கு கோபம் தோன்றியதற்குக் காரணம் அந்தப்படகு அல்ல; தன் உள்மனம்தான் என்பதை புரிந்து கொண்டார்.

எல்லாவற்றையும் துறந்த ஞானியாலேயே கோபத்தைத் துறப்பது சிரமமாக இருக்கும்போது நாம் மட்டும் எம்மாத்திரம்?

வெற்றியாளர்கள் கோபத்தைத் தவிர்ப்பதில்லை. அதனை திறம்பட நிர்வகிக்கிறார்கள். நாம் நேர நிர்வா கம் என்று சொல்வதைப் போல அவர்கள் கோப நிர்வாகத்தை கற்று வைத்திருக்கிறார்கள். கோபம் வந்தால் உடனே வெடித்துக் கோபப்படுவதில்லை. மாறாக குறைந்தபட்சம் ஐந்து நிமிடங்களாவது அமைதி காக்கிறார்கள். பிறகு கோப உணர்வு குறைந்தவுடன் உரிய மனிதர்களோடு பேசிகோபத்திற்கு தீர்வு காண்கிறார்கள்.

புரிந்து கொள்ளுங்கள் கோப்படுவதால் எந்தப் பிரச்சினையும் தீர்ந்ததாக சரித்திரம் கிடையாது. மாறாக பிரச்சினைகள் பெரிதாக ஆவதற்கான வாய்ப்புகள்தான் அதிகம்.

கோபப்படாவிட்டால் வேலை நடக்காது என்று உங்களில் சிலர் முணுமுணுப்பது புரிகிறது. நாம் கோபப்படவேண்டாம் என்று சொல்லவில்லை. கோபம் எழுகிறபோது அதை ஐந்து நிமிடம் ஆறவிட்டு பிறகு உரியவரை தனியாக அழைத்து நீங்கள் சத்தம் போடலாம்.அப்படி நீங்கள் செய்கிற போது கோபத்தினால் ஏற்படும் எதிர்மறை உணர்வுகள் உங்கள் உடலை பாதிக்காது. எதிராளியையும் தனியாக அழைத்து கடிந்து கொள்வதால் அவரும் அதை அவமானமாகக் கருதமாட்டார்.

மாறாக கோபத்தை வெளிப் படுத்தவும் முடியாமல் அதை நிர்வகிக்கவும் தெரியாமல் கஷ்டப்பட்டால் என்ன ஆகும் தெரியுமா?


ஒரு ஆசிரியர் தமது மாணவர்கள் அனைவரையும் ஒரு பிளாஸ்ரிக் கவரில் கொஞ்சம் உருளைக்கிழங்குகளை வீட்டிலிருந்து எடுத்து வரச்சொன்னார்.அதை தினமும் அவர்கள் பாடப்பைக்குள் வைத்து பாடசாலைக்கு கொண்டு வரவேண்டும். அவங்கள் வீட்டிற்குச் செல்லும் வரை எங்கு சென்றாலும் அதனை கையில் எடுத்துச்செல்ல வேண்டும். இதுதான் அந்த மாணவர்களுக்கு கொடுக்கப்பட்ட வேலை.

மூன்றாம் நாளில் அந்த உருளைக் கிழங்குகள் அழுகத் தொடங்கின. புத்தகப்பையை திறக்கிற போதெல் லாம் அந்த நாற்றம் தாங்காமல் மாணவர்கள் மூக்கை மூடிக்கொ ண்டார்கள்.

ஐந்தாவது நாளன்று சில மாணவர்கள் அந்த அழுகிய நாற்றத்தை தாங்கமுடியாமல் ஆசிரியரிடம் புகார் தெரிவித்தனர்.

அதற்கு ஆசிரியர் சிரித்துக் கொண்டே இப்படித்தான் நீங்கள் உங்கள் மனதிற்குள் வெறுப்பு, கோபம் போன்றவற்றையும் சுமந்து கொண்டு திரிகிறீர்கள்... அதை எப்போதுவெளிவிடப்போகிறீர்கள்? என்று கேட்டார். உண்மைதானே!

சிலர் கோபத்தைக் குறைக்க தியானம் செய்கிறார்கள்; சிலர் கோபம் வருகிற போது அந்த இடத்தைவிட்டு எழுந்து செல்கிறார்கள்;சிலர் கோபம் வந்தால் மௌனம் காக்கிறார்கள்.நீங்கள் எதைச் செய்தாலும் சரி கோபத்தை மனதிற்குள்ளேயே பூட்டிப்பூட்டி வைக்காமல் அதற்கான காரணங்களை உரியவரிடம் பேசி பிரச்சினைகளைத் தீர்ப்பது நல்லது.கோபப்படுவதால் உடல் பாதிக்கப்படும்.கோபப்படுவோரின் கீழ் அறிவாளிகள் வேலை பார்க்க விரும்புவதில்லை.இதனால் கோபம் இருந்தால் இலாபம் வராது ●



---


உலக சந்தையில் அறிமுகமாகியுள்ள அட்டகாசக் கருவிகள்

### சைலண்ட் குறட்டை!



அமெரிக்காவில் குறட்டைவிடும் கணவர்களை விவாகரத்துச் செய்யும் பெண்கள் பலர். குறட்டை மன்னர்களின் குடும்ப வாழ்க்கையைப் பாதுகாப்பதற்காகவே சைலண்ட் பார்ட்னரை அறிமுகப்படுத்தியுள்ளனர் அமெரிக்காவைச் சேர்ந்த யோனி மற்றும் நெதனல். நீங்கள் தூங்கப் போகும் போது Smartpath எனும் ஒரு சிறிய கருவியை எங்கள் மூக்கின் மேல் பொருத்திவிட்டால் போதும்.அதிலுள்ள ஓடியோ சிஸ்டம் தானாகவே குறட்டையின் டெசிபலுக்கு ஏற்றவாறு செயற்பட்டு சத்தத்தை நீக்கிவிடுகிறது. இது எல்லாவிதமான முகங்களுக்கும் பொருந்தும் வகையில் இலகுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

### சிக்கனத் தண்ணீர்!



தண்ணீருக்காகத் தான் அடுத்த உலகப் போர் நடக்கும் என்று பல ஆராய்ச்சியாளர்கள் கூறி வருகிறார்கள்.ஆனால், அதன் அருமை தெரியாமல் தண்ணீரைத் தேவைக்கு மேல் விரயமாக்கிக் கொண்டிருக்கிறார்கள் பலர். அவர்களுக்குத் தாங்கள் பயன்படுத்தும் தண்ணீரின் அளவு தெரிவதற்கு வாய்ப்பில்லை.நாம் பயன்படுத்தும் தண்ணீரின் அளவைத் தெரிந்து கொள்வதற்காகவே டிராப்ளரை கண்டுபிடித்துள்ளார் அமெரிக்காவின் பாபக் எல்மை.இந்தக் கருவியை Water Tap அருகே வைத்துவிட்டால் நீங்கள் எவ்வளவு தண்ணீர் செலவிடு கிறீர்கள் என்பதை தண்ணீர் ஓட்டத்தின் சத்தத்தை வைத்தே மதிப்பிட்டு செலவு செய்யும் தண்ணீரின் அளவைக் கணக்கிடுகிறது. இதன் மூலம் தண்ணீரை எதற்கு அதிகமாக செலவிடுகின்றோம் என்பதை அறிந்து பயன்பாட்டு அளவைக் குறைத்துக்கொள்ள முடியும்.

### காற்றில் நீர்!



காற்றிலிருந்து தண்ணீர் எடுக்கும் புதிய கருவி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார் ஆஸ்திரியாவை சேர்ந்த கிரிஸ்டஃப் ஃபொண்டல் எனப்படும் இந்தக் கருவி காற்றில் இருக்கும் ஈரப்பதத்தினை எடுத்து அதைத் தண்ணீராக மாற்றுகிறது. இந்தத் தொழில் நுட்பத்தினைக் கொண்டு குடிக்கும் அளவிற்கு சுத்தமான தண்ணீரை உருவாக்க முடிகிறது. தண்ணீர் போத்தல் போல் இருக்கும் .இந்தச் சாதனம் சோலரினால் இயங்கக் கூடிய நீண்ட தூரம் சைக்கிள் ஓட்டுபவர்களுக்கு சைக்கிள் மாட்டி விட்டால் இது பயணத்தின் போது காற்றில் இருந்து தண்ணீர் எடுத்து இவர்களின் தாகம் தீர்க்கும். அற்புத மான கண்டுபிடிப்பு.

### ஸ்கான் கண்ணாடி



கண்ணாடியை பாடி ஸ்கானராகவும் பிட்னஸ் டிராக்கராகவும் பயன்படுத்தக்கூடிய ஓர் அட்டகாசமான கருவியாக மாற்றியுள்ளார் கலிபோர்னியாவைச் சேர்ந்த எட்ஸ்கெல்டர். கண்ணாடி, ஸ்மார்ட்போன் ஒப் மற்றும் ஓர் அளவுகோல். இவை மூன்றும் சேர்ந்ததுதான் இந்த நேக்கட். உங்கள் உடம்பினை ஸ்கான் செய்து உடல் பரிணாமங்கள், எடை மற்றும் தசை அளவினை 3D யில் காட்சிப்படுத்தி மொபைலுக்கு அனுப்பி விடுகிறது. இந்தக் கருவி உங்கள் உடம்பின் கொழுப்பு மற்றும் தசை அளவில் மாற்றத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டு அந்த டேட்டாவையும் அனுப்பிவிடும். இதன்மூலம் உடல் மாற்றத்தை மனதில் கொண்டு உடற்பயிற்சி மற்றும் உணவுப்பழக்கங்களைச் சீராக அமைத்துக் கொள்ளலாம்.

அலுவலகத்தில் புதிதாக வேலைக்குச் சேர்ந்திருக்கிறீர்கள். மேலதிகாரி ஒரு முக்கியமான வேலையை உங்களிடம் ஒப்படைத்திருக்கிறார்.



# உண்மையை சொல்ல 3 வழிகள்

சில மணிநேரம் கழித்து அவர் உங்களருகே வருகிறார். இன்னும் அரை மணிநேரம்தான் இருக்கு. வேலை முடிஞ்சுதா? என்று கேட்கிறார்.

உங்களுக்குத் தூக்கிவாரிப்போடுகிறது. காரணம் வேறு ஏதோ ஞாபகத்தில் அவர் சொன்ன வேலையைச் சுத்தமாக மறந்து விட்டீர்கள். இப்போது மீதமிருக்கும் அரைமணி நேரத்தில் அந்த வேலை யைச் செய்து முடிக்க இயலாது.

இந்தச் சூழ்நிலையில் நீங்கள் என்ன செய்வீர் கள்? உண்மையை ஒப்புக்கொண்டு மன்னிப் புக் கேட்பீர்களா?அல்லது எதுவுமே தெரியாதது போல் தலையாட்டி விட்டு அரக்க பரக்க அந்த வேலையைச் செய்து முடிக்க முயற்சி செய்து தோற்றுப்போவீர்களா?

'உண்மையைச் சொன்னால் தானே பிரச்சினை வரும்!'

பெரும்பாலானோர் உண்மையைச் சொல்லமாட்டார்கள். காரணம் பயம்.

செய்தது தவறுதான் என்றாலும் அதை ஒப்புக்கொள்கிற தைரியம் இங்கே பலருக்கு இருப்பதில்லை.

அந்தத் தைரியம்தான் வெற்றிக்கு அவசியமான குணம் என்கிறது ஒரு சமீபத்திய புத்தகம்.

பொய் சொல்லத் தைரியமே தேவையில்லை, உண்மையைப் பேசுவதற்குதான் அது அவசியம் என்ற மையக்கருத்தைக் கொண்ட இந்தப் புத்தகத்தின் பெயர் The Courage Solution எழுதியவர் மிண்டி மெக்கென்சி.

உண்மையைப் பேசுவதில் ஒரு மிகப்பெரிய சக்தி இருக்கிறது என்கிறார் மிண்டி.

பல உண்மையைச் சொன்னால்தானே பிரச்சினை வரும்!

உதாரணமாக அலுவலகத்தில் ஏதோ ஒரு பிரச்சினை. அதைத் தீர்ப்பதற்கு நம் மேலதிகாரி ஒரு யோசனை சொல்கிறார். அது மகாசொதப்பலாக இருக்கிறது.ஆனால் அவரோ அது ஒரு மிகப்பிரமாதமான விடயம் என்று நினைத்துக்கொண்டு பேசுகிறார்.இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கறீங்க?என்று நம்மிடம் கருத்துக் கேட்கிறார்.

இந்தச் சூழ்நிலையில் உண்மையைச் சொன்னால் என்ன ஆகும்? மறுகணம் வேலை போய்விடாதா?

அதற்கு LCS என்றவொரு முறையைச் சிபாரிசு செய்கிறது இந்தப்புத்தகம். அதாவது Like,Concern,Suggest.

முதலில் அவர் சொல்லும் யோசனையில் ஏதாவது ஒரு நல்ல அம்சம் இருக்கும்.

ஒருவேளை இல்லாவிட்டாலும் கஷ்டப்பட்டு அதைத் தேடிப் பிடிக்க வேண்டும். அந்த யோசனையை நாம் விரும்புவதற்கான ஒரு காரணத்தை உண்டாக்க வேண்டும்.இது தான் Like

ஆனால் அப்படியொரு காரணம் இருந்தாலும்கூட இந்த யோசனையை நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அது ஏன்? இந்த யோசனை செயற்படுத்தப்பட்டால் என்ன பிரச்சினை வரும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்.இதைச் சொல்லி உங்கள் கவலையை அவருக்குப் புரியவைக்க வேண்டும். இதுதான் Concern.

நிறைவாகபோகிற போக்கில் அவருடைய யோசனையைக் குறைசொல்வதோடு நிறுத்தக்கூடாது.அந்த யோசனைக்கு மாற்றாக நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதைச் சொல்ல வேண்டும் இதுதான் Suggest.

சுருக்கமாகச் சொன்னால் நம் ஊரில் பக்குவமாப்பேசறது என்பார்களே.அதுதான் LCS.இந்த நுட்பத்தைப் பயன்படுத்தினால் உங்க யோசனை நல்லால்லே என்பதைக்கூட மேலதிகாரிக்குப் பிடிக்கும்படி சொல்லிவிடலாம்.

பெயரெடுக்கவும் தொழிலில் தனிப்பட்ட முறையில் முன்னேறவும் தைரியத்தை. உண்மையைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று சொல்லும் மிண்டி அதற்குச் சுவையான பல உத்திகளையும் சொல்கிறார்.

ஒவ்வொருவரிடமும் பாராட்டத்தக்க அம்சங்கள் இருக்கும்.அவற்றை முனைந்து கண்டுபிடியுங்கள்.

சக ஊழியர்களை வெறும் போட்டியாளர்களாக எண்ணாதீர்கள்.அவர்களுடன் நீங்களும் ஒரே குழுவில்தான் இருக்கிறீர்கள். ஆகவே அலுவலகத்தில் நட்பை அதிகரிக்கப் பழகுங்கள்.

நீங்கள் இல்லாமல் அலுவலகம் எப்படி நடக்குமோ என்கிற பதற்றத்தில் விடுமுறையை வீணாக்காதீர்கள். உங்கள் தனிப்பட்ட நேரத்தைத் தைரியமாக அனுபவியுங்கள்.பின்னர் நீங்கள் அலுவலகம் திரும்பும்போது அது உங்களை மேலும் சிறப்பாக செயற்படச் செய்யும் ●







உன்னோட மண்டை ஏன் இப்படி வீங்கி இருக்குடா...?
முடி பயங்கரமா கொட்டுதுன்னு சொன்னேன்ல...!



முதலாளி... நான் கபாலியோட தீவிர ரசிகன்.
இருக்கலாம் அதுக்காக கிச்சன்ல ஆர்டர் சொல்லும் போது பூரிடா... பொங்கல்டா..ன்னு கத்தக்கூடாது.

குற்றவாளிக் கூண்டுல ஏறினதும் தலைவர் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறாரே. எதுக்கு முதல் முறையா அவரு பேச்சைக் கேட்க இவ்வளவு கூட்டம் வந்துருக்காம்....





ஏன் இப்படி திடீன்னு டி.வி தொடர் பார்க்கிறீங்க?
என் அம்மாவோட ஆத்மா சாந்தியடையிற விதமா அவங்க பார்த்த சீரியல் எல்லாம் நான் பார்க்கிறேன்.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தாவிட்டால் சாகும் வரை சாகாவிரதம் இருப்பேன் என்று எச்சரிக்கின்றேன்.





விளையாட்டு வினையாகிடுங்கிறது சரியாகப்போச்சு எப்படிச் சொல்றே?
விளையாட்டா அவ பின்னால சுத்தினேன் அவளையே எனக்கு கல்யாணம் பண்ணி வைச்சுட்டாங்க.

தலைவருக்கு அண்ணா மேல எவ்வளவு பாசம் பாருங்க.. தூக்கத்துலகூட அண்ணா அண்ணா...ன்னு உளர்றாராம்.
நீங்கவேற! அவரு தமன்னா... தமன்னா என்று சொல்லியிருப்பாரு!





நீ கட்சியை எண்ணி ஓட்டுப் போட்டியா... வேட்பாளரை எண்ணி ஓட்டுப் போட்டியா..?
பணத்தை எண்ணி ஓட்டுப் போட்டேன்.

சங்கோஜப்படாம கேட்டுச் சாப்பிடுங்க. இது உங்க வீடு மாதிரி...!சந்தோஷம் மாமா வீட்டு ரிஜிஸ்ட்ரேஷனை எப்ப வைச்சிக்கலாம்?





டையிங் சென்ஸ் என்றால் என்ன? நரைக்க ஆரம்பிச்சதுமே தலைக்கு டை அடிக்கப் பழகுறதுதான்

ஸ்வாமி நீங்க தவத்தில் இருந்தப்ப அதைக் கலைக்க அழகுப் பெண் ஒருத்தி வந்தாள். நான் தான் விரட்டிட்டேன்...
மூடனே நான் தவம் செய்ததே அவள் வரணும்ன்னு தானேடா?



# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் மாநாட்டிற்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் அறிவிக்க, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

பண்டிதர் பரமலிங்கம் தலைமையுரை ஆற்றினார்.

**பண்டிதர்:-** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்-சிங்கள மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தை அடுத்து களனிப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை பேராசிரியர் கல்கத்த தர்மானந்ததேரர் ஓர் உண்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழ்ப் பண்பாடு நிறைந்த பல்கலைக்கழகம் என்பதால் அங்கு தமிழ்க் கலாசாரத்திற்குத் தான் முன்னுரிமை கொடுக்க வேணும் எண்டு.

ஒரு சிங்கள பேராசிரியர் அதிலும் புத்த பிக்கு ஒருவர் உண்மையை சொல்லியமைக்காக இந்த ஆலடி மாநாட்டில அவருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றுவம்.

(பண்டிதர் இவ்வாறு கூறியதும் தீர்மானத்தை மாநாட்டில் இருந்த அனைவரும் ஏகமனதாக நிறைவேற்றினர்)

**விதானையார்:-** பண்டிதர் ஐயா, சிங்கள மக்களிலும் நல்லவர்கள் இருக்கினம். அவர்களை இனங்கண்டு எங்களுக்கு அவர்களை துணையாக்க வேணும்.

**கங்காணி:-** இப்ப நான் சம்பந்தர் ஐயாவின்ர இடத்தில இருந்தால், தர்மானந்த தேரரை சந்தித்து அவருக்கு நன்றி சொல்வதோடு உங்களைப் போன்றவர்கள் ஒன்றுசேர்ந்து தென்பகுதி முழுவதிலும் தமிழ் மக்களின் உண்மை நிலையை எடுத்துக்கூற வேண்டும் என்று கேட்டிருப்பன்.

ஆனால் என்ன செய்யிறது எங்கட சம்பந்தர் ஐயா தர்மானந்த தேரரோட கடைசி வந்தாலும் கதைச்சிருக்கமாட்டார்.

**மூப்பர்:-** யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில தமிழ்ப் பண்பாட்டிற்கு முன்னுரிமை கொடுக்க வேணும் எண்டு தர்மானந்த தேரர் சொன்னதே எங்கட தமிழ் அரசியல் தலைமைக்கு பிடித்திருக்காது. ஏன் அவர்களுக்கு மட்டுமல்ல எங்கட புத்திஜீவிகள் சிலருக்கும் பிடித்திருக்காது.

கண்டிய நடனம் ஆடினால் என்ன தவறு என்று கேட்கிறவியலும் எங்களிட்ட இருக்கினம் தானே! இவர்களுக்கு நாங்கள் விளக்கம் கொடுக்கிறதைவிட தர்மானந்த தேரர் விளக்கம் கொடுக்கிறது 'தான் நல்லது. இப்பவாவது இவைக்கு உண்மை விளங்கியிருக்கும் என்று நம்புறன்.

(ஆலடி மாநாட்டில் தர்மானந்த தேரரின்ர கதை வலு சுவாரஸ்யமாகப் போய்க் கொண்டிருக்கையில், வாத்தியார் வைத்திலிங்கம் மட்டும் அமைதியாக எதையோ ஆழமாக யோசித்தபடி அமர்ந்திருந்தார். அவரின் அமைதியைக் கண்ட கங்காணியார் குரல் கொடுத்தார்)

**கங்காணி:-** என்ன வாத்தியார் ஆழமாக யோசிக்கிறியள். என்ன சங்கதி?

**வாத்தியார்:-** என்ர மூன்றாவது மகன் வாத்தித் தொழிலை அல்லோ செய்யிறான். இப்ப தனக்கு அந்தப் பதவி வேண்டாமாம். தான் அந்த வேலையில இருந்து விலகப் போறதாகச் சொல்லுறான்.

**கங்காணி:-** ஏனாம் வாத்தியார்?

**வாத்தியார்:-** வேலை பிடிக்கவில்லையாம்.

**விதானையார்:-** வாத்தியார் வேலைதானே நல்லது. நான் விதானையாராக இருந்த காலத்தில சனங்கள் என்னை ஏசினதும் உண்டு. அப்ப நினைச்சனான் வாத்தியார் வேலைதான் நல்லது எண்டு.

**வாத்தியார்:-** விதானையார் நீங்கள் இப்படிச் சொல்லுறியள். ஆனால் என்ர மகன் அனுப்பின கடிதத்தை வாசித்துக் காட்டுறன் பாருங்களன்.



## வாத்தியாருக்கு மகன் வாத்தியார் எழுதிய கடிதம்

(வாத்தியார் தன்ர மகன் எழுதிய கடிதத்தை தன் இடுப்பில் இருந்து எடுத்தார். அனைவரும் அதனை ஆர்வத்தோடு கேட்பதற்காக தாங்கள் இருந்த இடங்களில் தங்களை முன்னும் பின்னுமாக அசைத்து தங்களை தயார்படுத்திக் கொண்டனர். வாத்தியார் கடிதத்தை வாசிக்கத் தொடங்கினார்)

**வாத்தியார்:-** என் அருமை அப்பாவுக்கு அன்பு வணக்கம். ரெலிபோனில் கதைப்பதால் கடிதம் எழுத வேண்டிய தேவை இதுவரை ஏற்படவில்லை. ஆனால் இன்று கடிதம் எழுத வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது அப்பா.

எனக்கு ஆசிரியர் தொழில் என்றால் மிகவும் பிடிக்கும். என் தந்தையார் ஒரு தலைமை ஆசிரியர் என்று நான் பெருமையாகக் கூறிக் கொள்வது வழக்கம். ஆனால் இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் ஆசிரியர் தொழிலே வெறுத்து விட்டது.

அப்பா நீங்கள் ஆசிரியராக இருந்த காலம் ஒரு பொற்காலம். உங்கட காலத்தில ஆசிரியத் தொழிலுக்கு இருந்த மதிப்பும் மரியாதையும் வேறு. ஆனால் இன்று நிலைமை அதுவல்ல.

என் பாடசாலை அதிபர்; ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையில் எட்டடி தூரம் இருக்க வேண்டும் என்கிறார். பாடசாலை வகுப்பறை நீள, அகலம் 20 அடி. இதில எட்டடியை இடைவெளியாக்கினால் எப்படியப்பா மாணவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பது, கொப்பி திருத்துவது. அதிலும் இப்ப இருக்கிற குழு முறையிலான கற்றல் செயற்பாட்டில் ஆசிரியர் மாணவர்களுடன் இருந்து கூட கற்பிக்க வேண்டும் என்று சொல்லப்படுகின்றது.

ஆனால் அதிபரோ எட்டடி தூரத்தை கடைப்பிடித்தால் சோலி சுரட்டு வராது என்கிறார்.

இதுமட்டுமல்ல அப்பா, வகுப்பறைக்குப் போகவே விருப்பம் இல்லாமல் போயிற்று. மாணவர்கள்; சேர் அதிபர், ஆசிரியர்களுக்கு எத்தனை நாள் மறியல் எண்டு கேட்கினம். சந்தை, கடை என்று எங்க போனாலும் வாத்தியார் அந்த வாத்தியாருக்கு பிணை கொடுத்தாச்சோ என்று கேட்கினம். ஒரு புனிதமான ஆசிரியர் தொழில் இப்படியாப் போச்சு.

இனி நான் ஆசிரியராக இருந்தால் என்ர பாட்டில படிப்பித்துப் போட்டு வருவன். எந்த மாணவன் எக்கேடு கெட்டாலும் எனக்கு அதைப் பற்றி பிரச்சினை இல்லை என்று நினைத்தால் மட்டும் தான் இனி ஆசிரியத் தொழில் செய்யலாம்.

அதிபர் எட்டடி தூரம் விலத்தி நிற்கத் சொல்லுறார். கல்வித் திணைக்களம் சித்தி வீதம் கேட்குது. நான் என்னப்பா செய்ய? ஆசிரியத் தொழிலைச் செய்தால் அதை நேர்மையாகச் செய்ய வேணும் எண்டு நீங்க தானே அப்பா அடிக்கடி சொல்லுவியள்.

இப்ப இருக்கிற நிலைமையில ஆசிரியத் தொழிலை பற்றுறுதியோட செய்தால் இவருக்கேன் இந்த வேலை. அந்த மாணவன் படிச்சால் படிப்பான் இல்லை எண்டால் விடுவான். அவனுக்கு இல்லாத அக்கறை இவருக்கு ஏன் என்று கற்றவர்கள் கேட்கிற அளவில நிலைமை வந்திட்டுது அப்பா.

(ஆகையால் புனிதமான ஆசிரியத் தொழிலை போலியாகச் செய்ய நான் விரும்பவில்லை. அதால வேலையில இருந்து விலகுவதாக முடிபு செய்துள்ளேன்.

அப்பா என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.

*இப்படிக்கு*<br>*உங்கள் அன்பு மகன்*<br>*குலோத்துங்க சோழன்*

(வாத்தியார் கடிதத்தை வாசித்து முடித்ததும் ஆலடியில் நிசப்தம் நிலவியது.

நிசப்தத்தை கலைக்க பண்டிதர் குரல் கொடுத்தார்)

**பண்டிதர்:-** வாத்தியாற்ர மகன் எழுதினது நூறுவீதம் சரி. ஆசிரியத் தொழிலை கௌரவமாகச் செய்ய முடியாத நிலைமையில ஒரு நேர்மையாளன் இந்த முடிவைத் தான் எடுப்பான்...

**விதானையார்:-** எதிர்வரும் காலங்களில எல்லா வாத்திமாரும் தங்களுக்கென்ன மாணவர்கள் எக்கேடு கெட்டாலும் சரி என்று தான் முடிவெடுப்பினம். அதுக்குப் பிறகு தான் தெரியும் எங்கட மாணவர்களின் கல்வி அடைவு எவ்வளவு பின் தங்கி உள்ளது என்று.

**கங்காணி:-** விதானையார் இது விடயத்தில சமூகம் ஒன்று சேர்ந்து ஒரு முடிபுக்கு வரவேணும். இல்லை என்றால் எல்லாம் கஷ்டம் தான். இப்படி கங்காணி கூற அதை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# கர்ச்சிக்கும் தமிழக சிங்கம் ரவிச்சந்திரன் அஸ்வின்



மீண்டும் பார்முக்கு திரும்பியிருக்கிறார் தமிழக வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின். மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் அஸ்வின் எடுத்த விஸ்வரூபம் மரண மாஸ் லெவல். சச்சின் டெண்டுல்கர், டிராவிட், லக்ஷ்மன், டோனி போன்ற சீனியர் வீரர்களின் ஓய்வுக்கு பிறகு இளமைத் துடிப்புடன் ப்ரெஷ்ஷாக களமிறங்கி அசத்தி வருகிறது இந்திய அணி. விராட் கோலியின் வித்தியாச பார்முலாவில் இதுவரை இந்திய அணி டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து வெற்றிகளை குவித்து வருகிறது.

இலங்கை அணியை அதன் மண்ணிலேயே தோற்கடித்த விராட் கோலி தலைமையிலான இந்திய அணி, டெஸ்ட் தரவரிசையில் பல வருடங்களாக முன்னணியில் இருந்த தென்னாபிரிக்காவை, இந்திய மண்ணில் நடந்த டெஸ்ட் தொடரில் சுருட்டி வீசியது. தற்போது மேற்கிந்திய தீவுகளில் தடம் பதிக்க ஆரம்பித்திருக்கிறது.

ஆன்டிகுவாவில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் விராட் கோலி, நாணயச்சுழற்சியில் வென்று முதலில் பட்டிங் எடுத்தபோது பிட்ச் மந்த நிலையில் இருந்தது. 236 ரன்களுக்கு நான்கு விக்கெட்டுகளை இழந்திருந்தபோது பட்ஸ்மேன் வரிசையில் கோலி மட்டுமே களத்தில் இருந்தார். சஹா உட்பட அடுத்து வருபவர்கள் எல்லாமே சுமாராகவே விளையாடக் கூடியவர்கள் என்பதால், இந்தியா 350 ரன்களைத் தொட்டாலே அது நல்ல இன்னிங்ஸ் என கணித்திருந்தார்கள், கிரிக்கெட் நிபுணர்கள். ஆனால் வழக்கத்துக்கு மாறாக ஆறாவது நிலையில் சஹாவுக்கு பதிலாக களமிறங்கியவர் ரவிச்சந்திரன் அஸ்வின். கோலி வெளுத்துக் கட்ட, அஸ்வின் தட்டிக் கொடுக்க, மேற்கிந்தியத் தீவு பந்து வீச்சாளர்கள், முதல் நாள் சோர்ந்து போனார்கள்.

இரண்டாவது நாள் ஆட்டத்தில் விராட் கோலி முதன் முறையாக இரட்டை சதம் அடித்தார். இந்திய அணியின் வரலாற்றிலேயே இந்திய அணிக்கு தலைமை தாங்கிய கப்டன் ஒருவர் அந்நிய மண்ணில் இரட்டைச் சதம் அடிப்பது, இது தான் முதன்முறை என்பதால் வரலாற்றுச் சிறப்புக்கு சொந்தக்காரர் ஆனார். இதையடுத்து இந்திய அணி 404 ரன்கள் எடுத்திருந்தபோது விராட் கோலி 200 ரன்களில் அவுட் ஆனார்.

அதன் பின்னர் அஸ்வின் ஆடிய ஆட்டம் அனைவரையும் சிலிர்க்க வைத்தது. மிக கவனமாக ஒவ்வொரு பந்துகளையும் தேர்ந்தெடுத்து விளையாடினார். வேகப்பந்து வீச்சு, சுழற்பந்து வீச்சு என எதுவும் அஸ்வின் முன் எடுபடவில்லை. சாஹா மற்றும் கடைசி வரிசை பட்ஸ்மன்களை வைத்துக்கொண்டே ரன்களை சிறுகச் சிறுக சேர்த்து இந்தியாவின் ஸ்கோரை உயர்த்திக்கொண்டே இருந்தார். இதற்கிடையில் தனது மூன்றாவது டெஸ்ட் சதத்தை நிறைவு செய்ய அரங்கமே எழுந்து நின்று அஸ்வினுக்கு கைதட்டியது. 253 பந்துகளை சந்தித்து 113 ரன்களை அஸ்வின் குவித்து அவுட் ஆனார். கிட்டத்தட்ட 42 ஓவர்கள் தனி ஒருவனாக நின்று சமாளித்திருக்கிறார் அஸ்வின்.

விராட் கோலி வெற்றியின் மீது அலாதி ஆர்வம் உள்ளவர். முடிந்தவரை வெற்றிக்காக போராட வேண்டும், வெற்றியே இலக்கு, சமநிலை செய்வது என்ற பேச்சுக்கே இடமில்லை என்பது அவரது வாதம். "டெஸ்ட்டில் சாதனைகள் படைப்பது, 600 -700 ரன்களை எட்டுவது பெரிதல்ல, எதிரணியில் இருப்பது,விக்கெட்டுகளை வீழ்த்துவது தான் முக்கியம். டெஸ்டில் எந்த அணி விரைவாக 20 விக்கெட்டுகளை வீழ்த்துகிறதோ அந்த அணி வெற்றி பெறும். அந்த வகையில் பட்ஸ்மேன்கள், பவுலர்களுக்கு சம பொறுப்பு இருக்கிறது" எனச் சொல்வார். ஐந்து பட்ஸ்மேமன்கள், ஒரு விக்கெட் கீப்பர், ஐந்து பவுலர் என்ற விராட் கோலியின் பார்முலாவுக்கு அஸ்வின் மிகுந்த நம்பிக்கை அளித்திருக்கிறார்.

ஆறாவது, ஏழாவது நிலையில் இறங்கும் பவுலர் ஓல்ரவுண்டராக விளையாடினால் அது அணியின் சுமையைக் குறைக்கும் என்ற விராட்டின் கூற்றை ஏற்று, இதோ நானிருக்கிறேன் என தெம்பளித்திருக்கிறார் அஸ்வின். தான் இரட்டை சதமடித்ததை விடவும், அஸ்வினின் பெர்பார்மென்ஸ் குறித்து மிக்க மகிழ்ச்சியில் இருக்கிறார் விராட். அஸ்வின் பட்டிங்கோடு நின்றுவிடவில்லை, முதல் இன்னிங்ஸில் விக்கெட்டையே இல்லை என்ற நிலையில் இருந்து இரண்டாவது இன்னிங்ஸில் ஏழு விக்கெட்டைக் கைப்பற்றி "நான் வந்துட்டேன்னு சொல்லு, திரும்ப ஃபார்முக்கு வந்துட்டேன்னு சொல்லு" என தெறிக்கவிட்டிருக்கிறார்.

நான்காவது நாள் மைதானம் இன்னும் மந்தமாகிப்போக, சூழலுக்கு ஏற்ற பிட்சாக மாறிவிட அஸ்வினின் ஓப் ஸ்பின்னுக்கு மேற்கிந்தியத் தீவுகள் பட்ஸ்மேன்களால் பதில் சொல்ல முடியவில்லை. அஸ்வின் இதுவரை 33 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி அதில் 17 முறை ஒரு இன்னிங்ஸில் ஐந்து விக்கெட்டுக்கு மேல் வீழ்த்தியிருக்கிறார். மொத்தமாக 183 விக்கெட்டுகள். இன்னும் மூன்று டெஸ்ட் போட்டிகளில் 17 விக்கெட்டுகளை வீழ்த்தினால், கிளாரி கிம்மெட்டின் உலக சாதனையை முறியடித்து, அதிவிரைவில் டெஸ்ட் போட்டியில் 200 விக்கெட்டுகள் வீழ்த்தியவர் எனும் வரலாற்று சிறப்புக்கு சொந்தக்காரர் ஆவார் அஸ்வின்.

தமிழகம் மட்டுமின்றி, உலகமே கபாலி எதிர்பார்ப்பில் இருக்க, அஸ்வினுக்கும் கபாலி "முதல் நாள் முதல் ஷோ" பார்க்க வேண்டும் என்ற தீராத ஆசை இருந்தது. ரஜினியின் அதி தீவிர ரசிகரான அஸ்வின் கிரிக்கெட் காரணமாக கபாலியைப் பார்க்க முடியாத வருத்தத்தை தன்னை வைத்து கலாய்த்த மீம்ஸை டுவிட்டரில் ஷேர் செய்து, சமாதானம் செய்து கொண்டார். ஆனால் அந்த கவலைகள் எல்லாம் தாண்டி அஸ்வினின் மாஸ் பெர்பாமன் சில் இந்திய கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரும் மகிழ்ச்சி.

அன்டிகுவாவில் நடந்த முதலாவது டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 92 ரன்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகளைப் பந்தாடியது. இதே போல் மான்செஸ்டரில் நிறைவடைந்த பாகிஸ்தானுக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் இங்கிலாந்து அணி 330 ரன்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றியை பெற்றது.

இவ்விரு டெஸ்டுகளில் வீரர்களின் செயற்பாட்டின் அடிப்படையில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) புதிய தரவரிசைப் பட்டியலை வெளியிட்டது. இதில் பந்து வீச்சாளர்களின் தர வரிசையில், அஸ்வின் மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளார்.

அயல்நாட்டின் ஆடுகளத்திற்கு அஸ்வின் தகுதி படைத்தவர் இல்லை என்ற விமர்சனங்களை கடக்க அஸ்வின் போக வேண்டிய தூரம் நிறைய இருக்கிறது. அடுத்த மூன்று டெஸ்ட்களிலும் அஸ்வின் தொடர்ந்து அசத்துவார் என எதிர்பார்க்கலாம். (க)

# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்- தங்கப்பதக்கம்
பாடல்- சோதனை மேல் சோதனை
இசை- எம்.எஸ்.விஷ்வநாதன்
பாடியவர்- ரி.எம்.சௌந்தரராஜன்




சோதனை மேல் சோதனை போதுமடா சாமி
வேதனை தான் வாழ்க்கை என்றால் தாங்காது
பூமி(2)
சோதனை மேல் சோதனை போதுமடா சாமி

சொந்தம் ஒரு கை விலங்கு நீ போட்டது
அதில் பந்தம் ஒரு கால் விலங்கு நான் போட்டது
சொந்தம் ஒரு கை விலங்கு நீ போட்டது
அதில் பந்தம் ஒரு கால் விலங்கு நான் போட்டது
சோதனை மேல் சோதனை போதுமடா சாமி

ஆதாரம் இல்லையம்மா ஆறுதல் சொல்ல
நான் அவதாரம் இல்லையம்மா தத்துவம் சொல்ல
பரிகாரம் தேடி இனி எவ்விடம் செல்ல
எனக்கு அதிகாரம் இல்லையம்மா வானகம் செல்ல
ஒரு நாளும் நான் இது போல் அழுதவனல்ல
அந்த திருநாளை கடன் கொடுத்தவன் யாரிடம் சொல்ல

சோதனை மேல் சோதனை போதுமடா சாமி
வேதனை தான் வாழ்க்கை என்றால் தாங்காது
பூமி(2)
சோதனை மேல் சோதனை போதுமடா சாமி

(மாமா- காஞ்சிபோன பூமி எல்லாம் வற்றாத நதியை பாத்து ஆறுதல் அடையும்.
அந்த நதியே காஞ்சி போய்ட்டா??
துன்பப் படுறவங்க எல்லாம் அந்த கவலையை தெய்வத்துகிட்ட முறையிடுவாங்க.
ஆனா தெய்வமே கலங்கி நின்னா??
அந்த தெய்வத்துக்கு யாரால ஆறுதல் சொல்ல முடியும்???)

நானாட வில்லையம்மா சதையாடுது
அது தந்தை என்றும் பிள்ளை என்றும் விளையாடுது
பூவாக வைத்திருந்தேன் மனமென்பது
அதில் பூநாகம் புகுந்து கொண்டு உறவென்றது
அடி தாங்கும் உள்ளம் இது இடி தாங்குமா
இடி போல பிள்ளை வந்தால் மடி தாங்குமா

சோதனை மேல் சோதனை போதுமடா சாமி
வேதனை தான் வாழ்க்கை என்றால் தாங்காது
பூமி(2)
சோதனை மேல் சோதனை போதுமடா சாமி

# சவால்களை வென்ற பெண் சாதனையாளர்

மனங்களையும் நொருக்கி உடல்களையும் ஊனமாக்கிய 30 வருட யுத்தமானது ஏராளமான வடுக்களை எமது பூமிக்குத் தந்திருக்கின்றது. இழப்புக்களையும் வேதனைகளையும் தாங்கிக் கொள்ள முடியாமல் நொடிந்து போனவர்கள் ஏராளம். போர் கொடுத்த கடினமான, கசப்பான அனுபவங்களையே சவால்களாக கொண்டு வெற்றி பெற்றவர்கள் எமது தேசத்தில் உண்டு. கணவனை இழந்தும் பெற்றோர், சகோதரர்களை பறிகொடுத்தும் நடைப்பிணங்களாக வாழும் எத்தனையே பெண்கள் எம் தேசத்தின் பாதிக்கப்பட்ட ஞாபகங்களுக்கான அடையாளச் சின்னங்களாக வாழ்கின்றார்கள். தமது குடும்பத்தை தாமே சுமக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் வருமானம் தேடும் எத்தனையோ வலி சுமந்த பெண்கள் இன்று மற்றவர்கள் விழி உயர்த்தி வியப்பினை வெளிப்படுத்தும் ஒரு உன்னத வெற்றியாளர்களாக பரிணமித்திருக்கின்றார்கள்.

ஆனால் எமது தேசத்திலேயே நெஞ்சில் வலிகளைச் சுமந்து கொண்டு கணவனை இழந்து தனியே தவித்தும் தன்னைத்தான் வாழவைத்துக்கொண்டும் தன்னைப் போன்ற பல பெண்களையும் வாழ வைத்தும் எமது தேசத்தின் ஒரு அடையாளம் தான் திருமதி கிருஷ்ணதாஸ் சாயிராணி என்கிற ஒரு பெண் முயற்சியாளர். அவரைப்பார்த்து ஆச்சரியப்படாதவர்களே இல்லை. அவ்வாறு தன்னை வியாபார உலகில் நிலை நிறுத்திக்கொண்ட ஒரு பெண் சாதனையாளர்...

2009 ஆம் ஆண்டு நடந்த கடுமையான யுத்தத்தினால் சாயிராணியின் கணவன் குண்டுகளில் அகப்பட்டு நந்திக்கடலில் பிணமாகச் சரிய அவரின் தோளில் கிடந்த பையை மட்டும் கழற்றிக்கொண்டு அழக்கூட திராணியற்று மகனை ஒரு கையில் இறுக்கிப் பிடித்துக் கொண்டு பிணத்திடம் நின்று பிராணவாயு தடைப்பட கத்திக்குழறக்கூட முடியாமல் சாயிராணி மகனுக்காக தப்பி ஓடுகிறாள்.

2012ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்தும் திட்டத்தில் புதுக்குடியிருப்பில் மீள்குடியேற்றப்பட்டால் சாயிராணிக்கு 25,000 ரூபா மீள்குடியேற்ற நிதி அரசாங்கத்தினால் வழங்கப்பட்டது. அந்த 25,000 ரூபாவை மூலதனமாகக் கொண்டு தறப்பாள் கூடாரம் ஒன்றை அமைத்து தனது தாயுடனும் மகனு டனும் ஏலக்காய்த்தூள், மஞ்சள் தூள் போன்ற பொருட்களைத் தயாரித்து விற்கத் தொடங்கினார். தனது வாழ்வாதாரமான மிக்சர் தொழிலை ஆரம்பித்து பொதி செய்து அவற்றை சைக்கிளில் கொண்டு சென்று விற்று வந்தார்.

தனக்கென ஒரு வாகனத்தை கொள்வனவு செய்து அதில் தனது வியாபாரத்தை தொடர வேண்டும் என எண்ணினார். (SOFA- என்னும் ஒரு அரச சார்பற்ற நிறுவனத்திடம் உதவி கோரினாள். உதவி கிடைத்தது. அந் நிறுவனம் 50,000 ரூபாவினை ஆரம்பக்கட்டுப் பணமாகச் செலுத்தி 4 வருடங்கள் வாடகைக் கொள்வனவு அடிப்படையில் முச்சக்கர வண்டி ஒன்றை சாயிராணிக்கு சொந்தமாக கிடைக்க உதவி செய்தது. சாயிராணி தானே ஓட்டுநராக வேண்டும் என நினைத்தார். முயற்சி செய்தாள். பழகினார். வாகன அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொண்டார். தான் உற்பத்திசெய்த பொருட்களை தனது சொந்த வாகனமான முச்சக்கரவண்டியில் வைத்து வீடுவீடாக விற்பனை செய்து வந்தார். தொடர்ந்து குழந்தைகளுக்கான ஏதும் சத்துள்ள உணவுகளை தயாரிக்க விரும்பி குழந்தைகள் விரும்பும் வெங்காயச் சுவையுள்ள பொரி உருண்டைகளை (TipiTipi) இயற்கையான உள்ளீடுகளோடு உற்பத்தி செய்ய விரும்பி வல்லாரையை கலவையாகக் கலந்து பல்வேறு முயற்சிகள் செய்தார். ஒன்றும் கிடைக்கவில்லை. ஒருமுறை எண்ணெய்ச்சட்டியை அடுப்பில் வைத்து விட்டு அது வெந்துவிட்டதா? என்று கண்டு பிடிப்பதற்காக அருகில் காய்ந்து கிடந்த வல்லாரைக் கலவையை விட்டுப் பார்த்தால் அது பொங்கிப் பூப்போல வந்தது. சாயிராணி சிந்திக்கத் தொடங்கினாள். இயற்கையான மென்பொரி உருண்டைகள் குழந்தைகளுக்கு எவ்வளவு ஆரோக்கியமானவை? இவற்றை சந்தைப்படுத்த வேண்டும் என ஆர்வம் கொண்டார். ஆனால் இந்தச் சிறந்த பொருளை காற்றுப்போகாமல் பொதி செய்யும் அறிவு சாயிராணியிடம் இல்லை. அவரை வழிநடத்துவதற்கும் அவரை இனங்காட்டுவதற்கும் எவரும் இல்லை. இதனால் சாயிராணி இதனை வல்லாரை அப்பளமாக மாற்றினார். அதனைப் பொதி செய்தார். விற்பனை செய்தார். விற்பனை நன்றாக நடந்தது. இந்த இடத்தில் தான் சாயிராணியை வியாபார உலகம் திரும்பிப் பார்க்கத் தொடங்கியது. தனது அப்பள உற்பத்தியில் அபிவிருத்தி செய்து கரட் அப்பளம், வல்லாரை அப்பளம், பீற்றூட் அப்பளம் என இயற்கையான போசணைக் கூறுகளை இணைத்து உற்பத்தி செய்யத்தொடங்கினார். பின்னர் வல்லாரையை சத்துமாவாக்கி குழந்தைகள் விரும்பி உண்ணக்கூடிய விதத்தில் தயாரிக்கத் தொடங்கினார்.

2013 ஆம் ஆண்டில் கொழும்பில் GIZ உம் Nuclear Foundation உம் இணைந்து நடத்திய கண்காட்சியில் கலந்து கொண்டார். இவரது உற்பத்திப் பொருளில் செயற்கை உள்ளீடுகளில் எதுவும் இல்லை என்பதை உறுதி செய்து 2 ஆம் நிலை தேசிய விருது அவருக்குக் கிடைத்தது. இந்த விருது 2014 ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதலாம் திகதி இவருக்குக் கிடைத்தது. இவ்விருதுக்குப் பின்னர் சாயிராணி பெரிதும் ஊக்கப்படுத்தப்பட்டால், மேலும் புதிய பொருட்களை அறிமுகம் செய்யவேண்டும் என்ற ஆர்வம் அவரிடம் இருந்தது. அதன்பின்னர் கரட் மற்றும் வல்லாரைச் சாறுகளைக்கொண்ட குடிபானக் கலவைகளை உருவாக்கினார். இதனால் இவரது பொருட்களைத் தேடிக் கொள்வனவு செய்வதற்கு நுகர்வோர் விரும்பினர்.

சாயிராணி மேலும் சிந்திக்கத் தொடங்கினார். எமது பாரம்பரியமான தொழில்களை மீளவும் கொண்டு வந்து உணவுகளில் எமது மண்ணின் சுவை தெரிய வேண்டும் என ஆசைப்பட்டால் தன்னைப் போன்ற 6 பெண்ணுக்கு வேலைகொடுத்து தனது பொருள் உற்பத்தியைத் தொடர்ந்தும் செய்து வருகிறார்.

தன்னைப்போன்ற 10 குடும்பங்களை இணைத்து அவர்களுக்கு உரல், உலக்கை என்பவற்றைக் கொள்வனவு செய்து கொடுத்து தனக்குத் தேவையான மாப்பொருட்களை அவர்களைக் கொண்டு தயாரித்துப் பெற்றுக்கொள்கின்றார். இதனால் தன்னைச் சார்ந்த சமூகத்திற்கு தொழில்வாய்ப்பையும் வருமானத்தையும் கொடுத்திருக்கின்றார்.

சாயிராணி தான் உற்பத்தி செய்யும் பொருட்கள் அனைத்தையும் (Sathustar) சதுஷ்ரார் என்னும் வியாபாரக்குறியின் கீழ் உற்பத்தி செய்கிறார். இவ் வியாபாரக்குறியானது அவரது மகனுடைய பெயரை இணைத்து சந்தையில் நட்சத்திரமாக, பிரகாசமாக ஔிரக் கூடிய தனது உற்பத்திகள் என்னும் எண்ண ஓட்டத்தில் உருவாக்கியுள்ளார்.

சாயிராணியின் மிக அண்மைக்கால கண்டுபிடிப்



பானது புலம்பெயர் மக்கள் வாழும் நாடுகளில் பிரபல்யமடைந்து வருவதோடு அதிக கேள்வியையும் உருவாக்கியுள்ளது. பாரம்பரியமான இயற்கை மூலிகைகளைக் கொண்டு இவர் லேகா எண்ணெய் என்னும் பொருளை உருவாக்கியுள்ளார். மக்களிடையே தற்போது நிலவுகின்ற முடி உதிர்தல், இளநரை, வழுக்கை ஆகிய பிரச்சினைகளுக்கு இவ் எண்ணெய் தீர்வாக அமைகின்றது. அறுகம்புல், பொன்னாங்காணி, வல்லாரை அகத்தி போன்ற இரும்புச்சத்து அதிகம் நிறைந்த இயற்கை இலைகளை சேர்த்து இவ்வெண்ணெய்யை உருவாக்கியிருக்கிறார்.

இப்பொருள் கண்டுபிடிப்பிற்கான உயர் விருதான மகளிர் வணிகக்கழகம் (Woman Chamber award) எதிர்வரும் ஆவணி மாதம் வழங்கவுள்ளது. இதற்கு மேலதிகமாக இவருக்கு தேசிய, மாகாண, மாவட்ட மட்டங்களில் 4 வெவ்வேறு விருதுகள் கிடைத்துள்ளன.

1)சிறந்த புதிய கண்டுபிடிப்பிற்காக தேசிய விருது.
2)சிறந்த பெண் முயற்சியாளருக்கான வட மாகாண சபை விருது
3)வடமாகாணம்-சிவகரன்
4)G/A -கண்டுபிடிப்பு வேதநாயகன்

சாயிராணி மிகவும் கடுமையான உழைப்பாளி. ஒரு பெண் முயற்சியாளர் என்னும் பெருமை கொண்டவர். எப்போதும் தன்னைப்பற்றி உயர்வாகவே எண்ணுபவர். எதற்கும் சளைக்காதவர். தேடலும் கற்பதில் ஆர்வமும் கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ வணிகபீடத்தின் வணிக முயற்சிகளுக்கான உயிரூட்டல் மையத்துடன் இணைந்து கொண்டு அதனால் வழங்கப்படும் பயிற்சிகளில் ஆர்வத்தோடு பங்குபற்றுவார். கண்காட்சிகள் நடைபெறும் இடங்களில் தனது முச்சக்கரவண்டியில் புதுக்குடியிருப்பில் இருந்து பொருட்களோடு வந்து அவற்றைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்து விட்டுச் செல்வார். மிகவும் முயற்சியும் தொழிலார்வமும் கொண்ட சாயிராணியைப் போன்ற பலர் எம் தேசத்தில் இருக்கிறார்கள். இவர்களுக்காக நாம் எம்மால் இயன்ற உதவிகள், ஆதரவுகளை வழங்க வேண்டும்.

கலாநிதி சிவாணி சண்முகதாஸ்
சிரேஷ்ட விரிவுரையாளர், சந்தைப்படுத்தல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சினிமா செய்தி



# இத்தனை வருடம் பின்னோக்கி செல்கின்றாரா தனுஷ்?



தனுஷ் எப்போதும் வித்தியாசமான கதாபாத்திரங்களாக தேர்ந்தெடுத்து நடிப்பவர். இவர் அடுத்து மீண்டும் தன் பேவரட் கூட்டணி வெற்றி மாறனுடன் இணைந்து வடசென்னை படத்தில் நடிக்கவுள்ளார்.

இப்படம் மூன்று பாகங்களாக எடுக்கப்படுகின்றதாம். இதில் முக்கியமான ஒரு ரோலில் விஜய் சேதுபதி நடிக்கின்றார்.

இந்தப் படம் 1976ல் நடப்பது போல் கதையம்சம் கொண்டதாம். இதனால், கிட்டத்தட்ட 40 வருடங்களுக்கு முன் உள்ள சென்னையை செட் அமைத்து வருகிறார்களாம். தனுசும் தன் கெட்டப்பை அதற்கு ஏற்றாற்போல் மாற்றி வருகிறார்.


# வட இந்தியாவை அதிர வைத்த கபாலி வசூல்- அதிர்ச்சியில் பொலிவுட்

கபாலி உலகம் முழுவதும் பல வசூல் சாதனைகளை படைத்து வருகிறது. கபாலி ஹிந்தி வெர்ஷன் அமெரிக்காவிலும், மலாய் வெர்ஷன் மலேசியாவிலும் ரிலீஸாகவுள்ளது.

இந்நிலையில் கபாலி வட இந்தியாவில் மட்டும் ரூ 40 கோடி வசூல் செய்துள்ளதாம், இவை பிரமாண்ட ஓப்பனிங் என்று பொலிவுட் பொக்ஸ் ஒபிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், ஒரு சில பொலிவுட் படங்களே கபாலிக்காக அடுத்த வாரம் வரை ரிலீஸ் தள்ளி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சந்தானம், கௌதம் மேனனா? இது என்ன புதுக்கதை?



தமிழ் சினிமாவில் காமெடியனாக அறிமுகமாகி தற்போது ஹீரோவாக வெற்றி பெற்றவர் சந்தானம். இவர் நடித்த தில்லுக்கு துட்டு ரூ 25 கோடி வரை வசூல் செய்துவிட்டது.

இந்நிலையில் இப்படத்தை தொடர்ந்து இவர் சர்வர் சுந்தரம், செல்வராகவன் இயக்கும் ஒரு படம் என வரிசையாக நடித்து வருகிறார்.

தற்போது வந்த தகவலின்படி அடுத்து கௌதம் மேனன் இயக்கும் ஒரு படத்திலும் சந்தானம் நடிப்பதாக முடிவெடுத்துள்ளாராம், இதுகுறித்து விரைவில் தகவல் வருமாம்.

# அஜித்திற்காக மற்றொரு முன்னணி நடிகரின் படத்தில் நடிக்க மறுத்த காஜல்



காஜல் தென்னிந்தியாவில் பல முன்னணி நடிகர்களுக்கு ஜோடியாக நடித்து விட்டார். இவருக்கு அஜித்துடன் நடிக்க வேண்டும் என்பது நீண்ட நாள் ஆசை.

இந்நிலையில் அஜித் அடுத்து நடிக்கவிருக்கும் படத்தில் இவரை ஹீரோயினாக கமிட் செய்துள்ளனர், ஆனால், அதே நேரம் விக்ரமிற்கு ஜோடியாக கருடா படத்திலும் நடிக்க கமிட் ஆகியுள்ளார்.

அஜித்தா? விக்ரமா? என யோசித்து அஜித்தை பைனல் செய்துள்ளார் காஜல்.இதன் மூலம் விக்ரம் படத்தில் காஜல் தொடர்வாரா? இல்லை நீக்கப்படுவாரா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.



# மனிதக் காட்சிச்சாலை

அரோகரா ஒலி வானைப் பிளக்கிறது. நல்லூர் சுற்றாடலே பக்தியில் நிறைந்திருக்கிறது. கந்தனின் அழகைக் காண , அவனருள் பெற புலம் பெயர் தமிழர்களும் ஏணைய பக்தர்களுமாக எள் எண்ணெய் ஆகுமளவு சனக் கூட்டம் நிரம்பி வழிகிறது. பலதரப்பட்ட வியாபாரிகளும் உற்சாகத்தோடு தமது பொருட்களை விற்பனை செய்கின்றனர். சனத்திரளுக்கு நடுவே அரைக்காற்சட்டை பெனியனுடன் காதில் ஒற்றைத் தோடு அணிந்த ஒரு புலம்பெயர் தமிழன் தன் மனைவியைக் கையிற் பிடித்தவாறு கச்சான் கடைகளை நோக்கி வந்தான். விற்பனைக்கெனக் குவிக்கப்பட்டிருந்த பட்டுப் புளியை அவனது மனைவி எடுத்து, முன் பின் தெரியாதது போல் பார்க்க அந்த இளைஞனும் இது என்ன? என வியாபாரப் பெண்ணைக் கேட்டான். இது தான் உன்ரை அம்மா விற்ற பட்டுப் புளி. இவைகளை இந்த வெயிலுக்கை இருந்து விற்றுத் தான் உன்னை வளத்த வா. உன்ரை அம்மாவையே மறந்த நீ இதை மறக்கமாட்டியோ என ஆத்திரத்துடன் பொரிந்து தள்ளினால் அப்பெண்மணி.

இளைஞன் சற்றும் எதிர் பார்க்கவில்லை. முகம் ஒடிக் கறுக்க அவ்விடத்தை விட்டு மின்னலென மறைந்தான். மறந்து விட்ட தன் தாயை சிந்தனையோட்டத்தோடு தேடலானான். பெற்ற தாயைத் தவிக்கவிட்ட கொடுமையை எண்ணி வருந்தினான். தெரிந்த இடம், இன சனம் எல்லோரிடமும் தாயைப் பற்றி விசாரித்தான். இறுதியில் முதியோர் இல்லமொன்றை நோக்கி விரைந்தான். பாதுகாப்பு உத்தியோகத்தரின் அனுமதியுடன் முதியோர் இல்லக் காரியாலயத்தினுள் நுழைந்து அங்கிருந்த முகாமையாளரிடம் ராஜலக்சுமியை பார்க்க வேணும் என்றான். தம்பி எத்தனை ராஜலக்சுமி இங்கு உள்ளனர்.எந்த ராஜலக்சுமி எனக் கேட்டார். முகாமையாளர் ராஜலக்சுமி சுப்பிரமணியம். அவர் என் அம்மா என்றதும், வசதி படைத்தவனாய் இருக்கிறீர் ஏன் அம்மாவை முதியோர் இல்லம் அனுப்பினீர்? என்றவாறு பதிவேட்டில் ராஜலக்சுமியைத் தேடினார்.

பின்னர் உள்ளே சென்று ஐந்து வருடத்துக்கு முன்னரான பதிவேட்டினை எடுத்து வந்து தேடினார்.அந்த இளைஞனும் குற்ற உணர்வுடன் தாயைப் பார்க்கும் வாஞ்சையுடன், அவர் முன்னே காத்திருக்கிறான். நீண்ட தேடுதலின் பின் தலை நிமிர்ந்த முகாமையாளர் தம்பி மன்னிக்கவும் ராஜலக்சுமியைப் பார்க்க முடியாது என்று சொல்லி விட்டு வெளியே சென்றார். அந்த இளைஞனோ அழுதவாறு அவ்விடத்திலேயே உட் கார்ந்திருந்தான். மீண்டும் அங்கு வந்த முகாமையாளரிடம் அம்மாவைப் பார்க்க வேணும் என கெஞ்சி மன்றாடினான். அவரோ வாயடைத்து மௌனமாய் இருந்தார். அவனது அழுகை, முகாமையாளரின் வார்த்தைகளை தொடர்ந்து சில நிமிடங்கள் நிசப்தம் குடிகொண்டது. மீண்டும் அவன் , ஐயா அம்மாவை பார்க்க வேணும் என கெஞ்சினான். இப்போது ராஜலக்சுமி இங்கு இல்லை என்ற முகாமையாளரின் குரலை தடுத்து நிறுத்தி, இல்லை அம்மா இங்கே தான் இருக்கிறார் என கூறி கதறி அழுதான்.

ராஜலக்சுமி பத்து வருடங்களுக்கு முன்னரே எங்களது இல்லத்தில் சேர்ந்தார். அப்போது அவரது உடல் ஆரோக்கியமாக இருந்தது.இந்த இல்லத்தில் பல தொண்டுகள் செய்து, சந்தோசமாக வாழ்ந்தவர் திடீர் என பக்கவாத நோயால் பீடிக்கப்பட்டு கடந்த ஆறுமாதங்களாக படுக்கையாகிவிட்டார்.நாங்களும் எங்களால் முடிந்த வைத்தியம் செய்தோம்.மூன்று நாட்க்ளின் முன்னர் இறந்து விட்டார் என்கிற முகாமையாளரின் கதையை பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த அந்த மகன் பலமாகக் கத்தினான்.

**சிறுகதை**

அம்மா இறந்துவிட்டாவா? நான் பாவி என தன் வேதனையை வார்த்தைகளில் கொட்டினான். ஐயா அம்மாவை அடக்கம் செய்த இடத்தையாவது ஒரு தடவை பார்க்கலாமா? என கெஞ்சினான். முடியாது என்றவர் ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினார். ஆவலோடு பிரித்துப் படித்தான்.

இல்ல நிர்வாகத்துக்கு,

நான் ஒரு அநாதை.இந்த இல்லத்தில் சாகும் வரை மகிழ்வுடன் இருந்து என்னால் இயன்ற தொண்டுகளைச் செய்தேன். சில வேளை நோய் வாய்ப்பட்டாலோ, இறந்தாலோ யாரையும் என்னைப் பார்க்க அனுமதிக்க வேண்டாம். இல்ல நிர்வாகமே அமைதியாக இறுதிக்கிரியைகளை செய்யும் படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.-ராஜலக்சுமி- என தன் கையால் எழுதிய கடிதம் அது. கடிதத்தை வாசித்த அந்த மகன் வாயடைத்து நின்றான். கண்களோ அவன் அனுமதியின்றி நீரைச் சொரிந்தது. எதுவுமே பேச திராணியற்றவனானான்.

பெற்ற தாயை மறந்தவனுக்கு சமூகம் கொடுக்கும் தண்டனையா இது? என உள்ளூரப் புழுங்கினான். பெற்ற தெய்வத்தை மறந்து முருகனை தரிசிக்க வந்ததை ஏற்க முடியாமல் முருகன் சந்நிதானத்தில் குற்றவாளியாக நின்றதை நினைந்து அழுதான்.கஷ்டப்பட்டு வளர்த்த தாயை கடைசிக் காலத்தில் கஷ்டப்படுத்தி விட்டதை உணர்ந்தவனாக மெது மெதுவாக வெளியே வந்தான். முதியோர் இல்லத்தை தன் கண்களால் சுற்றிப் பார்த்து தன் தாய் வாழ்ந்த இடம் என ஆறுதல் கொண்டவனாய் ஒரு நடை பிணமாக நடக்கத் தொடங்கினான். அவன் முன்னே ஒரு அழகான வசனம் ஒளிர்ந்து கொண்டிருந்தது. இது ஒரு அழகிய மனித காட்சிச் சாலை. இங்கு பால் குடித்த பல மிருக ஜீவன்கள் வந்து போகின்றன. கண்களை மூடி அந்த வசனத்தை ஆமோதித்தான்.உண்மையில் தன் தாயிடம் பால் குடித்த மிருகம் என்பதை உணர்ந்து கொண்டான். சுடலை ஞானம் பிறந்து என்ன பயன் ? காலம் கடந்து விட்டால் திரும்பப் பெற முடியாது. காலம் பதில் சொல்லும் என்பார்கள். கண்ணீரையும் பதிலாக தந்து விடும் திறன் கொண்டது. காலம் கல்லில் செதுக்கிய சிலையை விட கருவில் சுமந்தவளே தெய்வம். அவள் பாதம் தொழ மறுத்தால் நடை பிணமாவது யதார்த்தம். பணம் இருந்தென்ன வசதிகள் பல இருந்தென்ன குடியிருந்த கோயிலை கும்பிட மறுத்தால், என்றோ ஒரு நாள் குற்ற உணர்வால் சாக வேண்டி வரும். பெற்ற தாயை அநாதையாக்குபவர்கள் இந்த உலகின் முன் வெட்கித் தலை குனிவர்.

உடுவிலூர் கலா

# facebook

## மாட்டிக்கிட்டியா



ஒரு நாதஸ்வரக்காரனும், ஒருபெட்ரோமாக்ஸ்க்காரனும் நண்பர்களாக இருந்தனர். இருவரும் சில விழாக்களில் சேர்ந்து போவர்,சேர்ந்து வருவர். பெட்ரோமாக்ஸ் விளக்கால் இரவைப் பகலாக்குவான் ஒருவன். மற்றொருவன் நாதஸ்வரத்தால் விழாவ்வை நாதவெள்ளத்தில் மிதக்க வைப்பான்.

ஒருநாள் இருவருக்கும் சண்டை வந்தது.ஒருவரை ஒருவர் திட்டித் தீர்த்துக் கொண்டனர். எனவே, எந்தவொரு விழாவுக்கும் இருவரும் சேர்ந்து இணைந்து செல்வதில்லை. ஒருவன் முன்னாலும், மற்றவன் பின்னாலும் செல்வர்.

ஒரு விழாவில் பெட்ரோமாக்ஸ்காரன் முந்திக் கொண்டான். விழாக்குழுவினர், நாதஸ்வரக்காரன் எங்கே? என்று கேட்டனர்.

அவர்களிடம், அதை ஏன் கேட்கிறீங்க? அவ்ன் ஒரு விழாவுக்கு ஊதி விட்டு வெத்துக் குழலோடு வருவான். வேணுமுன்னா குழலை வாங்கிப் பாருங்க தெரியும்! என்று தூண்டி விட்டான்.

விழாக் கமிட்டியார் சோணங்கிகள் விபரம் இல்லாதவர்கள். நேரம் ஆகிக் கொண்டேபோனது. அவர்களுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. நாதஸ்வரக்காரன் வரட்டும் என்று காத்திருந்தனர். கடைசியில் நாதஸ்வரக்காரன் வந்தான். அவனிடம் அவர்கள் ஊதுகுழலை வாங்கிப் பார்த்தனர்.

உள்ளே ஒன்றும் இல்லாமல் இருந்தது. விரலை விட்டு நன்றாகத் தடவிப் பார்த்தனர். உள்ளே ஒன்றும் இல்லை. அவர்களின் கோபம் அதிகரித்தது. நாதஸ்வரக்காரனை நன்றாக உதைத்துவிட்டனர். எல்லோரும் சேர்ந்து செம்மையாக மொத்து மொத்து என்று மொத்தினர். பாவம் நாதஸ்வரக்காரன். "என்ன ஏதென்று எதுவும் கேட்காமல் இப்படிப்போட்டு உதைக்கிறார்களே..." என்று அழுதான். இறுதியில் புரியவைத்தான் ஒருவன். ஏண்டா! எங்கேயோ போய் ஊதிட்டு இங்க வெத்துக் குழலைக் கொண்டு வாற! என்று ஏசினான்.

பெட்ரோமாக்ஸ்காரன் இவனைப்பார்த்துக் கள்ளமாகச் சிரித்தான். நாதஸ்வரக்காரனுக்கு பிறகுதான் புரிந்தது. இது பெட்ரோமாக்ஸ்காரன் வேலையென்று. மனசுக்குள் கறுவிக் கொண்டான், "இரு இரு உன்னை ஒருநாள் பழிவாங்கி விடுகிறேன்..." என்று.

ஒருநாள் பழிவாங்கும் சந்தர்ப்பம் வந்தது. ஒரு விழாவில் இருவரும் ஏற்பாடாகி இருந்தனர். அந்த விழாவிற்கு பெட்ரோமாக்ஸ்காரன் பிந்தி வந்தான். ஊதுகுழல்காரன் முந்திக் கொண்டான். அவ்விழாக் கமிட்டியர் பெட்ரோமாக்ஸ்காரனைப் பற்றி விமர்சித்தனர். நாதஸ்வரக்காரனுக்கு மகிழ்ச்சி.

பழிவாங்கும் ஆசையால், அதுவா அது ஏன்கேக்கிறீங்க? அவன் ஒரு ஏமாத்துக்காரன். அவன் பக்கத்தூரு விழாவுக்கு எல்லாத்தையும் எரிச்சுட்டு, வெத்து விளக்கை கொண்டு வருவான். வேணுமானா வந்ததும் பத்த வைக்கச் சொல்லுங்க அது புஸ்புஸ்ங்கும்! என்றான்.

சிறிதுநேரஞ் சென்று பெட்ரோமாக்ஸ்காரன் வந்தான். விளக்கை பற்ற வைத்தான். புஸ்புஸ் என்றது. விழாக்கமிட்டியாருக்கு அவன் பிந்தி வந்ததால் வேறு கோபம் வந்தது. விளக்குக்காரனைப் பிடித்து நன்றாக உதைத்தனர். இவன் விடயம் புரியாமல் விழித்தான். அடி பொறுக்காமல் அழுதான்.

எங்கேயோ கொண்டு போயி விளக்க எரிச்சுட்டு வெத்து விளக்கையா கொண்டு வாற... ஏண்டா புஸ் புஸ்ங்குது? என்று மீண்டும் உதைத்தனர். நாதஸ்வரக்காரனின் நமட்டுச் சிரிப்பைக் கண்டதும் பெட்ரோமாக்ஸ்காரனுக்கு விடயம் புரிந்தது. தலையைக் குனிந்து கொண்டான்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 795

Search for people, places and things — Nagendram Home

### துவா ஜெகன்



செத்தாண்டா சேகரு...

### கோகுல் கோபி

வேறொருவரை திருமணம் செய்திருக்கலாம், என்ற எண்ணம் ஒருமுறைக் கூட வராத திருமண வாழ்க்கை தான்..... காதல் நிறைந்த வாழ்க்கை..!!!




### வின்ஜக்சன்



இவன் கால் வலிக்க டான்ஸ் ஆடி வாய்வலிக்க பாட்டு பாடினாதான் மாஸ்..




இவன் வாய்வலிக்க கத்தி கால் வலிக்க ஓடுனாதான் மாஸ்.



நம்ம தல வந்து நின்னாலே மாஸ்.

### நட்புடன் சதீஸ்




### சேயோன் கணேசமூர்த்தி

வேஷம் இல்லாத உண்மையான அன்பு தான் இந்த உலகத்தில் எல்லா நோய்களுக்கும் மருந்து.

அந்த அன்பே பொய்யானால், உலகில் அதை விட கொடிய நோய் வேறு எதுவும் கிடையாது.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 44

## ஆஸ்துமாவுடனும் நீங்கள் ஆரோக்கியமாக வாழ்ந்திட...



உங்களுக்கு தொடர்ச்சியான இருமல், மூச்சு விடுவதில் சிரமம், மூச்சுவிடும் போது ஒலி ஏற்படுதல் (Wheezing) போன்றவற்றிற்கு அடிப்படையான காரணமாக அமைவது ஆஸ்துமா (Asthma) என்று சொல்லப்படும் ஒரு நிலை ஆகும்.

இது சுவாசக்குழாய்களைப் பாதிக்கும் ஒரு பிரச்சினையாகும். இது சுவாசக்குழாய்களின் உட்சுவரில் அலர்ச்சி / ஒவ்வாமை ஏற்படுத்தும் பொருட்களால் உண்டாகும் தாக்கம் காரணமாக ஏற்படுகிறது.

இதனால் சுவாசக்குழாய்களின் உட்சுவரின் சுற்றளவு குடைவடைகின்றது. இவ்வாறாக சுருக்கமடைந்த சுவாசக்குழாயினூடாக வழியானது செல்லும் போது மூச்சிறைப்பு / இழுப்பு (Wheezing) எனும் ஒலி ஏற்படுகின்றது.


அத்துடன் மூச்சு விடுதலில் சிரமம், இருமல் மற்றும் மார்புப்பகுதியில் இறுக்கம் போன்றன ஏற்படுகின்றது. இந்த அறிகுறிகள் குறிப்பாக இரவு மற்றும் அதிகாலை வேளையிலேயே அதிகமாகக் காணப்படும். இவை தானாகவோ சில மருந்துகளின் பாவனையின் பின்னரோ மீண்டும் பழைய நிலைக்கு திரும்புகின்றது. நீங்கள் சில முறையான பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஆஸ்துமா (Asthma) வைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்.

ஆஸ்துமா (Asthma) வைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு நீங்கள் செய்ய வேண்டியது உங்கள் Asthma வைத் தீவிரப்படுத்தும் காரணிகளைக் கண்டறிந்து அவற்றைத் தவிர்த்துக் கொள்வதாகும். நீங்களும், உங்கள் குடும்ப அங்கத்தவர்களும் இந் நோய் பற்றியும் அதனைத் தூண்டும் காரணிகள் பற்றியும் அறிந்திருப்பதாலும், அவற்றைத் தவிர்ப்பதாலும் உங்கள் ஆஸ்துமாவை (Asthma) நீங்கள் கட்டுப் பாட்டிற்குள் வைத்திருக்க முடியும்.

உங்களுக்கு சில ஒவ்வாமை ஏற்படுத்தும் பொருட்களால் ஆஸ்துமா (Asthma) தீவிரமடையலாம். உதாரணமாக தூசு, பூக்களின் மகரந்தம், பூனை, நாய் போன்ற மிருகங்களின் முடி, தூசியிலுள்ள சிறு பூச்சிகள், காற்றிலுள்ள மாசுக்கள், புகை - உதாரணமாக சிகரெட் புகை, அடுப்பு, நுளம்புச்சுருள் புகை, சில வாசனையூட்டிகள் (Perfumes). எனவே நீங்கள் இவற்றை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

வீடு, படுக்கை விரிப்பு, போர்வை போன்றவற்றை வழக்கமாக கழுவி தூசு சேராதவாறு பார்த்துக்கொள்ளவும். தூசு உள்ள இடத்தை சுத்தம் செய்யும் போது நீங்கள் உங்கள் மூக்கை துணியால் கட்டி தூசியிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம். உங்களுக்கு குளிரான கால நிலை மற்றும் குளிரூட்டப்பட்ட அறைகளால் ஆஸ்துமா (Asthma) தூண்டப்படலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வது நல்லது.

சிலவேளைகளில் மனஅழுத்தம், உணர்ச்சிவசப்பட்ட நிலை போன்றவற்றினால் உங்களுக்கு ஆஸ்துமா (Asthma) காணப்படலாம். இதற்கு தியானம், மூச்சுப் பயிற்சி போன்றன உதவியாக அமையும். நீங்கள் தொழில் புரியும் இடத்திலுள்ள சில பொருட்களாலும் ஆஸ்துமா (Asthma) தீவிரமடையலாம். உதாரணமாக மரத்தூள், சில இரசாயனப் பொருட்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு தொடர்ந்து அந்த ஒவ்வாமை ஏற்படுத்தும் பொருட்களிலிருந்து விலகிக்கொள்வது நல்லது.






Asthmatic bronchiole



Normal bronchiole

சிலவேளை தடிமன் / சளிப்பிடித்தல் போன்ற சுவாசத்தொகுதி தொற்று நோய்களும் உங்கள் ஆஸ்துமா (Asthma) தீவிரமடையக் காரணமாகலாம். எனவே இவற்றுக்கு உடனடியாக சிகிச்சை பெறுவது நல்லது.

உடற்பருமன் அதிகமாக இருப்பதும் ஆஸ்துமா (Asthma) கட்டுப்பாடில்லாமல் இருப்பதற்கு காரணமாகலாம். எனவே உங்கள் உடல் நிறையை சரியானளவில் பேணவேண்டும்.

சில மருந்து வகைகளும் ஆஸ்துமா (Asthma) வைத் தூண்டலாம். எனவே நீங்கள் மருந்து ஏதும் பாவிப்பின் வைத்தியரின் ஆலோசனையைப் பெறுவது நல்லது. நீங்கள் வைத்தியரை வேறு காரணங்களுக்காக சந்திக்கும் போதும் உங்களுக்கு ஆஸ்துமா (Asthma) இருப்பதைத் தெரியப்படுத்தவும்.

### ஆஸ்துமா (Asthma) விற்கு வழங்கப்படும் மருந்து வழியான சிகிச்சை முறைகள்.

தற்போது அநேகமான ஆஸ்துமா (Asthma) மருந்துவகைகள் மூச்சினால் உள்வாங்கப்படுபவையாக (உறிஞ்சப்படுபவை Inhaler) வருகின்றன.

இவை நேரடியாக சுவாசக்குழாய்களைச்சென்றடைந்து தொழிற்படுகின்றன. எனவே சிறிய அளவான மருந்தே இங்கு பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் இவை உடலின் ஏனைய பாகங்களுக்குச் செல்வது குறைவு என்பதனால் இதனால்ஏற்படும்பக்க விளைவுகள் மிக மிகக்குறைவாகும்.

### இம்மருந்துகள் 2 விதமான தொழிற்பாடுடையன.

Salbutamol, Tcrbutalinc போன்ற மருந்துகள் நிவாரணமளிக்கும் மருந்துகளாகும். இவை மூச்சிறைப்பு (Wheezing), மூச்செடுப்பதில் கடினம், நெஞ்சு இறுக்கம் போன்ற குணம் குறி உள்ள போது பாவிக்கப்பட வேண்டியவை. இவை உடனடியாக நோய் நிவாரணத்தைத் தருகின்றன.

Beclomethasone போன்ற (Brown நிற உறிஞ்சி) மருந்துகள் ஆஸ்துமா (Asmatha) வைக் கட்டுப்படுத்தும் மருந்துகளாகும். இம் மருந்துகள் உங்களுக்கு ஆஸ்துமா (Asthma) அறிகுறி இருந்தாலும், இல்லாவிட்டாலும் தொடர்ச்சியாகப் பாவிக்க வேண்டும். ஏனெனில் இவை தொழிற்படுவதற்கு நீண்ட காலம் எடுக்கும். இம்மருந்தை வைத்தியரின் அறிவுரைப்படி குறித்தளவு மருந்தை குறிப்பிட்ட காலத்திற்குப் பாவிப்பதால் உங்கள் ஆஸ்துமா (Asthma) வைக்கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கலாம்.

நீங்கள் உங்கள் உறிஞ்சி மருந்துகளை (Inhaler) பெற்றுக் கொள்ளும் போது அவற்றின் பாவனை முறை பற்றி வைத்தியரிடம் தெளிவாக கேட்டு தெரிந்து கொள்வது நல்லது.

ஆஸ்துமா (Asthma) என்பது உங்கள் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் பாரதூரமான நோய் அல்ல. இது உங்களின் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கக்கூடிய ஒரு விடயமாகும். இதனைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதனால் நீங்கள் ஒரு சாதாரண வாழ்க்கையை மகிழ்ச்சியாக அனுபவிக்கலாம்.

Dr. திவாகரன் சிவமாறன்
யாழ். போதனா வைத்தியசாலை

**மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.**